Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 | வெள்ளி - 47 | 21 - 27 - சனவரி - 2005



## முடக்கி விடப்படும் தேசத்தின் வளங்கள்

## சுனாமியின் அநாதைகள்?

## புலம் பெயர்ந்தவனின் பாசக் கடிதம்

என்றும் என் பாசத்துக்குரிய என்னவர்களே
யான்
என்னத்தைச் சொல்ல
எதைச் சொல்ல
அதையும் எப்படிச் சொல்ல
அன்பு வணக்கம் சொல்லவா
இருண்டு கனத்த இதயத்தோடுள்ள உங்களுக்கு
ஆறுதல் வணக்கம் சொல்லவா அல்லது
ஆழிப் பேரலை அள்ளிச் சென்ற
என் உடன் பிறவா உறவுகளுக்கு
இரங்கல் வணக்கம் சொல்லவா. இல்லை
ஈழத்துக் கரையோரங்களில் எமது
தாயகத்துக் காவலராய்க் கண்காணிப்பாளராய்
இரவு பகலென்று பாராது விழித்துக் காத்திருந்தவர்களே...!
எதிரியின் வரவைக் குறிப்பாய் உணர்த்தி நின்றவர்களே!
நேரம் காலமின்றிப் போராளிகளுக்கு உணவு
சமைத்தவர்களே
அவர்களை உங்கள் மடியேந்திப் போற்றியவர்களே
தானைத் தலைவன் தடியேந்திய காலந் தொட்டுக்
காப்பரணாய்ப் போர்ப்பறையாய்ப் பதுங்கு குழியாய்
நின்றவர்களே...!
வீரவேங்கைகளை உங்கள் மனதேற்றித்
துதித்து நின்றவர்களே! இதற்கெல்லாம்
நன்றி வணக்கம் சொல்லவா...?

யான்
என்னத்தைச் சொல்ல
எதைச் சொல்ல
அதையும் எப்படிச்சொல்ல

நாம்
தமிழரெல்லோரும் அழுதோம்.
நன்றாய் அழுதோம். கடைசிச் சொட்டுக்
கண்ணீர் உள்ளவரை அழுதோம்.
இனிமேலும் நினைந்து நினைந்து
இடையிடையே அழுவோம்.!
ஆனால், ஆனால், சரிந்துவிடுவோம் அல்லோம்
அழுவோம் ஆனால் சோர்ந்து விடுவோமல்லோம்
அழுகையின் முடிவில் எழுவோம்
அந்தக் கரும் பனைமரம் போல் நிமிர்ந்து நிற்போம்.
இனியெம் வினையென்ன செய்யும் பணியென்ன
கூரிய சிந்தனையால் நேர் கொண்டு பார்ப்போம்
குறி தவறோம் செயலில் இறங்குவோம்.

நாம் யார்...?
நாம் தமிழர்!
நடந்ததை அஞ்ஞானக் கண்கொண்டு
தாயே கடல் தாயே
ஏன் இந்த வஞ்சனை! ஏனிந்தக் கோபம்...!
ஏனிந்தச் சாபம்...!!!
யாம் என் செய்தோம் பாவம்.
ஏனிந்தக் கொடூரமென மாரடிப்போமா
இல்லை.
மெஞ்ஞானக் கண்கொண்டு
இறைவா ஏனிந்தச் சோதனை
நாமென்ன குற்றம் செய்தோமென
இரு கையேந்தி கையறு நிலைபோல்
வானம் பார்த்திருப்போமா...?
இல்லை...!
விஞ்ஞானக் கண்கொண்டு
பூகோளமறிந்து அதன் செயற்பாடுணர்ந்து
இன்றும் அதன் மையம் நெருப்புளதென்றுணர்ந்து
புவித் தகட்டு அசைவுகள்
கடல் தகட்டு உரசல்கள்
விண்வெளிக் கற்களின் மோதல்களென
இன்றல்ல நேற்றல்ல
புவியின் பிறப்பு முதல் கொண்டு
ஆழிப் பேரலையென்றும் எரிமலையென்றும்
பூகம்பமென்றும்
பற் பல நிகழ்வுகளால் கொள்ளை போன
மக்களும் உயிரினங்களும் தேசங்களும்
தமிழனின் பேரறிவுச் சரித்திரச் சான்றுகளும்
பூம்புகார் குமரிக்கோடு காவிரிப்பூம்பட்டினமென
தமிழன் திறத்தின் புகழ் பாடிய
கல்வெட்டுக்கள், ஓலைகள் என எத்தனையோ
அத்தனையும் கடலடி சேர்ந்தன என்றிலாது
புவியின் இறப்புவரை இது தொடர் கதையெனவறிந்து
தற்காப்பெதுவெனத் தேடிச்
செயற்படுவோமா...?

விதி கால் மதி முக்கால் என்றார்
எம் முன்னோர்.
மதியோ விதிதனை வெல்லும் என்றார்
பெரு முயற்சியுடையோர்.
முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்
என்றே பகன்றான் வெற்றியின் உச்சம் கண்டோன்.

கருணையூர் நந்தி
மெல்பன் – அவுஸ்திரேலியா

## கார சாரம்

# மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்

"சுனாமி"நிவாரணப் பணிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து உதவிகள் வந்தவண்ணமிருக்கின்றன. இதை மிக லாவகமாகக்கையாளும் இலங்கை அரசு, காலி , மாத்தறை, தங்காலை, கொழும்பு, அம்பாறை போன்ற இடங்களுக்கு இவற்றை வழங்கிக்கொண்டிருக்க இவற்றை அரசு சார்ந்த பத்திரிகைகள் அமர்க்களமாகப் படம் போட்டுக்கொண்டிருக்கின்றன.

1505இல்- டீ அல்மெய்டா வந்த கப்பல் கோவையை நோக்கிப பயணம் மேற்கொண்டது. கடற்புயலில் கப்பல் அகப்பட்டுச் சிதையுண்டுபோக இலங்கைக் கடற்கரையில் ஒதுங்கினான் போத்துக்கேயத் தளபதி. இவனைத் தொட்டு இலங்கையுள் நுழைந்தது போர்த்துக்கேயப்படை. தொடர்ந்து தென்கிழக்காசியாவை வளைத்துப் போட்டுக்கொண்டு கொள்ளையடித்தது. அதைத்தொடர்ந்து செய்வதற்கு வசதியாக இலங்கை அரசின், சகோதரச் சண்டை அமைந்தது. கூடிப் பிறந்த சகோதரர்கள் தமக்குள் பேசித்தீர்க்கமுடியாத, விரும்பாதநிலையால் நாடு முழுவதையுமே அந்நியருக்குத் தாரை வார்த்தனர். தொடர்ந்தும் அவர்களை அனுப்ப ஒல்லாந்தர், ஒல்லாந்தரை அனுப்ப ஆங்கிலேயர் வரவேண்டியதாயிற்று.

ஆங்கிலேயரின் முடிவு ஹிட்லரின் நடவடிக்கைகளால் ஏற்பட்டது. இதில் காந்தி வெறும் சாந்திதான். இலங்கையைப் பொறுத்தவரை "போகாதே போகாதே என்கணவா" தான்.

இந்நிலை 1972 வரை நீடித்தது. இதையெல்லாம் ஏன் இப்போது சொல்கிறேன் என்றால்.... "வரலாறு என்பது ஒரு சக்கரம்" என்ற ஓர் ஆய்வறிஞரின் கருத்து நினைவுக்கு வந்ததால் தான். அது ஏன் இப்போது நினைவுவந்தது என்றால் டீஅல்மெய்டாவைக் கரையொதுக்கிய கடலலை, இப்போது அமெரிக்கப் படைகளையும் கரையொதுக்கி இந்தியப்படைகளையும் சேர்த்தொதுக்கியுள்ளதுதான்.

பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர், உத்தரப்பிரதேசம் என்றும் கார்கீல், திபெத், என்றும் தன்னைச் சீர் செய்யமுடியாத இந்தியா இலங்கைப் பிரச்சினையை எட்டிப் பார்க்கிறது.

தமதூரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களை இன்னமும் கரைசேர்க்கவில்லை. அயல்நாடுகளுக்குக் கப்பல்கள் போகின்றன.

'சுனாமிவரும்' என்ற தகவலை முன்னரே அறிந்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்திருந்த 'டியார்கோர்ஜியா' என்ற தவின் அமெரிக்க இராணுவத்தளம் (மிதக்கும் இராணுவக்கப்பல்' என அழைக்கப்படும்) பாதுகாப்பான இடத்துக்கு ஒதுக்கப்பட்டுவிட்டது. ஆனால், இந்துசமுத்திரப் பிராந்தியத்தை தனது கட்டுக்குள் கொண்டுவர தனக்குள்ள சாத்தியப்பாடுகளை உறுதி செய்ய இந்த சுனாமி அனர்த்தத்தை பயன்படுத்த ஏற்கெனவே திட்டமிட்டு விட்டது. சாமர்த்தியமாக வந்தும் சேர்ந்து விட்டது. அமெரிக்கப்படை.

பேச்சுவார்த்தைகளில் நாட்டமின்றி நாலடியும் நகரமாட்டோம எனப்பிடிவாதமாக நின்ற சிங்களப் பேரினவாதம் பாவம். வேட்டியைக் காப்பாற்றுவதாக எண்ணி கோவணத்தையும் இழக்கப்போகிறது.

உண்மையில் சுனாமி பேரழிவு தமிழீழப்பகுதிகளையே அதிகமாகத் தாக்கியுள்ளது. எனினும் எங்கள் பகுதிக்குள் வருவதற்கு எந்த வெளிநாடுகளும் முயலவில்லை என்பது ஒரு உண்மை. உள்ளூர் வெளியூர்த் தொண்டு நிறுவனங்களே பெருமளவு உதவிகளைச்செய்து வருகின்றன. இவை தமிழீழத்தை தனிநாடாகக் கருதி ஒதுக்கியுள்ளன. மக்களால் திரட்டி அனுப்பப்பட்ட பொருட்களில் நூற்றிஐம்பது (லொறிகள்) பாரஊர்திகள் கடத்தப்பட்டு அவை பாதிக்கப்படாத பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டன என்ற செய்திபெருமளவில் அடிபட்டது. 'அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி' ஆயிரத்துத் தொளாயிரத்து அம்பத்தெட்டு முதல் இன்று வரை அடித்துப் பறிப்பதையே வழக்கமாகக்கொண்ட சிங்கள இனவாதிகளுக்கு இது ஒன்றும் புதியதல்லவே. காலங்காலமாக திருட்டு, கொள்ளை, கொலைபோன்ற செயல்களில் ஈடுபட்டு சிறைக்குச்சென்றுவரும் பழைய பழகிய குற்றவாளிகளே மறுவாழ்வு என்றபெயரில் தமிழர் தாயகத்திலும் அதைஅண்டிய பகுதிகளிலும் குடியேற்றப்பட்டனர். காரணம் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்க இலங்கை அரசு கண்ட வழி இது. ஒன்று அவர்கள் உழைத்துப் பிழைக்க முடியாவிட்டாலும் முயலாவிட்டாலும் தமிழர்களை அடித்துப் பறிக்கத் தயங்கமாட்டார்கள். அடுத்தது அவர்களை மீண்டும் சிறைகளில் போட்டு அரசாங்கக் கயானாவை செலவிடத்தேவையில்லை. அடுத்தது தமிழர்களை ஒரு அச்சத்துள் வைத்திருந்து அவர்களாகவே குடிபெயரச் செய்தல்.

இந்த முயற்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது 'சுனாமி' நிவாரணப்பணிகளை இராணுவத்திடம் கையளித்தமை. என்ன இதில் வியப்பு- அவசரமோ அவசியமோ இல்லாமலே அவசரக் கால நிலையைப் பிரகடனம் செய்த அம்மையார் மூன்று உயர் அமைச்சுப் பதவிகளைப் பறித்து ஐ.தே.கட்சி அரசைக் கவிழ்த்து ஆண்டு தோறும தேர்தல்களை நடாத்தி ஏறக்குறைய ஒரு 'மாதனமுத்தா' அரசை நடத்தி வருவது உலகறிந்த உண்மை. இப்போது சிவில் நிர்வாகத்தை இராணுவத்திடம் ஒப்படைத்ததன் மூலம் மீண்டும் தமது நாடு அவசரகால நிலையுள் இருப்பதை உறுதிசெய்துள்ளார். வந்திருக்கும் அயல்நாட்டு இராணுவத்தைக் கட்டுப்படுத்தும் சக்தி இலங்கை இராணுவத்துக்கு கொடுக்கப்பட்டுள்ளதா? அல்லது இலங்கை இராணுவத்தைக் கட்டுப்படுத்தும் சக்தி வந்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா? அம்மையாருக்கே வெளிச்சம். நாட்டின் சிவில் நிருவாகத்தை அரசாங்க அதிபரும் அவருடைய நிர்வாகமும் இப்போது செய்யவில்லை என்றால், பெரும் மோசடிகள் நடக்கும் என்பதில் ஐயம் என்ன. கடலோரங்கள் எங்கும் நிர்மாணிக்கப்பட்டிருந்த காவலரண்கள் முகாம்கள் அனைத்தும் கடல் கொண்டு போய்விட்டது. மீள அவற்றை நிர்மாணிக்கும் செலவும் இந்த உதவி நிதியிலேயே நடக்கப் போகிறது.

இந்த நிலையில் மக்கள் என்ன செய்யப்போகிறார்கள். இன்னும் ஓர் ஆண்டே பாக்கியுள்ள சனாதிபதி ஆட்சியை வைத்து சனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கவும் இனப்பிரச்சினையைத்தீர்க்கவும் வழி செய்தாகவேண்டும். தவறினால்... மீண்டும் ஒரு சனாதிபதித் தேர்தலே நடக்கும். சனாதிபதியாக இன்னுமொருவர் பதவிக்கு வந்துவிட்டால் அவரும் இதேயளவு அதிகாரத்தைக் கொண்டுதான் இருப்பார். அப்போது கடந்தகால அராஜகங்கள் சிறைப்பட்டுவிடும். அரசு- கொண்டிருக்கவேண்டிய அதியுயர் சிறப்புரிமைகள் அனைத்தையும் பரிசீலிக்கவேண்டிய உச்ச நீதிமன்றத்தின் குப்பைகள் மீண்டும் கிண்டியெடுத்து உதறப்படும். நாற்றம் சகிக்கமுடியாமல் இருக்கும்.

மக்கள் மாக்களாக உள்ளவரைதான் இவைகள் சாத்தியமாகும். மக்கள் ஒருபோதும் சிந்திக்கத் தவறினால் எதிர்காலம் இருண்டுதான்போகும். நோட்டுக்காக வோட்டுகளை விற்றால் வருங்காலம் மக்களைக் காப்பாற்ற யாராலும் முடியாது. எங்களுடைய அரசாங்கத்தை இயலுமையுள்ள அரசாங்கமாக அமைக்கவேண்டுமாயின் தமிழர்களைப்போன்று சிங்கள மக்களும் ஒன்றுபட வேண்டும்.

அந்நிய சக்திகளுக்கு நாட்டை விற்க மக்கள் அனுமதிக்கலாமா? ஒருகாலத்தில், இந்திய அமைமதிப்படைக்கு நாட்டைக்கொடுத்துவிட்டதாகக் கொக்கரித்த ஜே.வி.பிகாரர் நூற்றுக்கும் மேற்பட்ட அரசியல் படுகொலைகளைச்செய்தனர். இதில் திரு.விஜயகுமாரதுங்காவும் அடக்கம் இன்று இவர்களே அரசின பெரும்பலம். இவர்களின்றேல் அரசில்லை என்றநிலை இப்போது மௌனமாக இருப்பதன் காரணம் என்ன? பேய் அரசு செய்தால்,

பிணந்தின்னும் சாத்திரங்கள் என்றதுபோல கதிரைகளுக்காகக் கொள்கைகளைக் காற்றில்விட்டவர்கள் இவர்கள். மக்கள் இதைப்புரிந்துகொள்ளத் தவறினால் சுனாமியலைகளை விடப்பேரலைகள் நாட்டின் உள்ளேயே வரப்போவதை யார் தடுக்கமுடியும்.

மாயா

# சுனாமியின் அநாதைகள்



சுனாமியால் லாபம் அடைந்தது யார். நட்டமடைந்தது யார் என்று கணக்கெடுக்க வேண்டிய ஒரு கட்டத்திற்கு சுனாமி அரசியல் வந்துகொண்டிருக்கிறது. எப்பொழுது சுனாமி ஒரு அரசியல் ஆகியதோ எப்பொழுது சுனாமிக்கு பிந்திய மனிதாபிமான பணிகளில் அரசியலின் விகிதச்செறிவு அருவருப்பூட்டும் அளவிற்கு அதிகரித்ததோ, அப்பொழுதிருந்தே சுனாமியின் லாபநட்டத்தை கணக்கெடுக்க வேண்டிய ஒருதேவையும் தோன்றிவிட்டது.

இதன்படி பார்த்தால், சுனாமியால் பெரும் லாபம் அடைந்தது முதலாவதாக அமெரிக்கா, இரண்டாவதாக சிறிலங்கா அல்லது . சந்திரிகா. இதில் நட்டம் யாருக்கென்றால் தமிழர்களுக்கே. இதைச் சிறிது விரிவாகப்பார்ப்போம்.

முதலாவதாக, அமெரிக்காதான் சுனாமியின் மிகப்பெரிய பயனாளி. சிறுதொகைப் பணத்தை நிதியுதவியாகக் கொடுத்ததைத் தவிர மற்றெல்லா விதங்களிலும் அதற்கு வரவுதான். ஆம், அவர்கள் தந்ததை சிறுதொகை என்றேகூறவேண்டும். அவர்களைப் பொறுத்த வரை அது மிகச்சிறுதொகைதான். அதைக் கூட அவர்களுடைய மனிதாபிமான அரசியலுக்கான ஒரு முதலீடு என்று பார்த்தால் அதனை செலவுக்கணக்கில் போடமுடியாது. எனவே சுனாமியின் பெரிய பயனாளி அமெரிக்காதான்.

சுனாமியின் பெயரால் அமெரிக்கா இச்சிறுதீவில் தனது பிடியைமேலும் இறுக்கியிருக்கிறது. சாதாரண காலமென்றால் இதைச்செய்யும்போது இந்தியாவுக்கு நோகாமல் செய்வது கடினம். ஆனால் சுனாமியின் பெயரால் அமெரிக்கா இலங்கைத்தீவில் உரிமை பாராட்டுவதில் தனக்கு உருவாகியிருக்கும் புதிய வாய்ப்புக்களை ஆகக்கூடிய பட்சம் பயன்படுத்தியிருக்கிறது. குறைந்தபட்சம் குறியீடாகவேனும் அவர்கள் துருப்புக்களை இலங்கைத்தீவினுள் நகர்த்த முடிந்திருக்கிறது.

அண்மையில் அம்பாந்தோட்டையில் ஒரு கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க பேசியிருந்தார். இதில் அவர் ஜே.வி.பியை சுட்டாமல் சுட்டி சில கருத்துக்களைக் கூறியிருந்தார். நாட்டில் தற்சமயம் தோன்றியுள்ள நிலை ஒரு அரசியல் யதார்த்தமென்றும் அதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும் வெறுமனே அரசியல் கொள்கைகளை இறுக்கிப் பிடித்துக்கொண்டு தூதரகங்களுக்கு முன் ஊர்வலம் செய்வதால் பலனில்லை என்றும் தொனிப்பட ரணில் அதில் பேசியிருந்தார். இதன் அர்த்தம் என்னவென்றால், ரணில் முன்பு அடிக்கடி சொல்லிவந்த சர்வதேச வலைப்பின்னல் இதுதான் என்பதே. இலங்கைத்தீவில் அமெரிக்காவின் பிடி இறுக இறுக அது ஒரு கட்டத்தில் யூ.என்.பிக்கு நன்மையாய் முடியுமென்று ரணில் நம்புகிறார்போலும்.

அவர் கூறியதுபோல முன்பு அவருக்கு என்றிருந்த சர்வதேச வலைப்பின்னல் இப்போது சந்திரிகாவிற்கும் கிடைக்கத் தொடங்கிவிட்டது. இதன்படி கூறின் சந்திரிகாவை சுனாமியின் இரண்டாவது பெரிய பயனாளி எனலாம்.

அமெரிக்காவுடன் நெருங்கி ஒத்துழைக்கும்போது இந்தியாவுடன் ஏற்படக்கூடிய அசௌகரியங்களிலிருந்து சுனாமி சந்திரிகாவை பாதுகாத்திருக்கிறது மட்டுமல்ல; சுனாமி சந்திரிகாவை அவர் சிக்கித்தவித்து வந்த பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்தும் ஒப்பீட்டளவில் விடுவித்திருக்கிறது.

இந்தோனேசியாவில் விடுதலைக்காகப் போராடும் அசே மாநிலத்தில் நிவாரண உதவிகள் NGO க்களினூடாக வழங்கப்படுவதை உறுதிப்ப டுத்துமாறு இந்தோனேசிய சனாதிபதி தன்னிடம் கேட்டதாக கொபி அனான் அண்மையில் கொழும்பில் வைத்துக் கூறியிருந்தார். ஆனால் இலங்கை அரசாங்கத்திடமிருந்து அத்தகைய கோரிக்கை எதுவும் வரவில்லை என்றுமவர் தெரிவித்திருந்தார்.

இந்நிதியைக்கையாளும் விசயத்தில் இன்ரநெற்றில் ஒரு இணையத்தளத்தை திறந்து அதில் எல்லாக்கணக்கு விவரங்களையும் பதிவில் வைக்குமாறு உலகவங்கியின் தலைவர் அண்மையில் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியிருந்தார்.

ஆனால், இதுவிசயத்தில் அரசாங்கம் தனது ஒளிவு மறைவு அற்ற தன்மையை நிரூபிக்கும் விதத்தில் இப்பத்தி எழுதப்படும் நாள்வரையில் எதுவித நடவடிக்கையையும் எடுத்ததாக தெரியவில்லை.

சுனாமி நிதி இலங்கைத்தீவின் பொருளாதாரத்தில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தவல்லது என்பதை விளங்கிக்கொள்வதற்கு அண்மை நாட்களில் பொருளியல் நிபுணர்கள் பயன்படுத்தும் ஒரு சொற்றொடரை இங்கே சுட்டிக்காட்டலாம். DUTCH DISEASE - டச் நோய் - என்பதே அந்தச் சொற்றொடர். சுனாமி நிதி இலங்கைத்தீவின் பொருளாதாரத்தில் டச்நோயை கொண்டுவரக்கூடும் என்று மேற்படி பொருளியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். டச்நோய் எனப்படுவது 1960களில்

**நிலாந்தன்**

நெதர்லாந்தில் உண்டாகியபொருளாதார வீக்கம் ஒன்றை குறிக்கப்பயன்படுத்தப்படும் ஓர் சொற்றொடராகும். நெதர்லாந்தில் 1960களில் வடகடல் பிரதேசத்தில் பெருமளவு இயற்கை எரிவாயுப் படிவுகள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து டச்சுப்பொருளாதாரம் வேகமாக வீங்கியது. இதனால் டச் நாணயத்தின் பெறுமதி சடுதியாக உயர்ந்தது. ஆனால் அதேசமயம் எண்ணெய் அல்லாத ஏனைய ஏற்றுமதிக்குரிய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான போட்டிகள் குறையத்தொடங்கின. இது போலவே சுனாமி நிதியும் இலங்கை நாணயத்தை எதிர்பாராதவிதமாக பலப்படுத்தியிருந்தாலும் வரும் காலத்தில் இது என்னென்ன பக்கவிளைவுகளை கொண்டுவரக்கூடும் என்பது பற்றி சிந்திக்கவேண்டுமென்று மேற்படி நிபுணர்கள் கூறுகிறார்கள். இங்கு முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது என்னவெனில் டச்நோய் வரக்கூடும் என்று சொல்லுமளவிற்கு எதிர்பாராத பெருமளவு நிதி கொழும்பில் வந்து குவிகிறது என்பதையே.

ஆனால், பொருளியலாளர்கள் சற்றுக் கூடுதலாக கோட்பாட்டு ரீதியிலும் நீண்டகால நோக்கிலும் சிந்திப்பதாகவே தோன்றுகிறது.

மாறாக சந்திரிகாவோ அவருக்கு முன்னிருந்த எந்தவொரு சிங்கள தலைவருமோ அப்படி நீண்டகால நோக்கில் கோட்பாட்டு விளக்கங்களுடன் சிந்திப்பவர்கள் அல்ல. அப்படிச் சிந்தித்திருந்தால் சந்திரிகாவை சுனாமியின் பயனாளி என்று சொல்லும் நிலை வந்திருக்காது.

அவருக்குத்தேவை உடனடி நிவாரணம். அது வந்து குவிகிறது. அதை வைத்து இனி காலத்தை கடத்தலாம். ஒரு புறம் சுனாமியை காட்டி பட்ஜெட் வாக்குறுதியையும் ஏனைய வாக்குறுதியையும் நிறைவேற்றாமல் விடலாம். அதோடு எதிர்க்கட்சிகளின் வாயையும் ஏன் ஜே.வி.பியின் வாயையும்கூட அடைக்கலாம். இன்னொருபுறம் சுனாமிநிதியை வைத்து நாட்டின் பொருளாதாரத்தை ஒப்பீட்டளவில் மீட்கலாம். சந்திரிகாவை பொறுத்தவரை சுனாமி என்பது பிச்சைக்காரனுக்கு வந்த புண்ணிற்கு சமம். அதைவைத்து அவர் எல்லாத்தரப்பையும் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்திற்கு சமாளிக்கலாம்.

ஆனால், இதில் உள்ள பிரச்சினையானவிசயம் என்னவென்றால், அவருடைய தனிப்பட்டநிகழ்ச்சிநிரல் ஒன்றை சுனாமி அடித்துக்கொண்டு போய்விடுமா என்பதுதான். அடுத்த ஆண்டுடன் அவருடைய பதவிக்காலம் முடிகிறது. அதற்குப் பிறகும் நாட்டை ஆள்வது என்றால் அதற்கு அரசியலமைப்பில் ஏதாவது குறுக்குவழிகளை கண்டுபிடிக்கவேண்டும். அதற்கு முதலில் எதிர்க்கட்சிகள் தரப்பிலிருந்து விலைக்கு வாங்கக்கூடிய எம்பிக்களை வாங்கிவிடவேண்டும். இதைச்செய்யவில்லையென்றால் அடுத்த சனாதிபதி தேர்தலோடு சில சமயம் பண்டாரநாயக்காக்களின் ஆட்சி முடிவுக்கு வரக்கூடும்.

எனவே இப்பொழுது சந்திரிகாவின் கவலையெல்லாம் அவருடய தனிப்பட்ட கனவுகளை சுனாமி அடித்துக்கொண்டுபோய்விடாதபடி பார்த்துக்கொள்வதே. அல்லது இன்னும் சரியாகச்சொன்னால் சுனாமியை வைத்து அவருடைய தனிப்பட்ட கனவுகளை எப்படி நிறைவேற்றுவது என்பதே. இதற்காக எதிர்த்தரப்பிலிருந்து ஆட்களை விலைக்குவாங்குவதற்கு சுனாமி நிவாரணத்தைக்கூடபாவிக்கக்கூடிய ஆளவர்.



எனவே சுனாமியின் உடனடி பயனாளியாக அவர் காணப்பட்டாலும் சுனாமி அவருடைய தனிப்பட்டகனவுகளையும் அள்ளிக்கொண்டுபோயிற்றா இல்லையா என்பதை வைத்தேசுனாமியால் அவர்பெறப்போகும் நிகர லாபத்தைக் கணக்கிடலாம்.

இதுவரையிலும் நாம் பார்த்தது சுனாமியால் லாபமடையும் தரப்புக்களைப் பற்றியது. இனி நட்டமடைந்திருக்கும் தரப்பை பார்ப்போம்.

கடந்த சுமார் இரண்டேமுக்கால் ஆண்டுகளாக சமாதானத்தின் அநாதைகளாக காணப்பட்ட தமிழர்களே சுனாமியின் அநாதைகளும் ஆகியிருக்கிறார்கள். சுனாமி வந்து அவர்களுடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சேமிப்பை கரைத்துக்கொண்டுபோகும் ஒரு நிலை.

சுனாமிக்கு முன்பு தமிழ் அரசியலில் காணப்பட்ட அதே ஈருடகநிலை தான் சுனாமிக்குப் பின்பும் தொடங்குகிறது. சுனாமிக்கு பிந்திய அரசியலில் தமிழ்களுடைய சொந்தச் சேமிப்பு கரைந்துகொண்டே போகிறது என்பதே மெய். இது தவிர்கமுடியாததும்கூட.

சர்வதேச உதவிகள் போதிய அளவு கிடைக்காத ஒரு நிலையில் தமது பலத்தில் தமது வளங்களில் தங்கியிருப்பது ஏன்பது அதுவும் அவர்களுடைய நவீன வரலாற்றில் முன் எப்பொழுதும் நிகழ்ந்திராத கடற்கோளின் இழப்புக்களில் இருந்து மீண்டு எழுவதற்கு தமது சொந்த சேமிப்பையே செலவளிப்பது என்பது அதுவும் மீண்டும் ஒரு யுத்தம் வரக்கூடும் என்ற எதிர்பார்ப்புக்களின் மத்தியில்அதைச் செய்வது என்பது ஒரு சிறிய இனம் எடுக்கக்கூடிய ஆகப் பெரிய "ரிஸ்க்" தான்.

சர்வதேச சமூகத்தின் உதவி எனப்படுவது உத்தியோகப்பூர்வவழிகள் ஊடாகவும் நிறுவனமயப்பட்ட ஓர் ஒழுங்கிற்கு ஊடாக்வும் இது வரையிலும் தமிழர்களிடம் கையளிக்கப்படவில்லை. இத்தாலியத் தூதரகம் கிளிநொச்சிக்கு வந்து நிவாரணப் பொருட்களை நேரடியாக புலிகளிடம் கையளித்தது போன்ற சில உதிரிச்சம்பவங்களைத் தவிர குறிப்பிட்டுச் சொல்லும்படியாக செயல்பூர்வமான நகர்வுகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே நிகழ்ந்திருக்கின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் அலெசான்றோ பியோ கூறுகிறார்; புலிகளின் கோரிக்கைகளையும் ஆராய்ந்த பின்னரே இலங்கைக்கான மீள் கட்டுமானத்துக்கு உரியதேவை மதிப்பீட்டை இறுதியாக்க முடியும் என்று.

ஆனாலும் சுனாமிக்கு முந்திய தமிழ் அரசியலையும் சுனாமிக்குப் பிந்திய தமிழ் அரசியலையும் ஒப்பிடுமிடத்து ஒன்றுத் தெளி வாகத் தெரியும் நிலைமையில் பரசவமூட்டும் மாற்றம் ஏதும் இல்லை என்பதே அது. கடந்த சில தினங்களாக இலங்கைக்கு வந்துபோகும் தலைவர்கள், இராசதந்திரிகள் மற்றும்உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதானிகள் யார் யார் என்பதையும் அவர்கள் எங்கெங்கு விஜயம் செய்கிறார்கள் என்பதையும் யார் யாரை சந்திக்கிறார்கள் என்பதையும் தொகுத்துப் பார்த்தால் ஒரு விசயம் தெளிவாகத் தெரியும். உலகம் தமிழர்களை எந்த அளவு கோல்களால் அளக்கிறது என்பதே அது.

(20 ஆம் பக்கம் பார்க்க...)

# நறுக்கென...

## ஆட்களைச் சுட்டவர்கள் அப்பம் சுடுகிறார்கள்



யாழ்ப்பாணத்தில் படைத்தரப்பினர் அப்பக்கடை யொன்றை நடத்திவருவது தெரிந்ததே. இந்த அப்பக்கடை சில மாதங்களின்முன் பொதுமக்களால் அடித்து நொருக்கப்பட்டதும் பின்னர் மீண்டும் அமைக்கப்பட்டு, தற்போது சுடச் சுட அப்பம் (HOT HOT HOPPER) என்றவிளம்பரப் பலகை நிறுத்தப்பட்டு வியாபாரம் நடந்து வருகிறது

எப்பவுமே எதையாவது எவரையாவது சுட்டே பழக்கமுள்ள ஆமிக்காரர்கள் இப்போது சமாதான காலத்தில் சுடுவதற்கு அதாவது துப்பாக்கியால் சுடுவதற்கு- வாய்ப்பு குறைந்து போய்விட்டதால் அப்பம் சுட வெளிக்கிட்டுவிட்டார்கள்.

HOT HOT HOPPER என்று எழுதுவதற்குப் பதிலாக SHOOT SHOOT HOPPER என்றுஎழுதியிருந்தால் இன்னும் பொருத்தமாக இருக்கும்என்கிறார் ஒரு ஓய்வுபெற்ற அரச ஊழியர், அதுவும் சரிதான்....!

பெயர்தான் அப்பக்கடையேயொழிய அது உண்மையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தகவல் சேகரிப்பு மையம்தான். அதுமட்டுமல்ல அங்கிருந்தே சமூக விரோத சக்திகளும், தேசவிரோதக் குழுக்களைச் சேர்த்தவர்களும் இராணுவ மற்றும் ஏனைய படைத்தரப்பு அபிலாஷைகளை நிறைவேற்ற கலாசார சீரழிவு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றனர் என்பதும் உண்மைதான்.

மக்களோடு மக்கள் போல் அங்கு அப்பம் சாப்பிட வருபவர்கள் போல் இருக்கும் இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் அங்கிருந்தவண்ணம் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் வதந்திகளைக் கட்டவிழ்த்துவிடுவதுடன், தேச விரோதச் சக்திகளை அவர்களின் பலவீனங்களை அறிந்து பயன்படுத்துவதன்மூலம் உளவுநடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருவதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் அப்பம் வாங்கச்சென்ற சிறுவன் ஒருவன் மீது அங்கிருந்த சிவில் உடைதாரிஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ள முயன்றதாகத் தெரிகிறது. அவ்வேளை பல்கலைக்கழக மாணவர்கள் அவ்வழியால் வரவே அந்தச் சிறுவன் தப்பி ஓடியிருக்கிறான்.

இப்போது இதேபோன்ற அப்பக்கடைகளை இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசங்களில் பரவலாக அமைக்கத்தொடங்கியுள்ளனராம். மீசாலையில் இப்படி ஒரு முயற்சிக்கு மக்கள் கடும்எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும் தெரிகிறது.

அப்பக் கடையை நோக்கி அப்பாவிமக்கள் அதிகம் வர அப்பக்கடையில் வெளிப்புறத்தில் தொலைக்காட்சி பெட்டிகளை வைத்து இலவசமாக திரைப்படங்களை காட்டவும் திட்டமுள்ளதாம்.....

இது தொடர்பாக அப்பகுதியில்வாழும் ஒரு வயதான அம்மாவிடம் கேட்டபோது....! ஓமோம்....அவை ஆக்களைச் சுட்டு சுட்டு களைச்சுப்போய் அப்பம் சுட வெளிக்கிட்டிட்டினம்... வெட்கங்கெட்டு நக்கிப் பிழைக்கிறதுகள் தான் அங்கைபோய் சாப்பிடும்....! என்றார் சினத்துடன்.

## குரங்குகளும் பூனைகளும்



குரங்கு பூனைகளுக்கு அப்பம் பகிர்ந்துகொடுத்த கதை உங்களுக்கு தெரியும்தானே....!

'சுனாமி' யால் பாதிப்புக் குள்ளான மக்களுக்கென சர்வதேச நாடுகள் பெருமளவில் அள்ளி வழங்கிவரும் நிவாரண உதவிப் பொருட்களை அரசு பகிர்ந்தளிக்கும் முறையும் அதே போன்றதுதான்.

அன்றாடம் கிடைக்கும் செய்திகளின் அடிப்படையில் பார்த்தால் நிவாரணப் பகிர்தல் வேலைக்கென அமர்த்தப்பட்ட அரசபடையினரும், அதனைத்தாமாகவே எடுத்துக்கொண்டு ஆட்டம் போடும் ஜே.வி.பியினரும் ஏனைய பேரினவாதக் குழுவுக்கும், சில ஆட்சியிலுள்ள பிரதான கட்சியின் முக்கியஸ்தர்களும் எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்ற இலட்சியத்துடன் முனைப்பாகக் காரியமாற்றிவருகின்றனராம்.

அயலக நாடொன்றில் இருந்து நான்கு கப்பல்களில் வந்த நிவாரணப் பொருட்களில் ஒரு கப்பலில் வந்தவையனைத்தும் எங்கே சென்றன என்பது தெரியாத அளவுக்கு சம்பவங்கள் நடந்துள்ளன.

கிழக்கிலுள்ள மக்களுக்கு என்று அனுப்பப்பட்ட மலையகப் பகுதிகளில் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்களை இடைமறித்து பறித்த சமூகவிரோத- பேரினவாத சக்திகள் கும்பல்களுக்கு படைத்தரப்பினர் பின்னணியாக நின்றது பகிரங்கமான செய்திகளே.

கணக்கு வழக்கின்றி வந்து சேரும் பொருட்கள் யார் யாருடைய சொந்தக் களஞ் சியங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றதோ என ஆதங்கத்துடன் கூறும் தொண்டர் அமைப்பைச் சேர்ந்த ஊழியர்கள், போர் கொஞ்சப்பேரை கோடீஸ்வரர்களாக்கிவிட்டது. இப்போது சுனாமி கொஞ்சப்பேரை பணக்காரர்கள் ஆக்கப்போகிறது என்று கூறினார். இப்போது கூட, சுனாமி அவலங்கள் மக்களை எதிலும் ஆழ்ந்த அக்கறை கொள்ள வைக்காத சூழ்நிலையில் அம்மணி சந்திரிகா ஆயுதக்கொள்வனவுக்கு ஆட்களை அனுப்பி அதிலும் ஆதாயம் சம்பாதிக்க முனைகிறார் என்று எதிர்க்கட்சி கூறுவதும் உண்மையே....

பிச்சைக்காசு சேர்த்து துப்பாக்கி வாங்கும் அரசின்செயற்பாட்டின் உள்நோக்கம் எதுவென்று கூறவேண்டியதில்லை.

சுனாமியை அடுத்து அரசினதும் சனாதிபதியினதும் இராணுவ வியூகங்களும் அரசியல் மூலோபாயங்களும், சமாதானத்திற்கான அரிய சந்தர்ப்பத்தை அரசு கை நழுவவிடுகின்றது என்ற சர்வதேச செய்திப் பத்திரிகையாளர் 'லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்' (LOS ANGELS TIMES) வெளியிட்ட செய்தியை உண்மையாக்கியுள்ளன.

நிவாரணப் பொருட்களையே நீதியாகப் பங்கிட மனமற்ற ஆட்சித்தலைமை அரசியல் உரிமைகளை தமிழ் மக்களுக்கு நீதியாக வழங்க முன்வருவார்கள் என எவரும் நம்பமுடியுமா....?

குள்ளமதி கொண்ட குரங்குகள் அப்பத்தை மட்டுமல்ல எதனையுமே பகிர்ந்துகொடுக்க முன்வராது என்பது ஏனோ சிலருக்கு புரிவதேயில்லை.

## சுனாமியும் உள்நாட்டு வெளிநாட்டு ஆமிகளும்



சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டுதோ இல்லையோ நிவாரணப்பணி- மீட்புப்பணி- என்றபெயரில் எத்தனை நாட்டு இராணுவத்தினர் இலங்கைக்கு வந்திறங்கிவிட்டார்கள்.

அதென்னமோ பாதிப்புக்குள்ளான மக்களின் கஷ்டங் களைத்தீர்ப்பதற்கான நிவாரணப் பணிகள் நடக்கின்றதோ என்னமோ இலங்கை ஆயுதப் படைகளுக்கான நிவாரணம் மட்டும் ஓஹோ என்று நடக்கிறது.

கடற்படையினரின் தளங்களை மீள்நிர்மாணம் செய்ய இந்தியா உதவப்போகிறது. பருத்தித்துறை- காங்கேயன்துறை துறைமுகங்களை அமெரிக்கா நிர்மாணித்துத் தரத்தயாராம்.

திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் இந்தியக் கடற்படையினர் புனரமைப்புப் பணிகளை செய்துள்ளனர்.

கடலலை ஏற்படுத்திய அனர்த்தம் இலங்கையின் கடற்பிராந்தியங்கள், கடற்படைத்தளங்கள், துறைமுகங்கள் மீதான சர்வதேச வல்லாதிக்கச் சக்திகளின் கருணை பெருக்கெடுத்து 'சுனாமி' அலையளவுக்கு உயரத்தொடங்கியுள்ளது.

சுனாமிக்கு முன்பே பலாலி விமானப்படைத்தளத்தை புனரமைப்புச்செய்து நவீனத்துவம் செய்ய இந்தியா முன்வந்தது.

எப்போதுமே இயற்கையனர்த்தங்கள் நடைபெற்று பேரழிவு நிகழ்ந்த நாடுகளில் பாதிக்கப்பட்ட பகுதிகளில், பாதிப்புக்குள்ளான மக்களுக்கானமீட்பு மற்றும் நிர்மாணப் பணிகளிலேயே வெளிநாட்டு இராணுவம் மட்டுமல்ல; உள்நாட்டு இராணுவமும் ஈடுபடுவது வழக்கம்.

இலங்கையில் உள்நாட்டு இராணுவம் நிவாரணப் பணிகளை ஆயுதபாணிகளாக மேற்கொள்ள அரசாங்கம் விதித்துள்ளது. வெளிநாட்டு இராணுவத்தினரோ உள்நாட்டு இராணுவ மற்றும் கடற்படைத்தளங்களினை புனரமைக்கும் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து போட்டா போட்டியுடன் செயற்படுகிறார்கள் போலுள்ளது.

இலங்கையில் இந்திய கடற்படைமற்றும் இராணுவத்தினரின் செயற்பாடுகளை அமெரிக்கா கண்காணிக்கிறது, அமெரிக்க கடற்படைமற்றும் இராணுவத்தினரின் நடவடிக்கைகளை இந்தியா உன்னிப்பாக அவதானிக்கிறது. இடையே பிரிட்டிஷ் கடற்படை, பாகிஸ்தான் கடற்படை என வந்துள்ளவர்கள் 'சுனாமி' அவலங்களைப் பயன்படுத்தி அவரவர் பிராந்திய இராணுவ அரசியல் நலன்களை பாதுகாத்துக்கொள்ளவே முயல்கிறார்கள் என்பது தெளிவு.

இதனைப்பயன்படுத்தி இலங்கை அரசு தனது அரசியல் நலன்களை பாதுகாக்க முயல்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணிகளுள் ஆயிரம் தில்லுமுல்லுகள், மோசடிகள், இரகசியங்கள் அதனைத் தட்டிக்கேட்டு ஒழுங்குபடுத்த எவருக்கும் எந்தப்படைக்கும் அக்கறையுமில்லை....பொறுப்புமில்லை....

அறிக்கைகளுக்குமட்டும் குறைச்சலில்லை.

நல்ல நாடு, அல்ல அரசு- ஆனால் பாவம் மக்கள் என்றானாம் ஒருவன்.

புரிகிறதா....?

## கழுதையான மாமியார்!



பழையபடி மாமியார் கழுதை போலானாராம் என்ற பழமொழியை அந்தக்கால பாட்டிமார் எதற்காகச் சொல்லி வைத்தார்களோ தெரியவில்லை... ஆனால் சந்திரிகா மாமி பழையபடி 'ஆமி'யாக மாறத்தொடங்கிவிட்டதுக்கு இது பொருத்தமாகவே உள்ளது. ஆமாம் அவர் போர்க்கோலம் பூணத்தொடங்கிவிட்டார் என்பது மட்டும் உறுதி.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை இராணுவத்தரப்பிடம்- ஆயுதப்படைகளிடம்- ஒப்படைக்கத் துணிந்தபோதே அம்மையார் தான் இந்தநாட்டு மக்களின் சனாதிபதியல்ல- வெறும் முப்படைத்தளபதிதான் என்பதை இனம் காட்டிவிட்டார்.

அதற்கடுத்தபடியாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நிவாரணப்பணிகளில் பாரபட்சம் காட்டியதுடன், இன்றுவரை அதுதொடர்பாக எந்தச் செயற்பாடுகளையும் உரியமுறையில் மேற்கொள்ளாது கடத்திவருவதுடன் ஜே.வி.பியினரின் இனவெறிச் செயற்பாடுகளுக்கு மௌன அங்கீகாரம் கொடுப்பதன்மூலம், சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 14 புதிய நகரங்களை நிர்மாணிப்பதென அரசு போட்டுள்ள திட்டத்தில் வடக்கை முற்றாகப் புறக்கணித்ததன் மூலம் தமிழ் மக்களை இன்ன மும் அவர் தனது எதிரிகளாகத்தான் கருதுகிறார் என்பதையும் நிரூபித்துள்ளார்.

எல்லாவற்றிலும் மேலாக மக்கள் அவலங்களுக்குள்ளாகி அல்லல்பட்டு நிற்கையில் அவர்களுக்கான புனர்வாழ்வு மற்றும் நிவாரணப்பணிகளுக்கென பலகோடி டொலர்கள் தேவைப்படும் இந்த நெருக்கடிச் சூழலில், சர்வதேச சமூகத்திடம் பிச்சைக்காக இரந்து கொண்டிருக்கும் அரசு புதிதாக ஆயுதங்களைக்கொள்வனவுசெய்ய ஒரு படையதிகாரிகள் குழுவை ஈரானுக்கு அனுப்பி, 1500 கோடி பெறுமதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளார். இது அவர் இனிமேலும் சமாதானம் பற்றி பேசுவதற்கான தகுதியை இழந்து விட்டமையையே குறிக்கிறது.

சுனாமி அனர்த்தத்தால் நாடே துயர் சுமந்துநிற்கையில், அரசு போர் ஒன்றை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தயாரிப்பு வேலைகளில் ஈடுபடத்தொடங்கியுள்ளதோ என்ற சந்தேகத்தையே அரசின் இந்தச்செய்கை ஏற்படுத்தியுள்ளது.

மூன்று வாரங்களின் முன்னர் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக சர்வதேச சமூகத்திலிருந்து ஏற்பட்டுவந்த அழுத்தங்கள், சுனாமிப் பேரழிவு காரணமாக இல்லாமல் போயுள்ள சூழ்நிலையில் நிம்மதிப்பெருமூச்சை விட்டுள்ள சனாதிபதியும் அரசும் போர்க்கோலம் பூணத்தயாராகி வருவதையே ஈரானிலிருந்து ஆயுதக்கொள்வனவை மேற்கொள்ளும் அரசின் செயல் நிரூபிப்பதாக உள்ளது.

எந்தவகையில் பார்த்தாலும் அம்மையார் சுனாமியைப் போன்ற போர்ச் சந்நதம் கொள்வாரேயானால் அதனால் ஏற்படப் போகும் அழிவுகளை யாரால் தடுக்க முடியும்?

செங்குட்டுவன்

புலனாய்வு என்பது ஒரு கலை அதில் ஊடுருவல் என்பது ஒரு வகைப்புலனாய்வுத் தொழில் நுட்பத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் ஒன்று ஊடுருவல் தொழில்நுட்பம் மற்றையது முறியடிப்புத் தொழில் நுட்பம்.

ஒரு நாட்டுக்குள் எதிர்ப் புலனாய்வு நிறுவனங்கள் ஊடுருவுவதை அந்நாட்டுப் புலனாய்வு நிறுவனம் முறியடிக்கும்.

ஊடுருவல் என்பது எதிரி தேசங்களைச் சீரழிப்பதற்காக மேற்கொள்ளப்படும், முறியடிப்பு என்பது எதிரி தேசங்களின் சீரழிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக முறியடிப்புப்புலனாய்வு மேற்கொள்ளப்படும்.



# ஊடுருவல் புலனாய்வு

இங்கு ஊடுருவல்கள் என்றால் என்ன? ஊடுருவல் எப்படியிருக்கும். ஊடுருவும் உளவாளிகளின் செயற்பாடுகள் எப்படியிருக்கும் என்பன பற்றிப் பார்ப்போம்.

புலனாய்வுத் தொழிலில் ஈடுபடுபவர்கள் அத்தொழிலில் வெற்றி பெற வேண்டுமானால் ஆழ ஊடுருவலில் வெற்றிபெறவேண்டும். வெற்றிகரமான ஊடுருவலில்தான் புலனாய்வு வெற்றி தங்கியுள்ளது. உளவு நிறுவனம் ஊடுருவலில் வெற்றிபெறவில்லையானால் அவ் உளவு நிறுவனம் எழுச்சிபெறவில்லை என்பது அர்த்தம்.

உளவு நிறுவனங்களின் உளவாளிகள் ஆழமான ஊடுருவல் பணியில் ஈடுபட்டாலேயே பாரிய புலனாய்வு வெற்றிகளை ஈட்டமுடியும். உளவு நிறுவனத்தின் உளவாளிகள் ஆழ ஊடுருவி உட்புகுந்து குடியிருக்காவிட்டால் அவ் உளவு நிறுவனம் வீழ்ச்சியடைந்துவிடுவதுடன் பிரயோசனமான தகவல்களைப் பெறமுடியாது.

உளவாளிகளின் சிறப்பான ஊடுருவல்கள் மூலமே பெறுமதியான புலனாய்வுத் தகவல்களைப் பெறமுடியும்.

உளவுத்தொழிலில் ஊடுருவல் மூலம் எதிரிகளின் திட்டங்கள் மூலோபாயங்கள் திருடப்படுகின்றன. அதன் அடிப்படையில் எதிரிகளின் பலமும் பலவீனமும் கண்டறியப்படுகின்றன.

எதிரிகளின் பலம் கண்டறியப்படுவதினால் அதனைச் சமாளிக்க அல்லது முறியடிக்க தமக்கான தற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படுகின்றன.

எதிரிகளின் பலவீனங்களைக் கண்டுபிடித்து அவ் ஓட்டைக்குள்ளால் உட்புகுந்து நிர்வாகக் கட்டமைப்புக்குள் ஊடுருவும் உளவு வல்லுனர்கள் நிர்வாக இயந்திரங்களை மின்னாமல் முழங்காமல் சீர்குலைத்து விடும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

உதாரணமாக கட்சிகளுக்குள் ஊடுருவும் உளவாளிகள் கட்சிகளை சிதைக்கின்றனர், அல்லது பிளக்கின்றனர், அல்லது முக்கிய தலைகளின் கதைகளை முடித்துவிடுகின்றனர், அல்லது தகவல்களை திருடி தாம் சார்ந்த தேசங்களுக்கு அனுப்பிவைக்கின்றார்கள். இது இராணுவ நகர்வு சார்ந்த புலனாய்வு அல்ல, புலனாய்வு சார்ந்த உளவுப்பணியாகும்.

இராணுவப் புலனாய்வு அதாவது வேவு என்பது எதிரிகளின் படைத்தளங்கள் மீதான அல்லது படையெடுப்புக்கள் தொடர்பான போர் ஒழுங்குபடுத்தல்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை கண்டுபிடிப்பதே போர் நடவடிக்கைக்கு முன்னரான வேவுப்பணியாகும். இவை எதிரிகளின் பாதுகாப்பு வேலிகளுக்குள்ளால் ஒளித்துச் சென்று படைமுகாம் இருள் என்பவற்றுக்குள் மறைந்திருந்து தகவல் சேகரிப்பதாகும்.

இது எதிரிகளின் போர் ஒழுங்குபடுத்தல் என்ன? அதற்கு ஏற்றால் போல் எப்படி பதிலடி கொடுப்பது? எப்படி வலிந்து தாக்குவது? எப்படி தற்காப்புத் தாக்குதலுக்கு வியூகங்கள் அமைப்பது? என்பதற்கு ஊடுருவல் பணியில் ஈடுபட்டிருக்கும் உளவு வல்லுனர்களின் தகவல்களே பயன்படுகின்றன.

இவ்வாறாக எதிரிகளின் முன் ஏற்பாட்டு மூலோபாயங்களைக் கண்டுபிடித்து தந்திரோபாயங்களை வகுத்துக்கொள்வதற்கே உளவுக் கலையில் ஊடுருவல் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.

இராணுவ ரீதியில் பகைவர்களின் இயந்திரத்திற்குள் ஊடுருவும் உளவாளிகள் எதிரிகளின் படைவலு என்ன? ஆயுத வலு என்ன? என்பவற்றைக் கண்டறிவதுடன் படைத்தலைமையின் இரகசியத்திட்டங்கள் என்ன? அடுத்தகட்ட அவர்களின் நகர்வுகள் என்ன? அவர்களின் மூலோபாயங்களும் தந்திரோபாயங்களும் எவ்வாறு அமைகின்றன என்பவற்றைக் கண்டறிவதற்காகவே உளவாளிகள் பகைவீடு சென்று அவர்களுடன் சேர்ந்து வாழ்கின்றனர். நவீன புலனாய்வு உலகில் காரிருளில் பற்றைக்குள்ளால் மறைந்து இராணுவ அரண்களுக்குள்ளால் உட்புகுந்து சென்று அவர்கள் என்ன செய்கின்றார்கள் என எட்டிப்பார்ப்பதைவிட அல்லது ஆகாயத்தில் பறக்கும் செய்மதிகள் மூலம் பெறப்படும் புகைப்படங்கள் ஊடாகக் கிடைக்கும் தகவல்களைவிட சிறந்த உளவாளிகள் படைத்தலைமைக்குள் ஊடுருவிச் சென்று போலியாக இணைந்து செயற்படுவதன் மூலம் அதிக பயனைப்பெற முடியும். அத்துடன் அவை உறுதிப்படுத்தப்பட்ட உண்மைத் தன்மையாகவும் அத்தகவல்கள் இருக்கும்.

இது எதிரி சந்தேகப்படாதவாறு "இது நம்ம ஆள்தான்" என நம்பக்கூடியவாறு திட்டமிட்ட மறைப்புக்கதைகளை உருவாக்கி பகைவர்களுடனேயே இணைந்துகொண்டு அதன்மூலம் படைத்தலைமைச் செயலகங்களுக்குள் நுழைந்து பகைவர்களின் உரையாடல்களை ஒட்டுக்கேட்கவேண்டும். அவர்களின் முக்கிய நடவடிக்கைகள் தொடர்பான ஆவணங்களை பிரதிபண்ணி தடையமில்லாமல் எடுக்கவேண்டும்.

இதற்காக பகைவர்களின் கோட்டைக்குள் ஒரு உளவாளியை உட்புகுத்தவேண்டும். அல்லது பகைவர்களின் தலைமையுடன் நெருங்கி இருப்பவரை மனம் மாற்றி எடுக்கவேண்டும். அல்லது விலைக்கு வாங்கவேண்டும்.

இது ஒரு சாதாரண விடயம் அல்ல, ஆபத்து நிறைந்தது. ஊடுருவலில் ஈடுபடும் உளவு வல்லுனர்கள் எப்போதும் அவதானமாகவும் நிதானமாகவும் செயற்படவேண்டும்.

ஊடுருவல் வெற்றிபெற வேண்டுமானால் உளவு வல்லுனர்களின் ஒவ்வொரு மதிப்பீடுகளும் அனுமானங்களும், எதிர்வு கூறல்களும் அணுவளவும் பிசகக்கூடாது. எதிரிகளின் உணர்வுகளை சரியாக நாடிபிடித்துப்பார்த்து கணக்குப்போடவேண்டும். உளவாளிகளின் மதிப்பீடுகள் தப்புக்கணக்கான ஊடுருவல் பிசகிவிடும், நிலைமையே தலைகீழாகிவிடும்.

ஊடுருவல் பிசகினால் உளவாளிகள் கையும் மெய்யுமாக மாட்டுப்படவேண்டி ஏற்படும். குற்றம் நிரூபிக்கப்பட்டால் உளவாளிகளின் உயிர் போவது பெரியபிரச்சினையல்ல. அவ் உளவாளிகள் சார்ந்த தேசங்களிற்கு அவமானம் ஏற்படும், ராஜதந்திர ரீதியான அழுத்தங்கள் ஏற்படும், பகை உணர்விலிருக்கும் நாடுகளானால் பிரச்சினை இல்லை. நட்புறவாக இருக்கும் நாடுகள் மத்தியில் உளவாளிகள் பிடிபடுவார்களேயானால் அதைவிட அவமானமும், அத்துடன் நட்புறவில் விரிசலும் ஏற்படும். இது இங்கு புரிந்துணர்வில் சீற்றத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தும். இதுவே பெரியபிரச்சினையாகும்.

ஊடுருவும் உளவாளிகள் சரியான மறைப்புக்கதை கூறாவிட்டால் பகைவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பார்கள். சந்தேகம் ஏற்படுவதற்கு அணுவளவும் இடம் வைக்கக்கூடாது. சிறிய அணு பிசகினாலும் பாரிய ஆபத்துக்களை ஏற்படுத்தவல்லது. ஆகவே ஊடுருவலுக்குத் தயாராகும் உளவாளிகள் பகைவர்களை ஏமாற்ற அல்லது அவர்களை நம்பவைக்க அனைத்து அம்சங்களிலும் தம்மை தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டும்.

உளவாளிகள் தாமியங்கும் பிரதேசங்களில் உள்ளூர் மொழிகளைப் பேசுவதில் கைதேர்ந்தவர்களாகவும், அவ் சமூகத்தின் உடை, நடை சமூக பண்பாட்டு பழக்க வழக்கங்களுக்கு ஏற்றாற்போல் தம்மை மாற்றிக்கொள்ளவேண்டும்.

ஊடுருவலுக்குத் தயாராகும் உளவாளிகள் அவ்வவ் நாட்டு அல்லது அவ்வவ் பிரதேசக் கலாசாரத்தைக் கற்றுக்கொள்வதற்காகவும் தமது இயல்பான கலாசாரத்தையும் பழக்கவழக்கங்களையும் மறப்பதற்காகவும் புலனாய்வுக் கல்லூரிகளில் நீண்டகாலம் பயிலுகின்றனர்.

ஊடுருவிச் செல்லும் உளவாளிகள் தமது உண்மையான கலாசாரத்திலிருந்து விடுபட்டு புதிய கலாசாரத்தையுடைய மனிதர்களாக பிறப்பெடுக்கின்றனர்.

உதாரணமாக இஸ்ரேலுக்குள் ஊடுருவும் ஈரான் உளவாளி ஒருவர் தன்னை இஸ்ரேல் பிரஜை என்பதை உறுதிப்படுத்த போதிய ஆவணங்களை களவாக தயாரித்து வைத்திருப்பார்.

அவருடைய பழக்கவழக்கம், வழிபாடு, மொழி நடை எல்லாம் ஒரு இஸ்ரேல்காரனைப் போலவே இருக்கும். அவரின் வெளியகக் கோட்பாடும் இஸ்ரேல் சார்பானதாகவே இருக்கும். இவ்வாறான தயார்ப்படுத்தலே சிறந்த புலனாய்வு ஊடுருவலுக்கு சாதகமாக அமையும்.

ஊடுருவலுக்கு இவர்களைப்

**ச.சங்கரன்**

போல் வேடம் பூண்டுவரும் உளவாளிகளின் கதாபாத்திரங்களை படித்தால் அவை கற்பனைக்கதை போலவே இருக்கும். இவை திகிலூட்டும் வகையிலும் மயிர்க்கூச்செறியும் வகையிலும் இருக்கும்.

அவ்வாறான இலங்கைத் தீவை மட்டுமல்ல முழு உலகத்தையுமே அதிரவைத்து வியப்பிலாழ்த்திய ஒரு புலனாய்வு ஊடுருவல் நடவடிக்கையைப்பார்ப்போம்.

இவ்வாறு வெற்றிகரமான புலனாய்வு ஊடுருவல்கள் உலகில் எங்காவது ஒரு சில இடங்களில் எப்பாவது இருந்துவிட்டு உலக அதிசயமாக நடப்பதுண்டு. அதுதான் அந்த உலகப்பிரசித்தி பெற்ற கதாநாயகன் தன் இலக்கின் உள் வீட்டுப்பிள்ளையாக நடித்து ஒரு கோப்பையில் உணவுண்டு ஒரு உலங்குவானூர்தியில் பிரயாணம் சென்று வந்து அவ்வாறு திறமையாக புலனாய்வு நாடகமாடிய புலனாய்வு வல்லுனரின் புலனாய்வு நடவடிக்கையாகும். அது எல்லோரும் அறிந்த தாக்குதல் தான் மே-1, அது எல்லோரும் அறிந்த மனிதர் தான். இலங்கையின் முன்னாள் சனாதிபதி மீதான உளவு நடவடிக்கை இது ஒரு புலனாய்வு வெற்றி மட்டுமல்ல உலகப் புலனாய்வு சரித்திரமும் ஆகும்.

இது வாழ்நாள் முழுவதையுமே திகிலூட்டும் புலனாய்வு வேலைக்குத் தன்னை அர்ப்பணித்த ஒரு உளவுவல்லுனரின் மயிர்க்கூச்செறியும் வீரசாகச புலனாய்வு ஊடுருவல் விளையாட்டு ஆகும்.

ஊடுருவலை முறியடிக்கும் புலனாய்வுப் பணிக்கும் ஊடுருவலின் பங்கு அவசியம் தேவை. எதிரிகளின் ஊடுருவல் ஒன்றைக் கண்டுபிடித்தால் முறியடிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் புலனாய்வாளர் உடனடியாக அந்த நபரினைப் பிடித்து அவரின் கதையினை முடித்துவிடுவது சிறந்த முறியடிப்புப் பணி அல்ல. அங்கு ஊடுருவி இருக்கும் எதிரி உளவாளிக்குள் அவர் அறியாமலே முறியடிக்கும் முறியடிப்பு உளவாளியும் ஊடுருவவேண்டும். அந்த ஊடுருவல் உளவாளியை நீளக்கயிற்றில் விட்டுக் கண்காணிக்கவேண்டும். ஊடுருவிய உளவாளியின் உளவு வலயத்தை பூரணமாக கண்டறியும்வரை பொறுமையாக இருந்து அந்த முழுவலயத்துக்குள்ளும் பூரணமாக ஊடுருவிய பின்னரே அவர்களைக் கைதுசெய்யவேண்டும். அல்லது அவர்களின் கதையை முடிக்கவேண்டும். எனவே ஊடுருவல் பணி முறியடிப்பிலும் முக்கியத்துவம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதனாலேயே புலனாய்வு வெற்றி என்பது சிறந்த ஊடுருவலில் தங்கியுள்ளது என குறிப்பிடுகின்றேன்

போர்க்காலங்களில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிறிலங்கா உளவுத்துறை ஆழ ஊடுருவித் தாக்கும் அணி (L.R.R.P) யின் புலனாய்வு நடவடிக்கைகளில் கடந்த காலத்தில் ஈடுபட்டுள்ளது. இதன் ஒருவடிவம் தான் கேணல் சங்கர், லெப்.கேணல் கங்கை அமரன் மீதான தாக்குதல்கள் ஆகும். இதனை புலனாய்வு ஊடுருவல் எனக் குறிப்பிடுவதைவிட ஊடுருவலின் ஒருவகையான வேவுப் பணியில் ஆன தாக்குதல் ஆகும்.

இன்று போர் ஓய்வுச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி பல ஊடுருவும் உளவாளிகள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்து உறங்கிக்கொண்டு இருக்கின்றார்கள்.

"ஊடுருவல்களை பகை உளவுப் பிரிவினர் தமிழர் தாயகப் பகுதியில் உள் நிர்வாகக் கட்டமைப்புக்குள்ளும் அதி உச்ச இரகசிய வட்டத்துக்குள்ளும் மேற்கொள்ளக் காய்களை நகர்த்துகின்றனர். இந்த உளவு முயற்சியின் இலக்கு என்னவெனில் தமிழரின் படைபலத்தை உடைத்து பலவீனமாக்குவதாகவே இருக்கின்றது. இந்த இலக்கை எட்ட எதிரி உளவுப் பிரிவினர் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு விசுவாசமாக உழைக்கின்றவர்களாக தம்மை இனம்காட்டிக் கொள்கின்றனர். இவ்வாறான உளவாளிகளை எதிரிப் புலனாய்வு இயந்திரம் தயார்ப்படுத்தி தமிழர் தாயகப் பிரதேசங்களில் நாட்டி வருகின்றது. இவர்கள் ஆழமாக வேரூன்றி நீண்டகால அடிப்படையில் உறங்கி இருப்பார்கள். சரியான தருணம் வரும் போது புலனாய்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள் என்கின்றார்கள் ஆய்வாளர்கள்."

தமிழர் தாயகப் பகுதியில் இலங்கை அரச உளவு நிறுவனங்களின் உளவாளிகளும் அரசின் ஒட்டுப்படைகளான தமிழத் தேச விரோதிகளும் பன்னாட்டு உளவு நிறுவனங்களின் உளவாளிகளும் ஊடுருவி இருக்கின்றார்கள். இவ்வாறான புலனாய்வு நிபுணர்களினால் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்குக் கேடு ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்வது ஒவ்வொரு தமிழரினதும் தலையாய கடமையாகும்.

ஊடுருவும் உளவாளிகள் பல்வேறு கோலங்களில் பல்வேறு வடிவங்களில் வருவார்கள் அவர்களை இனம்கண்டு தேசிய விடுதலைப் போராட்டத்தை பாதுகாக்க அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும். ●

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 21 . 01 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# சுனாமி கொடுத்த துணிவு...!

நாட்டில் அடுத்துவரும் ஆறு ஆண்டுகளுக்கு தேர்தல் எதுவும் நடைபெறமாட்டாது என சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

நாடு ஒரு பெரும் இயற்கை அனர்த்தத்தில் சிக்குண்டு இன்னும் முழுமையாக மீளாதநிலையில் இவ்வளவு அவசரமாக சனாதிபதி சந்திரிகா ஒரு தேர்தல் பற்றி பிரஸ்தாபித்துள்ளமைக்கான காரணம் யாவரும் அறிந்ததே.

இந்தவருட டிசம்பர் மாதத்துடனா அல்லது அடுத்த வருடத்துடனா சனாதிபதி சந்திரிகாவின் பதவிக் காலம் முடியுறுகிறதென்ற வாத பிரதிவாதங்கள் நாட்டில் நடைபெற்றுவந்த சூழ்நிலையில் சனாதிபதி சந்திரிகா இப்பொழுது நாட்டில் ஆறு வருடாங்களுக்கு தேர்தல் நடைபெறாது எனத்தெரிவித்துள்ளார்.

பொதுவாகவே அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஏதாவதொரு குழறுபடியை அவர் செய்யக்கூடும் என்ற எதிர்பார்ப்பு பரவலாகஇருந்து வருகிறது.

ஆனால், நாட்டில் இத்தகைய இடர்மிகு காலம் ஒன்றில் இதற்கான நடவடிக்கைகளை அவர் இவ்வளவு அவசரமாக மேற்கொள்வது அவரின் மனிதாபிமானம் தொடர்பாகவும் சந்தேகங்களை தோற்றுவிக்கிறது.

சுதந்திரக்கட்சியின் தலைவியும் நாட்டின் தலைவியுமாக இருந்து வருகிற சனாதிபதி சந்திரிகாவை அவரே கூட்டு ஏற்படுத்திக்கொண்ட ஜே.வி.பி. போன்ற கட்சிகளால் ஐம்பது சதத்துக்குக்கூட மதிப்பற்றவர் என ஏளனம் செய்யும் அளவுக்கு அரசியல் நெருக்கடியை சந்தித்து வந்தவர். இப்பொழுது ஒரு அரசியல் பலப்பரீட்சை ஒன்றுக்கு தயாராகிவிட்டார்.

சனாதிபதி சந்திரிகாவுக்கு இத்தகையதொரு துணிவை அளித்தது சுனாமி பேரனர்த்தம் என்றால் மிகையில்லை.

அதளபாதாளத்திலிருந்த நாட்டின் பொருளாதாரம் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சர்வதேச நாடுகள் வழங்கி வருகின்ற உதவிகளால் நிமிர்ந்துள்ளது.

இந்தப் பொருளாதார நிமிர்வும் இதனால் சுறுசுறுப்பாகிவிட்ட அவரது ஆதரவாளர்களினது துணிவும் சனாதிபதி சந்திரிகாவுக்கு பெரும் துணிவை அளித்துள்ளது.

இனி அடுத்துவரும் ஒருசில மாதங்களுக்குள்ளேயே நாட்டில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை சனாதிபதி சந்திரிகா மேற்கொள்வார் என எதிர்பார்க்கலாம்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா மேற்கொள்ளப் போகும் அதிரடியான அரசியல் நடவடிக்கை என்பது தன்னையும், தனது ஆட்சியையும் பண்டாரநாயக்கா பரம்பரையையும் பாதுகாப்பதாகவே இருக்குமேயொழிய மக்கள் தொடர்பாகவோ தீர்க்கப்படாத இனப்பிரச்சினைத் தொடர்பாகவோ இருக்குமென எவரும் எதிர்பார்க்கமுடியாது.

இதனால் நாட்டில் அத்தியாவசியமாகவும் அவசரமாகவும் மேற்கொள்ளவேண்டிய மக்கள் பணிகள் புறந்தள்ளப்படக்கூடியதொரு சூழ்நிலையே இருக்கிறது.

இதனை பெரும் தோற்றமாக தெரியாது இருக்க அவர் இராணுவ இயந்திரத்துக்கு உற்சாகமேற்றி இராணுவ போக்கையும் தூண்டிவிடக்கூடும்.

எனவே இந்த சுனாமி பேரனர்த்தமானது சனாதிபதி சந்திரிகாவை எல்லாவகையிலும் நிதியாக உதவி பாதுகாத்திருக்கிறதென்றே நம்பவேண்டியுள்ளது.

ஆனால், ஒரு வரையறைகளுக்கு அப்பால் அவரால் ஒன்றுமே செய்யமுடியாது என்பதை காலம் விரைவிலேயே உணர்த்தும்.

ஏனெனில் சிலரை சில காலம் ஏமாற்றலாம் ஆனால் பலகாலம் ஏமாற்றமுடியாது.

# சுனாமி அலையை விட மோசமானது பேரினவாத அலை

அண்மைக்கால வரலாற்றில் 2004-12-26 இல் நடந்த பேரழிவே உலகின் பெரிய இயற்கைச் சீற்றம் எனக் கூறுகின்றார்கள். இனம், மதம், மொழி, நாடு என்ற பாகுபாடுகள் இன்றி நாசம் செய்துவிட்டுப்பேரழிவு அலை ஓய்ந்துவிட்டது. இவ்வலையால் ஏற்பட்ட இழப்பும் பல ஆயிரம் கோடி ரூபாய்கள் என்று முதல் கணிப்பீடுகள் கூறுகின்றன. இந்தப் பேரலையின் பேரழிவுக்கு முதல் இலக்கு இந்தோனேசியா என்றால் இரண்டாவது இலக்குத் தமிழீழம் என்பதுதான் உண்மை.

இந்த உண்மையை மூடி மறைக்கச் சிங்களப் பேரினவாத அரசு பெரும் முயற்சிகளை எடுத்துவருகிறது. இனம் என்று பாராது, மொழி என்று பாராது, மதம் என்று பாராது அனைவரையும் அழித்துவிட்ட சுனாமி என்று கூறிவரும் அரசு தமிழ்ப் பகுதிகளின் அழிவையிட்டு வெளி உலகத்திற்கு செவ்வனே கூறுகின்றதா? இப்பகுதிகளில் ஏற்பட்ட அழிவுகளை இழப்புக்களைக் குறைத்து மதிப்பீடுசெய்து புள்ளி விபரங்களை வெளியிட்டுவருகின்றன. இவ் வழிவுகளைப் பார்வையிட ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திற்கே வழிவிடாத அரசு தமிழ்ப் பகுதிகளுக்கு நீதியான பங்களிப்பை வழங்கும் என்று எவராது நம்புவார்களா? நம்பத்தான் முடியுமா?

சுனாமியின் அவலத்தைப் போக்குவதற்கு உலக நாடுகள் ஏராளமான உதவிகளைக் கொட்டிக்கொண்டிருக்கின்றன. அத்துடன் தமது படைகளையும் இங்கு அனுப்பி உதவிக் கொண்டிருக்கின்றன. ஆனால் சிறிலங்கா இராணுவம் துப்பாக்கிகளை தோளில் சுமந்துகொண்டு ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளில் ஒவ்வொரு சந்திகளிலும் முக்கிய இடங்களிலும் காவல் பணியில் இருக்கிறது.

தமிழ் மக்களால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் நிவாரண நிர்மாணப் பணிகளைப் பார்த்து இன்று உலகமே வியந்துநிற்கிறது. குறைந்தளவு வசதிகள், குறைந்தளவு ஆளணி, குறைந்தளவு கனரக வாகனங்கள், ஆனால் ஆற்றல்மிகு தலைமை, உறுதிமிக்க விடுதலைப் போராளிகள் சீராகவும் கட்டுப்பாட்டுடனும் செயற்படுவதைப் பார்த்து அனைத்துலக ஊடக நிறுவனங்கள் ஆச்சரியப்படுகின்றன. பேரலை தாக்கிய உடனேயே புலிப்போராளிகள் விரைந்து வந்து இயங்கியதை அவர்கள் பார்த்து திகைத்துவிட்டனர். சிறிலங்கா அரசு என்ன செய்வது என்று திகைத்து நிற்கிறது. உலகைப் பார்த்து உதவி செய்யுங்கள் என்று கேட்கிறது. ஆனால் முதலில் மக்களின் உதவிக்காக விடுதலைப் புலிகள் இறங்கியது தமிழீழத்தின் கட்டமைப்பு எவ்வளவு திறமையுடன் செயற்படுகின்றது என்பதைக் காட்டி நிற்பதாக அவ்வூடகங்கள் கூறுகின்றன. சி.என்.என். தொலைக்காட்சி வொஷிங்டன் போஸ்ற், சிக்காக்கோ ரிபியூன், பி.பி.சி வானொலி போன்ற உலக முதல்தர ஊடகங்களே தமிழீழக் கட்டமைப்பைப் பற்றிக் கூறுவது யதார்த்த நிலைமையைப் ஏற்றுக்கொள்வதாகக் கருதலாம். இலங்கைத்தீவில் எவ்வாறு நேரக் கணிப்பீடு உள்ளதென்பதையும் இரு வேறு நாடுகள் உள்ளன என்பதையும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

ஆனால் இவற்றை எல்லாம் இருட்டடிப்பு செய்துவிடலாம் என்று சந்திரிகாவின் அரசு நினைக்கின்றது. அதனால்தான் கொபி அனான் தமிழ்ப்பகுதிகளுக்குச் செல்லவிடாது தடுப்பதில் முனைப்புடன் செயற்பட்டது. ஐ.நா.செயலர் முன்பு ஒருமுறை இத்தீவுக்கு வருகைதர இருந்தார் அப்பொழுது அவரது பயண ஒழுங்கில் முல்லைத்தீவும் இருந்தது. அதனை விரும்பாத அரசு அதனைத்தடுக்க முயற்சித்தது அதன் விளைவு ஐ.நா. செயலரின் இலங்கை வருகை நிறுத்தப்பட்டது. தற்பொழுது சுனாமி அனர்த்தங்களைப் பார்வையிட வந்தவருக்கும் இதேநிலைமைதான் ஏற்பட்டுள்ளது. இது துலாம்பரமாக ஒன்றை உலகுக்கு உணர்த்தியுள்ளது. அதுதான் தமிழ்மக்களைப் பொறுத்தவரை சுனாமி அலையிலும் கொடியது சிங்களப்பேரினவாத அலை என்பதாகும். சுனாமி அலை வந்தது, அழித்தது. ஆனால், அது போய்விட்டது. ஆனால், சிங்களப் பேரினவாத அலை 1948க்கு முன்னரே வந்தது இன்றும் நிலை கொண்டு அழித்துவருகிறது. சுனாமி அலை வந்தவேகத்தில் உயிர்களைப் பறித்தது, உடைகளை அழித்தது திரும்பிச்சென்றுவிட்டது. ஆனால் சிங்களப் பேரினவாத அலை வந்தது ஆக்கிரமித்தது. தமிழ் மண்ணில் குறிப்பிட்டளவைத் தன்னுடன் சிங்களக் குடியேற்றத்தால் கபலீகரம் செய்தது,மேலும் ஆக்கிரமிக்கவும் அழிக்கவும் அலை அடித்துக் கொண்டிருக்கிறது. இந்த யதார்த்தத்தை உலகம் அறியவைத்துள்ளது சந்திரிகாவின் அரசு. அரசு போடும்


## சிலம்பு

கபட நாடகம் வெளிவந்துகொண்டிருக்கிறது. மேலெழுந்த வாரியாகச் சமாளித்துவிட்டதாகவும், சுனாமி அலையை வைத்து அரசியல் ஆதாயம் கிடைத்துவிட்டதாகவும், பொருளாதார நிமிர்வு ஏற்பட்டுவிடும் என்று அரசு நினைத்துக்கொண்டிருக்கிறது. அதனால் இராணுவ அடக்குமுறையை மேலும் இறுக்கும் முகமாக நிவாரணப் பணிகளில் இராணுவத்திற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை இராணுவத்தின் மேல் வெறுப்படைந்துள்ள தமிழ் மக்களை மேலும் விரக்திக்கும், வெறுப்புக்கும் உள்ளாக்குமேயன்றி வேறு எதனையும் சாதித்துவிடப் போவதில்லை. தமிழ் மக்களுக்கு என்று எடுத்துச்செல்லப்படும் பொருட்களையே வழிப்பறி செய்யும் இராணுவம் தமிழ் மக்களுக்கான நிவாரணத்தை ஒழுங்காக கொடுக்குமா? தமிழர் குடியிருப்புக்களை தமிழர் வளமான மண்ணை ஆக்கிரமித்து நின்று கொண்டு பாதுகாப்பு பிரதேசம் என்று கூறிவருகின்ற இராணுவத்திடமிருந்து தமிழ் மக்கள் நேர்மையான எதனையும் எதிர்பார்க்க மாட்டார்கள். இதனைச் சந்திரிகா நன்கு அறிந்திருப்பார். ஆனால் அவரது மேலாண்மை ஆதிக்க வெறி இராணுவத்திடம் நிவாரணப்பணிகளை ஒப்படைக்கவைத்துள்ளது. தமிழ்மக்களின் எதிர்ப்புப் பல இடங்களில் வெளிப்பட்டுள்ளது. மக்கள் மனங்கள் குமுறிக்கொண்டிருக்கின்றன. அந்தக்குமுறலையும் கட்டுப்படுத்திவைத்திருப்பவர்கள் விடுதலைப் புலிகளேயாகும். மக்களிடம் சென்று ஆறுதல் கூறி அமைதியாக இருக்கும்படி கூறி வருகின்றார்கள் புலிகள். அப்படியிருந்தும் சில முகாம்களிலிருந்து மக்கள் வெளியேறிவிட்டனர். இராணுவத்தையும் பொலிசாரையும் அப்புறப்படுத்தும்படி மக்கள் கோரி வருகின்றனர்.

பெருமளவான தமிழ்பேசும் மக்களையும், கோடிக்கணக்கான சொத்துக்களையும் தமிழ் மக்கள் இழந்துள்ளனர். ஆனால் சிங்களப் பேரினவாத அலையால் 80000 பொதுமக்கள் 18000 புலிப்போராளிகளும் பல ஆயிரம் கோடி ரூபாய் பெறுமானச் சொத்துக்களையும் மண்ணின் ஒரு பகுதியையும் இழந்து நிற்கிறது. தமிழரின் மனித உயிர், சொத்து நிலப்பரப்பு என்பனவற்றைப் பார்க்கும்பொழுதே தெரிகின்றது. சுனாமி அலையைவிட பேரினவாத அலை பேரழிவைத் தந்துள்ளதென்பதை. எனவே தமிழ் மக்கள் தங்கள் இழப்புக்களையிட்டு கவலை கொண்டாலும், உரிமைகளைவிட்டே அதிக கவலை கொண்டுள்ளார்கள்.


உலகநாடுகள் சமூகம் யதார்த்த நிலையை இன்று உணர்ந்துகொள்ள அரசின் செயல்கள் வழிவகுத்துள்ளன. தமிழ்ப் பகுதிகளைப் பற்றியபிழையான தரவுகளைச் சுட்டிக்காட்டிச் சரியான விபரங்களை உலகத்தின் முன் கொண்டுவரவேண்டியது தமிழ் ஊடகவியலாளரின் கடமையாகும். உலகம் சரியாய்ப் புரிந்துகொள்ளுமானால், சமாதானத்தை இத்தீவில்

(18 பக்கம் பார்க்க..)



# மலிவாகிப்போன மனிதநேயம்

அமெரிக்க டொலருக்கு எதிரான சிறிலங்கா ரூபாயின் பெறுமதி 105 ரூபாயில் இருந்து 97 ரூபாயாக எகிறிப் பாய்ந்துவிட்டது. கடந்த 3வருட காலத்தில் உச்ச அதிகரிப்பாக, அதாவது 6% பெறுமதி அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. முப்



(இந்தியாவில் சுனாமியால் கொல்லப்பட்ட மக்கள்)

படைகளுடைய தலைமையகங்களில தூசு பிடித்துக் கிடந்த கொள்வனவுக்கான கோவைகள் தூசு தட்டப்பட்டு எதிர்வரும் வாரங்களில் பாதுகாப்பமைச்சிடம் முன்வைக்கும் எதிர்பார்ப்பில் இராணுவ உயர்அதிகாரிகள் பலர் இப்போதே நாக்கை தொங்கப் போட்டுக்கொண்டு காத்திருக்கிறார்கள். சிறிலங்காவினதும் தமிழீழத்தினதும் கரைகளில் பன்னாட்டு படையினர் வந்து குவிகிறார்கள். பல மில்லியன் கணக்கான நிதி உதவிகள் சிறிலங்காவின் திறைசேரியை நிரப்பிக்கொண்டு இருக்கின்றன. இவை எல்லாவற்றுக்குமான காரணத்தை ஒரேவார்த்தையில் சொல்லி விடலாம்.

சுனாமி! NP இந்துமாகடலில் சுனாமி அடித்து ஓய்ந்து ஈரம் காயமுன இந்தி யப்படையினர் 1000 பேர் இலங்கையில் கால்வைத்தனர். அவர்கள் முதலில் செய்தவேலை, வலகம்பா கடற்படை முகாமின் நிலைகளை புனரமைப்புச் செய்யத்தொடங்கியது தான். இராணுவ முகாம்களை அவர்கள் புனரமைக்கவில்லை. இதற்கான காரணத்தைதேட, அண்மையில் பிரபல இராணுவ ஆய்வாளர் போள் ஹறிஸ் கலந்துகொண்ட கருத்தரங்கில் தென்கிழக்காசிய கற்கைகளுக்கான நிலையபணிப்பாளர், பேராசிரியர் சூரிய நாராயணன் முன்வைத்த கூற்றுக்குச் செல்லவேண்டியிருக்கும். “இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக, பாக்குநீரிணையின் மூன்றாவது கடற்படையாக வளர்ந்து கொண்டிருக்கும் கடற்புலிகளை இந்தியா திறனிழக்கச் செய்ய வேண்டும்”என்று அப்போது அவர் குறிப்பிட்டிருந்தார். இதை தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவால் நேரடியாகசெய்ய முடியாது. அடுத்த தெரிவாக சிறிலங்கா கடற்படைக்கு கொம்பு சீவிவிடும் வேலை நடக்கிறது. இதுவும் மனித நேயப் பணிதான் என கண்துடைப்பு நாடகங்களும் அரங்கேறுகின்றன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கென அமெரிக்கா ஒதுக்கிய நிதியின் அளவு குறித்து, நிவாரண உதவிகளை பொறுத்தவரை மேற்குலகம் கஞ்சத்தனமாக நடந்து கொள்கின்றது என ஐ.நா. செயலர் கொபி அனான் கூறியிருந்தார். அதற்குப் பின்பு அமெரிக்கா தன் உதவித் தொகையை மூன்றுமடங்காக அதிகரித்தது.

நிவாரண மையக்குழு அமைக்கப்பட்டபொழுது சீனாவை அதற்குள் உள்வாங்கவேண்டும் என்ற கொபி அனானின் கோரிக்கை அமெரிக்காவாலும் இந்தியாவாலும் நிராகரிக்கப்பட்டது. இந்து சமுத்திர பிராந்தியத்தில் தலைமைவகிக்கும் நாடு என்ற வகையில் இந்தியாதான் பிரச்சினையைக் கையாளவேண்டும்; இதில் சீனா வகிக்கக்கூடிய பங்கு எதுவும் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகமொத்தம் நிவாரணதுக்கான மனிதநேயப்பணிகளை இந்தியா தலைமைவகித்து மேற்கொள்ளவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இந்தப்பக்கத்தில் இரண்டு புகைப்படங்கள் பிரசுரமாகியிருக்கின்றன. ஒருபடத்தில் பொதுப்புதைகுழி ஒன்றில் சுனாமியில் கொல்லப்பட்டவர்களின் பழுதடையாத மனித உடல்கள் தாறுமாறாகக் குவிக்கப் பட்டிருக்கின்றன.

மனித சடலங்களுக்கு கொடுக்கப்படவேண்டிய அடிப்படைகௌர



வம் கூடக்கொடுக்கப்படாமல் வீசப் பட்டுக்கிடக்கிறார்கள். இரண்டாவது படத்தில் உரிமைகோர எவருமின்றி பிணங்கள் வீதியில் கிடக்க, அவரவர் தம்பாட்டில் போய்க்கொண்டிருக்கிறார்கள். இது இந்தியாவின் மனித நேயத்தின் இன்னொரு முகம். தாயகத்தில் சுனாமியால் கொல்லப்பட்ட 18000க்கு மேற்பட்டோரின் மனிதநேயப் பணிகளை செவ்வனே செய்யாத இவர்கள் மனித நேயப்பணிகளை கையாள பொருத்தமானவர்கள்தானா?

சுனாமிக்குப்பின் MSF ஐச் சேர்ந்த மருத்துவர்கள் குழுவொன்று, குச்சவெளி மருத்துவமனையை துப்புரவு செய்து பணியைத்தொடங்க ஆயத்தமானபோது, கூடாரத்துக்குள் தலையை நீட்டியஒட்டகம்போல் வந்த இந்திய இராணுவ மருத்துவ அணியினர் அந்த இடத்திலிருந்து வெளியேற மறுத்துவிட்டனர். MSF மருத்துவர்கள் அங்கிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். இது இந்திய மனித நேயத்தின் அடுத்த பக்கம்.

சுனாமிக்கு பின்வந்த தென்னிலங்கை மற்றும் இந்தியப்பத்திரிகைகளிலே, கடற்புலிகளுக்கு ஏற்பட்ட சேதத்தை மறைக்கவே தன்னார்வ தொண்டர் குழுக்களுக்கு புலிகளின் பகுதிக்குள் சென்று பணியாற்ற புலிகளால் அனுமதிவழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு நிவாரணப் பணிகளுக்குச்செல்ல விரும்பிய தன்னார்வ நிவாரணத்தொண்டர்களை அந்தமானின் முதன்மை நகரான போட்பிளேயருக்கு அப்பால் செல்ல இந்திய அரசு அனுமதிக்கவில்லை. அங்குள்ள ஆதிவாசிகளின் இயல்பு வாழ்க்கையை குழப்பக்கூடாது என்பதாலேயே அனுமதி வழங்கப்படவில்லை எனக்கூறப்பட்டாலும் அங்கு இந்தியப் பாதுகாப்புத் துறையின் கருவி கல நிலையங்கள் உள்ளதும், கூட்டுப் படைக்கட்டளைப் பணியகம் உள்ளதும்தான் உண்மையான காரணமாகும். சர்வதேசசமூகம அந்தமானில் இறங்கினால், ஏற்படக் கூடிய பாதுகாப்புப் பிரச்சினைகள் மனித நேயப்பணிகளுக்கு மேலாக முன்னுரிமை பெற்றுவிட்டதையே இது காட்டுகிறது.

ஜேர்மனிபோன்ற ஐரோபபிய யூனியன் உறுப்பு நாடுகள், 500 மில்லியன் டொலர்கள்வரை அன்பளிப்புச்செய்தும், ஐரோப்பிய நாடுகளை, மையக்குழுவில் இருந்து ஓரம் கட்டும் அமெரிக்காவின் தந்திரோபாயத்தை ஐரோப்பியயூனியன் கண்டனம் செய்ததைத்தொடர்ந்து ஐரோப்பிய யூனியனும் கனடாவும் மையக் குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நிவாரணப்பணிகள் என்று வந்ததுமே சிறிலங்காவுக்கு 1500 மரீன்களை அனுப்பப் போவதாக அமெரிக்கா தம்பட்டம் அடித்தது. பின்னர் இந்தத்தொகை குறைக்கப்பட்டு, குறைக்கப்பட்ட தொகையினர் இந்தோனேசியாவுக்கு அனுப்பப்பட்டனர். முதலில் இங்குவரவிருந்த அமெரிக்காவின் பாரிய போர்க

**வின்சென்ற் புளோறன்ஸ்**

கப்பலும் இந்தோனேசியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டது. ஈராக்கில் நிகழ்த்திய ‘மனிதநேயப் பணிகளுக்கு’ கழுவாய் தேடி முஸ்லிம் உலகுடனான தனது உறவை சீர்செய்யும் முயற்சி இது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை இந்தோனேசியாவுக்கு 1 பில்லியன் டொலர்களை வழங்க முன்வந்திருக்கும் அவுஸ்திரேலியா இலங்கைக்கு வெறும் 5மில்லியன் டொலர்களை அளிக்கவிருக்கிறது. இவற்றிலிருந்து ஒவ்வொரு நிதிவழங்கும் நாடும் நிதி பெறும் நாடுகளின் பூகோள மற்றும் அரசியல் முக்கியத்துவங்களை அடிப்படையாகக்கொண்டே தமது நிதி வழங்கலை தீர்மானிக்கின்றன என்பது தெளிவாகிறது. இதில் மனித நேயப் பணிகள் மட்டும்தான் என்றில்லை.

வெளிநாட்டு செஞ்சிலுவைப் பணியாளர்கள் வடக்குக் கிழக்கில் பணியாற்றுவதற்கு ICRC அனுமதி மறுத்துவிட்டது. இதனால் அப்பணியாளர் விரக்தியோடு வெளியேறி விட்டனர். யூ ரூ ICRC?

சிறிலங்காவின் கடற்கரைகளுக்கு அப்பால், நங்கூரமிட்ட பிரித்தானிய போர்க்கப்பலான HMS சதாமில் இருந்து கிழக்கு கடற்கரை நெடுகவான் வழி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மீட்பு வேலைகள பெரும்பாலும் முடிந்து இடிபாடுகளை துப்புரவுசெய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இவர்கள எதை தேடுகிறார்கள்?

புலிகள் இன்னமும் அமெரிக்காவின் பயங்கரவாத பட்டியலில் இருப்பதால், எமது வான் கலங்களையோ ஆளணியினரையோ ஒரு போதும் அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டுபோகமாட்டோம் என்று பெயர் கூறவிரும்பாத, அமெரிக்க அதிகாரி ஒருவர். “நிவாரண உதவிகளை சகல பகுதிகளுக்கும் நேர்மையாக பகிர்ந்தளிப்பதெனபது இலங்கை அரசைப் பொறுத்தவிடயம்'' என்று கூறியுள்ளார்.

இந்தியாவும் இதே நிலைப்பாட்டையே எடுத்துக்கொள்ளும் என பெயர்குறிப்பிடுவதை விரும்பாத இந்திய அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

ஊழல் விடயங்கள் தொடர்பான அரசின் கடந்தகால வரலாற்றைப் பார்க்கும்பொழுது வெளிநாட்டு உதவிகளை சரியானமுறையில் பகிர்ந்தளிப்பதில் அரசும், வேறு



(இந்தியாவில் ஒரு குழிக்குள் போட்டு மூடப்படும் சடலங்கள்)

அதிகாரிகளும் அக்கறைகொள்வார்கள் என்பதில் சிறிதளவு நம்பிக்கையே கொள்ளக்கூடியதாக இருக்கிறது என்று பிரபல ஊடகவியலாளரான பிறெட்றிக்கா ஜான்ஸ் (சண்டேலீடர் 9.1.2005) கூறியிருப்பது மேலே குறிப்பிட்ட பொறுப்பற்ற கூற்றுகளுக்கு சாட்டையடி கொடுப்பதாகவே உள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகியமூன்று நாடுகளும் நிலத்தடி அணுகுண்டுப் பரிசோதனைகள் நிகழ்த்தியுள்ளன. இந்தப் பரிசோதனைகள் காரணமாக, புவிமேலோடு சேதமுற்றதாலேயே, புவி நடுக்கத்துக்கு உட்பட முடியாதவை எனக் கருதப்பட்ட இந்து சமுத்திரப்பகுதிகள். சுனாமி அனர்த்தத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்ற எண்ணக் கருவும் முன்வைக்கப்பட்டுள்ளது. இது உண்மையாக இருந்தால், இந்த நாடுகள் பிள்ளையையும் கொன்று தொட்டிலையும் ஆட்டும் வேலையை செய்பவையாகவே கருதப்படவேண்டும்.

UTHR(J) போன்ற ‘முகவரி இல்லாத’, “அரைவேக்காட்டு” நிபுணர்களின் அறிக்கைகளை அடிப்படையாக வைத்து, சுனாமியால், ஆதரவற்றவர்களாக ஆகிவிட்ட சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதாக புலிகள் மீது குற்றம் சாட்டும் யுனிசெப் போன்ற சர்வதேச அமைப்புகளின் மனிதநேயம், ஈராக்கில், வயது குறைந்தவர்களான 65 அமெரிக்கர்களை அமெரிக்கா ஈடுபடுத்தியது என்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது தொடர்பாகவும் பிரித்தானியாவில் 16 வயதில் இராணுவத்துக்கு ஆட்சேர்ப்புச்செய்வது தொடர்பாகவும் சுட்டுவிரல் நீட்ட முடிவதில்லையே? சுட்டு விரல் நீட்டாமல் இருப்பதற்கான விலை என்ன?

இவற்றோடு ஐநா. செயலாளர் நாயகம் கொபிஅனான் கூறியுள்ள ஒரு கருத்தையும் சேர்த்துப்பார்க்க வேண்டும். “உதவிகள் வழங்கப்போவதாக உறுதியளிக்கும் உலகநாடுகள் காலம செல்லச்செல்ல தங்கள் வாக்குறுதிகளை மறந்துவிடுவார்கள். இறுதியில் கிட்டத்தட்ட 30 விழுக்காடு அளவான உதவிகளையே வழங்குவது வழக்கமாகிவிட்டது'' என்று அவர் கூறியிருக்கிறார்.

இவை எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கும்பொழுது சர்வதேச சமூகம் காட்டும் மனிதநேயத்தின் விலைஎன்ன? என்று உரத்துக் கத்த வேண்டும் போலிருக்கிறது. ●

# பாதிப்பு யாருக்கு...?

ஐ.நா செயலாளர் கொபிஅனான், கனேடியப் பிரதமர் யோன் போல் ஆகிய இருவரையும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் செல்லவிடாது தடுத்துவிட்டதாக ஜே.வி.பி. பெருமைப்பட்டுக்கொள்வது போலத்தெரிகிறது. கொபி அனான் வடபகுதிக்குச் செல்வதை தானே தடுத்துவிட்டதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார்.

இதேவேளை கொபி அனான், கனேடியப் பிரதமர் ஆகியோர் இப்பகுதிகளுக்கு வருகை தராவிட்டாலும் அதனால் எதிர்மறையான விளைவுதான் அரசாங்கத்திற்கு எட்டியுள்ளது என்பது வெளிப்படையானவிடயம். ஒன்று அரசாங்கம் தமிழ் மக்கள் விடயத்தில் எவ்வகையில் பாரபட்சமாக நடந்துகொள்கிறது என்பது ஐ.நா. வரை தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐ.நா செயலராயினும் சரி கனடிய பிரதமராயினும் சரி ராசதந்திர நடைமுறைக்கு உட்பட்டே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வராதிருந்தனர் என்பது வெளிப்படையான ஒன்றாகும். அதாவது சிறிலங்கா அரசாங்கத்தின் விருந்தாளிகளாக வந்தமையாலேயே அவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு வராதிருந்தனர் என்பது வெளிப்படையானது.

இங்கு இதிலே யாருடைய விருப்பத்திற்கு அமைய சிறிலங்கா இரு தலைவர்களையும் வடக்கு கிழக்கிற்கு செல்லவிடாது தடுத்தது? பொதுவாக ஜே.வி.பி.யினரே இதற்கு முழு முட்டுக்கட்டை போட்டிருக்கின்றனர். இதுதொடர்பாக ஜே.வி.பி.க்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையில் முறுகல் நிலை தோன்றியிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. இதிலே தமிழ் மக்களின் பிரதேசத்தில் சுனாமியால் ஏற்பட்ட பேரழிவை பார்க்கவிடாது தடுத்துவிட்டதாக அரசாங்கம் கருதினாலும் இராசதந்திர நடைமுறையின் கீழ் சிறிலங்காவுக்கும் பல தர்மசங்கடம் உள்ளன.

எவ்வாறு வடபகுதிக்கு செல்லவிரும்பிய கொபிஅனான் அங்கு செல்ல முடியாமையினால் சங்கடப்பட்டாரோ அதேபோல அவரது விருப்பத்திற்கு மாறாக வடபகுதிக்கு செல்லவிடாது தடுப்பதிலும் அரசாங்கத்திற்கு சங்கடங்கள் உண்டு. அதேபோல புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் கனேடிய நாட்டின் பிரதமர் இலங்கை வரும் போது தமிழ் மக்கள் வாழும் பகுதிகளுக்குச் செல்லமுயற்சி எடுக்கையில் இது ராசதந்திர ரீதியாக தடுப்பது என்பதும் சிரமமானதும் அசௌகரியமானதுமாகும். ஆனால் சிறிலங்கா அரசு இதற்காக குறித்த அளவுக்கு நிர்ப்பந்தத்துக்கும் உள்ளாகியுள்ளதாகவே கொள்ளத் தக்கதாகும்.



இதனை யாருடைய அழுத்தத்திற்கு அடிபணிந்து சனாதிபதி சந்திரிகா செய்திருப்பார் என்ற கேள்விக்கும் ஜே.வி.பியை சுட்டிக் காட்டுவதும் தவறாகமாட்டாது.

ஆனால் இதனால் பாதிக்கப்படப்போவது இப்போதைக்கு சனாதிபதி சந்திரிகாவாக இருப்பினும் ஒட்டு மொத்தப்பாதிப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கேயாகும்.

ஜே.வி.பியைப் பொறுத்த வரை இனவாத முதலீட்டினயே முற்று முழுதாக நம்பியிருக்கிறது சிங்கள இனத்தின் முற்றுமுழுதான காவலர்கள் தாமே என்பதை வெளிப்படுத்துவது மட்டுமே அவர்களது குறிக்கோள்.

அது இலங்கையிலுள்ள ஏனைய இனமக்கள் குறித்து சிறிதும் கவலைப்படமாட்டாது அதனது வாக்குவங்கிக்கு அது அவர்களை நம்பியிருக்கவும் இல்லை. அதாவது ஜே.வி.பி ஏனைய இன மக்களை அரவணைத்துக்கொள்வதற்கான சைகையை சிறிதும் காட்டவில்லை.

அதேபோல ஐ.நா. மன்றம் மேற்குலகம் என்பவை குறித்தும் அது கவலைகொள்ளவில்லை அவற்றுடன் ராசதந்திர ரீதியான தொடர்புகள். செயற்பாடுகளை அது வெளிக்காட்டவில்லை. சீனாவுடன் அது அவ்வாறான தொடர்புகளை கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகின. ஆனால் மேற்குலகத்துடன் அவ்வாறான தொடர்புகளைக்கொண்டிராத அதேவேளை அவர்களை ஆக்கிரமிப்பாளர்களாகவே விமர்சித்து வருகிறது. மிக அண்மைக்காலம் வரை வெள்ளைத் தோலர்களை கடுமையாகச் சாடிவந்தது இப்பொழுதும்கூட அவர்களால் சகித்துக்கொண்டிருப்பதாகவே கூறமுடியும். எனவே அவர்கள் குறித்துஅது கவலைப்படாது.

அதேவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவரது அரசியல் அதிகாரத்தின் இறுதிக் கட்டத்தில் இருப்பதாகவே கூற முடியும் இப்பொழுது அரசியலமைப்பு மற்றும் பதவி நீடிப்பு பெரும்பாலும் சாத்தியமில்லை என்றே கூறப்படுகிறது. நாட்டின் தலைவி என்றமுறையில் சில சங்கடங்கள் இருப்பினும் அவருக்குப்பெரிய பாதிப்பில்லை.

ஆனால் தென்னிலங்கை அரசியலில் முக்கிய சக்தியாகிய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நிலை அப்படியில்லை ஜே.வி.பி நாளையே கூட்டை முறித்துக்கொண்டு வெளியேறி இந்த ஆட்சிக்காலத்தின் பலவீனங்கள் எல்லாவற்றுக்கும் சிறிலங்காசுதந்திரக்கட்சியே பொறுப்பு என்று சுலபமாகக்கூறிவிடும் ஜே.வி.பி தனக்குபலம்சேர்ப்பதற்காகவே கூட்டைஏற்படுத்திக்கொண்டது என்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு தெரியாது இராது. எனவே இன்றைய இந்த ராசதந்திரச் செயற்பாடுகளின் பாதிப்பு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கே ஏற்படும். இப்பொழுது சிறிலங்கா சுதந்திரக்கட்சியினுள் சிரேஷ்ட உறுப்பினர்கள் இது குறித்து சந்திரிகாவிற்கு முறையிடுகின்றனர். ஆனால் சந்திரிகாவோ தனது எஞ்சிய பதவிக்காலத்தை பிரச்சினையின்றிக் கழிக்க முடிந்தால் பதவிக்காலத்தை நீடிக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் காவுகொடுத்துக்கொண்டிருக்கிறார் என்றே கூறமுடியும்.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# மக்களுக்கான ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும்

ஆசிய நாடுகளில் இயற்கையின் சீற்றத்தால் மனிதப் பேரவலம் கண்டு உலகம் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது தென்னிலுங்கையிலும் தமிழர் தாயகத்திலம் ஆழிப் பேரலை அனர்த்தம் ஏற்படுத்திய அழுகுரல்கள் இன்னமும் ஓயவில்லை.இதுபோன்ற பேரவலம் எங்கு நடைபெற்றிருந்தாலும் அது இரக்கத்திற்கும் அனுதாபத்திற்கும் உரியது என்பதில் வேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. இருந்தாலும் தழிழர் தாயகப் பகுதியின் இழப்பு என்பது அதிகமாகவே இருக்கிறது. ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படும்போது அனைவரும் வீடுகளிலும் அன்றாட கடமைகளிலும் வழமைபோல் ஈடுபட்டவேளையில்தான் இவ்வனர்த்தம் நிகழ்ந்தது. அந்த நேரம் ஏதோ உயிர்தப்பிக் கொள்ளவேண்டும் என ஓடியவர்கள உயிர்தப்பியதுடன் கடல் பார்க்கச் சென்றவர்கள் கடலோடு சென்றனர். இறந்தவர்களோ அல்லது உயிர் தப்பியவர்களோ சுனாமி வரப்போகிறது என முன்னர் தெரிந்து வைத்துக் கொண்டு தமது உடமைகள் ஆவணங்களை எடுத்துக்கொண்டு உயிர் தப்பிக்கொள்ளலாம் என்று தெரிந்தும் இருக்கவில்லை. அல்லது ஆவணங்களையும் உடமைகளையும் எடுக்கவில்லை. இன்று எந்த ஒரு ஆவணமும் அற்ற நிலையில் முகவரி அற்றவர்களாக தங்கள் ஒவ்வொருவரையும் அடையாளப்படுத்தமுடியாத அளவிற்கு நலன்புரிநிலையங்களில வாழ்ந்து வருகின்றனர்.



இவர்களுக்கான அடிப்படை வசதிகள் அத்தியாவசிய நடவடிக்கைகள், ஆவணங்கள் வழங்கும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது. இவற்றை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கைகள் ஏதாவது முன்னெடுக்கப்படுகிறதா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது? இன்று ஏதோ உயிர்தப்பியவர்களை வாழவைப்பதற்கான ஒவ்வொரு நடவடிக்கைகளையும் ஏதோ இயன்ற அளவு தமிழர் தாயகப் பகுதிகளில் மனதாபிமானமுள்ள அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டுவருகிறது. இவை ஒருபுறம் இருக்க இன்று தமிழ் மக்களுக்கு உள்ள முக்கியபிரச்சினை அவர்கள் எங்கிருந்தாலும் வீட்டில் இருந்து வெளியே போவதானால் தேசிய அடையாள அட்டை ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இருக்க வேண்டும். இது இனவாதசக்திகள் செய்து வருகிற ஒரு அடாவடித்தனம். இன்று நேரடியாக சில சம்பவங்களை பார்க்கக்கூடியதாக உள்ளது. அதாவது ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் அதுவும் குறிப்பாக தமிழர் தாயகப்பகுதிகளில் வாழுகிற மக்கள் இராணுவ தடைமுகாம்களை தாண்டுகின்ற போது பெரும் சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றனர். கடந்தவாரம் வடமராட்சி கிழக்கில் இருந்து சுனாமியால் உறவுகளையும் உடமைகளையும் இழந்தசோகம் மாறவில்லை. தனது அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் சென்றபோது முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து சிறிலங்கா படையினரால் துருவித்துருவி விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவருடைய மனம் பாதிக்கக்கூடிய வகையில் அந்த இடத்தில் படையினரின் கெடுபிடி அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால், பாதிக்கப்பட்டவர் தன்னுடைய நிலைப்பாட்டை தெளிவுப்படுத்தியும் அதனை படையினர் கருத்தில் எடுக்கவில்லை. இது முகமாலையில் மட்டுமல்ல, தமிழர் தாயகத்தில் வாழுகின்றவர்கள் இராணுவ சோதனைச்சாவடிகளைத் தாண் டும்போது எதிர்கொள்கின்ற ஒரு பிரச்சினை. இது ஒருபுறமிருக்க வங்கிகளிலும் இவ்வாறான பிரச்சினைகள் இருக்கின்றன. அது நடைமுறையில் இருக்கவேண்டும். கிளிநொச்சி வங்கி ஒன்றில் பாதிக்கப்பட்ட ஒரு வயோதிபர் பணம் எடுக்க வரும்போது அவரிடம் ஆவணம் ஏதும் இருக்கவில்லை. கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதமும் உதவி அரச அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதமும் தான் இருந்தது. அதற்கு வங்கி அனுமதிக்கவுமில்லை. அதற்கான முழுமையான பதிலையும் சொல்லவில்லை இதனை நாம் உறுதிப்படுத்தமுடியாது என்ற பதில் தான் வந்ததேதவிர, அதற்கு என்னசெய்யவேண்டும் என்ற பதில் வரவில்லை. காலை 10மணி முதல் 12.30 மணிவரையும் காவல் நின்று எந்தப் பதிலையும் அவர் பெற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் பதிலாக இருந்தது. உரிய ஆவணங்கள் இல்லை என்றாலும் அதற்கான மாற்றுத்திட்டங்களை தயாரித்து பாதிக்கப்பட்டவர்களின் மனநிலை பாதிக்காதவண்ணம் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இது திணைக்கள அதிகாரிகளிடமோ அல்லது படையினரிடமோ சிறிதளவும்கிடையாது.

இன்று செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. அதாவது அனர்த்தம்காரணமாக உயிரிழந்தவர்களுக்கான இறப்பு சான்றிதழ் வழங்குதல் உயிர்தப்பியவர்களுக்கு பிறப்புச்சான்றிதழ்கள் வழங்குதல் அடையாள அட்டைகள்வழங்குதல்போன்ற நடவடிக்கைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அரச செய்திகள் வெளியாகின்றன. ஆனால், இதுவரை எதுவும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இவ்விடயத்தில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டியதேவை உள்ளது. இன்று இயற்கை அனர்த்தம் காரணமாக ஒருலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை இழந்துள்ளனர் எனப்புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே இவ்வாறு உடமைகளையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்களையும் இழந்துமுகவரி அற்றவர்களாக இன்று அல்லற்படும் மக்களின் நலனை கருத்தில்கொண்டு அரச திணைக்களங்கள் அரசசார்பற்ற திணைக்களங்கள் கிராமஅலுவலர்கள், சமாதான நீதவான் என எல்லோரும் ஒன்றிணைந்து இவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அல்லது உடனடித்தேவைகளை பூர்த்திசெய்யக்கூடியவகையில் மாற்று நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இது எமது எல்லோரினதும் கடமையாகும். அதாவது உறவுகளையும் உடமைகளையும் இழந்தவர்களின் மனநிலை பாதிக்கப்படும் வகையில் எந்த செயற் பாட்டையும் செய்யாது அவர்களுக்கு எந்தவகையிலும் நாம் எல்லோரும் உதவவேண்டும்.

**சு.பாஸ்கரன்**

# அப்பாசின் தேர்தல் வெற்றியும் பலஸ்த்தீனத்தின் எதிர்காலமும்



பலஸ்தீன சனாதிபதித் தேர்தலில் அப்பாஸ் வெற்றி பெற்றுள்ளார். யசீர் அரபாத்தின் ஆட்சியின்போது பிரதமராக இருந்தது மட்டுமன்றி அரபாத்தின் மறைவுக்குப் பின்பு தற்காலிக சனாதிபதியாகவும் பதவி வகித்தவர். இவரது வெற்றியினால் பலஸ்தீன விடுதலைப்போராட்டம் புதிய பரிமாணத்தை எடுப்பதுடன், இஸ்ரேலுடனான உறவுக்கும் புதிய பரிமாணம் கிடைக்குமென்ற நம்பிக்கை எல்லோர்மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. அதனை விரிவாகப் பரிசீலிப்போம்.

சனாதிபதி அப்பாஸ் அரபாத்தின் அரசியல் வாரிசு என்ற நம்பிக்கை அநேக பலஸ்தீனியரிடம் உண்டு. அவ்வகையான அரசியல் வாரிசாக



அப்பாஸ் காட்டிக்கொண்டதுடன் மக்கள் மத்தியில் அரபாத்திற்குரிய செல்வாக்கையும் கௌரவத்தையும் தனதாக்கிக்கொள்வதில் வெற்றி கண்டுவிட்டார் ஆரம்பகாலத்தில் பெருமளவான எதிர்ப்பு இருந்த போதும் அமெரிக்கா, மற்றும் அதன் அனுசரணையுடைய அரசுகளின் நிதி, மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொண்டு அப்பாஸ் செயல்பட்டார். அரபாத்தின் மறைவை எதிர்பார்த்த அமெரிக்கா அவரது மறைவினால் இலகுவாக இஸ்ரேலும், அமெரிக்காவும் நினைப்பதனை நிறைவேற்றிவிடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. காரணம் மிதவாதத் தலைமையாக மட்டுமே அவர்கள் அப்பாஸைப் பார்த்தனர். அப்பாஸ் தெளிவான, நேர்த்தியான மிதவாதி மட்டுமே. அரபாத் அவ்வாறானவரல்ல. ஆரம்பத்தில் தீவிரவாதியாகச் செயல்பட்டு இஸ்ரேலிய அரசாங்கத்தின் அணுகுமுறைகளை கற்றதோடு, அவற்றை முறியடிக்க தயாரானவரே அரபாத். ஆனால், பிற்பகுதியில் அதுவும் மிகப்பிந்திய பிற்பகுதியில் மிதவாதியாக மாறியவர். அதிலும் மாறியவர் என்பதைவிட மாற்றப்பட்டவர் என்று கூறுவது பொருத்தப்பாடானது. அவ்வகையான ஒருவரோடு உறவு வைத்திருப்பதோ, தாம் விரும்புவதனை அடைவதோ கடினம் என்பதனை விளங்கிக் கொண்ட [illegible]ஸ்ரேல் தலைமை[illegible]வரது மறைவை [illegible]மானதாக பயன்படுத்தாது. அவ்வாறாயின் அவர்கள் விரும்பும் ஒருவராக அப்பாஸ் விளங்குகிறார் என்றால் அவர்கள் அப்பாஸை ஒரு ஆபத்தானவராகக் கருதவில்லை. அதனால் பலஸ்தீனமக்களுக்கு அப்பாஸினால் எதுவித விமோசனமோ புதிய திருப்பமோ ஏற்பட்டுவிடப்போவதில்லை. அதாவது அமெரிக்க- இஸ்ரேல் கூட்டின் ஆபத்தான அரபாத்தினால் கூட பலஸ்தீனர்களுக்கு எந்த பயனோ விமோசனமோ, கிடைக்கவில்லை என்றால் அப்பாஸால் எத்தகைய மாறுதலை சந்திக்கப் போகிறார்கள்.

ஒருவகையில் பலஸ்தீனர்கள் மீதான ஒடுக்குமுறையை இராணுவ அழுத்தங்களுக்கூடாக கையாளாது மிதவாத அரசியலுக்கூடாக கையாள அமெரிக்க- இஸ்ரேல் கூட்டு தயாராகின்றமையே அப்பாஸின் வெற்றி உணர்த்தும் செய்தியாகும். மிகத்தெளிவாகப் புலப்படும் மிதவாதியான அபாஸ் அமெரிக்க- இஸ்ரேல் கூட்டுத்தலைமைக்குள் அகப்பட்டுள்ளாரே அன்றி வேறு எந்தவிதத்திலும் சுதந்திரமானவராக துலங்கவில்லை.

அவர் தேர்தல் வெற்றியைப்பற்றி குறிப்பிடும் போது இஸ்ரேலுடனான உறவு சுமூகமானதாகவும் ஆபத்தற்றதாகவும் தனது ஆட்சியில் மாறுமென கூறியிருந்தார். அதுமட்டுமல்ல அரபாத்தின் பாதையில் பலஸ்தீனத்துக்காக போராடப்போவதாகக் கூறினார்.



**ஐங்கரன்**

இஸ்ரேலுடனான நட்போ, உறவோ, பலஸ்தீனர்களை மேலும் ஏமாற்றுவதற்கான வழிமுறையே அன்றி வேறு எதுவுமில்லை. ஏனெனில் அரபாத்கூட இறுதிக்காலத்தில் தனது இயலாமையின் நிமித்தமே இஸ்ரேல்- அமெரிக்க கூட்டு தலைமையிடம் சரணடைந்தவர். நிச்சயமாக அரபாத் போராடி வெற்றிகண்டிருப்பாராயின் தேசம் சுபீட்சமாகவும், உறுதியாகவும் அடிபணியாததாகவும் மாறியிருக்கும். அப்பாஸ்போன்ற தலைமைகள் பெரும் மாறுதலுக்கு உட்பட்டிருக்கும். அல்லது போராட்டத்தளத்திலிருந்து அப்புறப்பட்டிருக்கும் மிதவாதத்தினாலேயே அவர்கள் அரபாத்தையோ, அரபாத்தின் மிதவாத வாரிசுகளையோ ஆக்கிரமிக்க முடிந்தது. நிலத்தை, கடலை, சொத்தை, வளங்களை ஆக்கரமிப்பதைவிட போராட்ட சக்திகளை வாரிசு அரசியல் தலைமைகளை ஆக்கிரமிப்பதே அதிகம் ஆபத்தானது. நிலத்தை மீட்கலாம். ஆனால் ஒரு போராட்டத்தின் தளபதியையோ, தலைமையையோ மீட்டெடுக்கமுடியாது. இழக்கப்படுவோமாயின் அது நிரந்தர இழப்பாகவே மாறும். அந்த வகையில் அமெரிக்க- இஸ்ரேலிய கூட்டுத்தலைமை அதனையே பலஸ்தீனவிடுதலைப் போராட்டத்தில் அமுல்படுத்தி வெற்றி கண்டுவிட்டது. அப்பாஸ் ஒரு அமெரிக்க- இஸ்ரேல் கூட்டின் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டவர். அவரால் அவரையே மீட்டெடுக்க முடியாது. எப்படி பலஸ்தீன மக்களை மீட்டெடுக்கப்போகின்றார் இஸ்ரேலுக்கு பதிலாக பலஸ்தீனத்தை கட்டிவளர்ப்பதுடன் இஸ்ரேலுக்கு சமமான பலத்தை மேற்காசியாவில் ஏற்படுத்தக்கூடிய தலைமையுமில்லை. இதனால் இஸ்ரேல்- அமெரிக்க உறவை பாதிக்காது என்பதுடன் தற்போதைய உலக ஒழுங்கில் அமெரிக்கா ஒருபோதும் இஸ்ரேலை நிராகரித்துவிடாது. மேற்காசியா பக்கமுள்ள அரசியலை இஸ்ரேலினூடாகவே அமெரிக்கா கையாண்டு வருகிறது. இதனால் இஸ்ரேலுடனான உறவை பாதிக்க அமெரிக்கா அனுமதியாது. எனவே அப்பாஸ் கருதுவது போன்ற பலஸ்தீனத்தை உருவாக்குவதென்பதைவிட பலஸ்தீனத்தை இஸ்ரேலுக்கு சார்புடைய, நட்புடைய அரசாக மாற்றுவதாகவே அமையும். அது என்பதே பிரதான கேள்வியாகும்.

அப்பாஸ் அமெரிக்க- இஸ்ரேல் கூட்டுத் தலைமைக்குள் அகப்பட்டு செயல்படுபவராகவே எதிர்காலத்தில் காணப்படுவார். அத்தலைமையின் ஆலோசனையின் கீழ் செயற்பட முயலும் அப்பாஸ் அவர்களின் வழி காட்டலிலேயே பலஸ்தீனத்தை வழிநடத்தப் போகின்றார். அவ்வாறு வழிநடத்தலாம் என்ற நம்பிக்கை கீழைத்தேச தலைமைகளிடம் அதிகமுண்டு. அதாவது அமெரிக்காவை எதிர்ப்பதைவிட அமெரிக்க கூட்டுக்குள் புகுந்து அதனை சார்ந்து சாதிக்கலாம். என்றவாதம் பலதரப்பிடமும் உண்டு. ஆனால், அத்தகைய வாதம் வெற்றிபெறக்கூடிய உலகம் தற்போதில்லை. தற்போதைய உலக ஒழுங்குக்கு இசைவாகவே அமெரிக்காவும்- அதன் கூட்டாளி நாடுகளும் செயல்படுகின்றன. இதனால் அமெரிக்காவை எதிர்க்க முடியுமா என்றதொரு கேள்வியுமுண்டு. அப்படி எதிர்த்த நாடுகளின் நிலை என்ன என்பது பற்றியும் தெளிவான விளக்கமுண்டு. ஆனால், அப்பாஸ் அப்படி எதிர்ப்பவருமில்லை. அதேபோல் மறுபக்கத்தில் இஸ்ரேலின் அடிமைநாடாக பலஸ்தீனம் மாறும் என்பதே இதன் அறுவடையாக அமையும். தற்போது பலஸ்தீன தன்னாட்சி அதிகார சபையை உருவாக்கியது போன்றே பலஸ்தீனம் என்ற அரசையும் உருவாக்கிவிடுவார்கள்.

ஆப்கான், ஈராக் வரிசையில் இன்னொரு நாட்டின் சனநாயகத்தேர்தலாகவே அப்பாஸின் வெற்றியை அமெரிக்கர்கள் கருதுகின்றனர். இதனோடு ஒப்பீடு செய்யுமளவுக்கு அப்பாஸ் அமெரிக்க இஸ்ரேலிய சார்புடையவராக மாறிவிட்டார். அரபாத் இறந்ததுடன் அபாஸ் சனாதிபதியாக வந்தபோது அமெரிக்கர்கள் பலஸ்தீனத்துக்கு பல மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கினர்.

எனவே அப்பாஸின் வெற்றியை அமெரிக்க-இஸ்ரேல் கூட்டுத் தலைமையின் வெற்றியாக கருதலாமே அன்றி யதார்த்தமான பலஸ்தீனர்களின் வெற்றியாக கொள்ளமுடியாது. அரசியல் தலைமைகள் மக்கள் உருவாக்குவது ஒருபுறம். சில தலைமைகள் அமெரிக்க தரப்பினால் உருவாக்கப்படுகின்றன. ●



# அரசின் நிவாரணம் என்பது முயற்கொம்புதான்

## பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்

சுனாமி கடற்பேரலை அனர்த்தத்தின் பின், சிறிலங்காவின் பொருளாதாரத்தில் பாரிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், தமிழர் தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் அதனுடைய பிரதிபலிப்புகள் எவையும் தென்பட வில்லை. இலங்கை நாணயத்தின் பெறுமதி அதிகரிக்கும் அளவுக்கு சர்வதேச நிதியுதவிகள் கிடைத்துள்ள போதிலும் அது தமிழ் மக்களை இற்றைவரை சென்றடையவில்லை. வருகைதருகின்ற வெளிநாட்டு இராசதந்திரிகளை தென்னிலங்கையின் கரையோர பிரதேசப் பாதிப்புக்களை பெரிதுபடுத்திக்காட்டி அப்பகுதிகளை அபிவிருத்தி செய்வதில் உள்ள முனைப்பில் சிறிதளவேனும் தமிழர் தாயகப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதில் அக்கறைகொள்ளவில்லை.

இவ்விடயம் பல தரப்பினாலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபோதும் அரசு இதற்கு செவிசாய்த்து செயற்படுவதாகஇல்லை. நிவாரண உதவிகளிலிருந்து தமிழர் தாயகத்தின் பாதிக்கப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்பட்டுவருகின்றார்கள் என்பது தெட்டத் தெளிவான உண்மை.

சுனாமி பேரலை தாக்கிய நாள் தொட்டு இன்றுவரை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் சர்வதேச தொண்டு நிறுவனங்களுமே இம்மக்களின் அடிப்படைத்தேவைகளை தங்களால் இயன்றளவு பூர்த்திசெய்துவருகின்றது. இதில் ஆச்சரியம் என்னவெனில் சுனாமிப்பேரலை தாக்கியதும் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் மக்களுக்கான நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து செயற்படுத்துவதில் விழிபிதுங்கிநிற்க தமிழர் தாயகப்பகுதிகளில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் எவ்வித பதட்டமும் இல்லாமல் இம்மக்களுக்கான நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து மேற் கொண்டது. மேற்கொண்டு வருகின்றது. தற்போது இம் மக்களை தற்காலிக குடில்களில் குடியமர்த்தும் பணிகளில் ஈடுபட்டும் வருகின்றது. இது எவ்வாறு சாத்தியமெனில் பல இராணுவ சுனாமிகளால் இடம் பெயர்ந்த மக்களுக்கான இடம் பெயர் சேவைகளுடாக பெற்ற அனுபவம் எனின் அது மிகையல்ல. இவ்வனுபவமே ஐ.நா சபை பாராட்டும் அளவுக்கு தனது செயல்திறமையை மேற் கொண்டுள்ளது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம், தமிழர் தாயகப்பகுதி மக்களுக்கான நிவாரண விநியோகத்தில் பாரபட்சமும் புறக்கணிப்பும் செய்து தான் ஒரு பௌத்த சிங்கள பழைமைவாத பேரினவாத அரசாங்கம்தான் என்பதை சர்வதேசத்திற்கு நன்குபுரியும்படிசெயற்பட்டு வருகின்றது. இலங்கையில் தமிழர்கள் ஒரு இரண்டாம்தரப் பிரஜைகளைப்போல் சிறிலங்கா அரசாங்கம் நடத்துகின்றது. இன்று ஆயுதக்கொள்வனவில் காட்டும் அக்கறையில் அரைவாசி கூட தமிழர் தாயகப்பகுதி புனரமைப்பு பணிகளில் காட்டவில்லை. இது அனைவரும் அறிந்த உண்மை.

இது இவ்வாறு இருக்க சிறிலங்கா அரசாங்கம் "நாம் புலிகளுடன் இணைந்து புனரமைப்பு பணிகளை மேற்கொள்கின்றோம்'' என்றும் "தமிழர் தாயகப்பகுதிகளுக்கு போதிய நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன" என்றும் சம்பந்தமில்லாத நடைமுறையில் இல்லாதவிடயங்களை அறிக்கையாகவிட்டு சர்வதேச சமூகத்தை சமாளித்துவருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் நிவாரண உதவிகளை இனிவரும் நாட்களிலாவது பாரபட்சமின்றி அரசு வழங்குமா? என் பாதிக்கப்பட்ட மக்களிடம் கேட்டோம். அதற்கு அவர்கள் கூறியகருத்து பின்வருமாறு;

ரவீந்திரராசா- இராசேஸ்வரி, வத்திராயன்.



"எங்களுக்கு உதவிகள் எல்லாம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்தான் செய்கின்றது. எங்களின் குடும்ப அங்கத்தவர்களை இழந்து தவித்து நின்ற எங்களை கடற்புலிகள்தான் ஆறுதல் அளித்து அன்று தொடக்கம் இன்றுவரை பராமரித்து வருகின்றனர். எங்களுக்கு இப்ப என்ன தேவையென்றால் வீடும் தொழில் உபகரணங்களும்தான். எங்களுக்கு சந்திரிகா அரசாங்கம் நிவாரணம்எதுவும் தருமென்ற நம்பிக்கையில்லை. என்ர மூத்த மகன் நாகர்கோவில் பள்ளிக்கூடத்தில் விமானக் குண்டு வீச்சில் செத்துப்போனார். இப்ப என்னுடைய கணவனும் ஏழுவயது மகனும் செத்துபோனார்கள். நாங்கள் தமிழர்கள் என்றபடியால எங்கள அழிக்கத்தான் அரசாங்கம் நினைக்கின்றது. எனவே சிறிலங்கா அரசாங்கம் எங்களுக்கு சரியானமுறையில் உதவிகளை செய்யுமென்ற நம்பிக்கையில்லை.

**இ.ஜெயச்சந்திரன் கொழும்பு (வத்திராயனைச் சேர்ந் தவர் தற்போது கொழும்பில் வசிக்கின்றார்)**



"நான் கொழும்பு மட்டக்குழி, வத்தளைப் பக்கம் கடல் அலை வந்தவேளை அங்கே நின்றேன். அங்கே கடல் அலையின் தாக்கம் மிகவும்குறைவு 15 பேர் வரைதான் இறந்திருப்பார்கள். ஆனால், இன்று அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகளில் சிறிதளவேனும் இப்பகுதியில் அரசினால் வழங்கப் படவில்லை என்பதை நான்

### அருள்

இங்கு வந்துபார்க்கின்றபோது தான் தெரிகின்றது. அங்கே அரசியல் கட்சிகள் போட்டிபோட்டுக் கொண்டு உதவிசெய்கின்றன. இப்பகுதி மக்களைப்பற்றி அவர்கள் அக்கறை எடுத்துசெயற்படவில்லை என்றுதான் கூற வேண்டும். அதைவிட தென்னிலங்கைப் பகுதியில்பாரிய முறைக்கேட்டுச் சம்பவங்கள் கூட நடைபெற்றுள்ளன. உதாரணமாக நிவாரணங்களை கொள்ளையடித்தல் போன்றவை.


ஆனால், எமது பகுதி மக்களுக்கு அரசு உதவிகள் வழங்காது இருப்பது தமிழர்கள் மீது அது கொண்டுள்ள வெறுப்பைத்தான் காட்டுகின்றது. எனவே இந்த அரசு பாரபட்சமற்ற நிவாரண விநியோகங்களை மேற்கொள்வது என்பது முயற்கொம்புதான். உண்மையில் அரசாங்கம் என்ன செய்கின்ற தென்றால் வெளிநாட்டு இராசதந்திரிகளிடம் வெளிப்படையான நிவாரண விநியோகம் செய்கின்றோம் என்றும், இதில் விடுதலைப் புலிகளையும் பங்காளிகளாக சேர்த்துள்ளோம் என்றும் கூறிக்கொண்டு புறக்கணிப்பு செய்து வருகின்றது.

**சிறி ராதா- தாளையடி,**



"என்னைப் பொறுத்தவரை அரசாங்கம் எந்த உதவிகளையும் செய்யுமென்று எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் பாதிக்கப்பட்ட உடனேயே ஐந்து லட்சம் தான் ஒதுக்கியிருக்கென்று செய்தியில் கூறியது. இது எத்தினை குடும்பத்துக்கு போதுமானதாய் இருக்கும்? முன்னைய காலங்களிலேயே சனத்தைக் கொல்லவேணுமெண்டு இராணுவ நடவடிக்கைகளை செய்த அரசாங்கம் அதால பாதிக்கப்பட்ட எங்களுக்கு ஒழுங்கான நிவாரணம் தராத அரசாங்கம் இந்த அனர்த்தத்திற்கு எப்படி பாரபட்சமின்றி உதவி செய்யும்.''

**வே.கஜேந்திரன், மருதங்கேணி.**



"சந்திரிகா அரசாங்கம் எங்களுக்கு ஏதும் உதவிகள் செய்யுமென்ற நம்பிக்கையில்லை. அரசாங்கத்தை நாங்கள் ஒரு வீதம்கூட நம்பவில்லை. எங்களுக்கு இயக்கமும், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், மற்றும்சர்வதேச நிறுவனங்கள்தான் இப்பவும் உதவிசெய்கின்றது. எங்களுக்கு தொழில்வசதியும், வீட்டு வசதியும் அவசரமாகதேவையாக உள்ளது. இதனை பாரபட்சமின்றி அரசு செய்யுமென்ற நம்பிக்கையில்லை.''

**ந.தர்மலிங்கம், பொலிகண்டி. (கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்.)**



" சிங்கள நாட்டுப்பக்கம் எவ்வளவோ உதவிகள்செய்து விட்டது இந்த அரசாங்கம். தமிழ் மக்களுக்கு எதுவும் இதுவரை செய்யவில்லை. ரணில் வந்து பார்த்து விட்டுப்போகிறார். தன்னால முடிஞ்சதை செய்கின்றேன் என்றார். என்னைப்பொறுத்தவரை அரசாங்கத்திடம் இருந்து உதவிகள் ஏதும் கிடைக்குமென்ற நம்பிக்கையில்லை''

இவ்வாறுதான் நாம் சந்தித்த பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் கூறுகின்றனர்.

சர்வதேசத்தால் வழங்கப்பட்டுள்ள நிதியுதவிகள் தமிழ் மக்களைஅழிப்பதற்கான ஆயுதமாக மாறிவிடுமோ என்ற அச்சத்தில் தான் தமிழ்மக்கள் உள்ளனர். பாடசாலைகளில் தஞ்சமடைந்திருந்த இம்மக்கள் தற்போது கூரை விரிப்பால் அமைக்கப்பட்ட கூடாரத்தினுள் வாழ்கின்றனர். இவர்களுக்கான நிரந்தர வீடுகள் எப்போது அமைக்கப்படும்,? இவர்கள்எப்போது தங்கள் தொழிலை ஆரம்பிப்பதுபோன்ற கேள்விகளுக்கான விடை சர்வதேச உதவிகளை தென்பகுதிக்கு முடக்கிவிட்டு தமிழ் மக்களை மனிதாபிமான மற்றமுறையில் நடத்தும் சிறிலங்கா அரசாங்கத்தின் கைகளில்தான் உள்ளது.


கரையோரப்பிரதேச இம்மக்கள் இல்லிடவசதியையும் தொழில்வசதிகளையும் ஒரே நேரத்தில் ஏற்படுத்தவேண்டிய ஒரு முக்கிய கட்டத்தில் உள்ளனர். இவ்வாறு உள்ள மக்களுக்கான உதவிகளை பாரபட்சமின்றி வழங்க சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து இருண்டு போன தங்கள் வாழ்வில் ஒளியோற்ற வேண்டுமென கோருகின்றனர்.






# பூகம்பத்தை தாங்கும் வீடுகள்

பிரச்சினைகள் தோன்றும் போதுதான் தீர்வுகள் எழும் என்பார்கள். இதனடிப்படையில் தான் இந்திய பொறியியலாளர் குழுவும் தங்கள் முயற்சியில் இறங்கி வெற்றியும் கண்டுள்ளனா்: அதாவது கடந்த வருடம் இந்தியாவில் ஏற்பட்ட பாரிய பூகம்பத்தையடுத்து அங்கு பல லட்சக்கணக்கான வீடுகள் அழிந்து நாசமாகின. தொடர்ந்தே இனிவரும் காலங்களில் பாரிய பூகம்பத் தாக்கத்தை தாங்குமளவுக்கு வீடுகளை அமைப்பதில் வெற்றி கண்டுள் ளனர்.





இவ் கட்டட வடிவமைப்பு எந்தப் பூகம்பத்தையும் தாங்கி நிற்குமளவுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டடப் பூகம்பத்தை அளக்கும் அதிர்வு பரிசோதனை தளங்களில் பரிசோதிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வீடுகள் பாரிய நில நடுக்கத்தை தாங்கி நிற்குமளவுக்கு திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்திய மாநிலமெங்கும் இவ்வீடுகளுக்கு பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. கிராமங்களில் வசிக்கும் மக்களின் ஆலோசனைகளை பெற்று வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் அன்ஜார், பச்சாவ், ராபார் போன்ற நகரங்களில் இந்திய வர்த்தக கழகமும், கோ்சர்வதேச தன்னார்வக்குழுவும் இணைந்து சுமார் 6000 வீடுகளை கட்ட திட்டமிட்டிருக்கின்றன. இதேவடிவமைப்பில் பாடசாலைகள், திணைக்களங்கள் என்பவற்றை நிர்மாணிக்கவும் இவ்வமைப்புகள் திட்டமிட்டிருக்கின்றன.

இவ்வாறே நாமும் இனி வரும் காலங்களில் இயற்கை அனர்த்தங்களிலிருந்து எம்மை பாதுகாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. அண்மையில் சுனாமி எமது பிரதேசத்திற்கு ஏற்படுத்திய அழிவை கவனத்தில் கொண்டு அவ்வாறான அழிவுகளிலிருந்து பாதுகாப்புப் பெறும் வகையில் நாமும் தொழில்நுட்ப ரீதியாக பல மாற்றங்களை செய்ய வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

# தீவுகளுக்கு ஆபத்து...?



பூமியில் நாளுக்கு நாள் வெப்பம் அதிகரித்து வருவதால், கடல் நீரின் மட்டமும் ஆண்டு தோறும் உயர்ந்து வருகிறது. இதனால் உலகிலுள்ள தீவு நாடுகள், கரையோர துறைமுக நகரங்கள் கடலோரப்பகுதிகள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இயற்கைக்கும், மனித நாகரிகத்துக்குமான இப்போராட்டத்தின் விளைவு கண்முன்னே ஆபத்தாய் விரிந்து நிற்கிறது. மனிதனின் தேவைகள் பெருகப் பெருக இயற்கையின் மடியிலே கைவைத்து அதன் அமைப்பைக் குலைக்க முயல்வதுதான் பிரச்சினைக்கே மூலகாரணம்.

கார்கள், மின் உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள் ஆகியவை வெளியிடும் புகையில் இருந்து வெளிப்படும் காபன்-டை- ஒக்சைட்டு காரணமாக உலகம் நாளுக்கு நாள் அதிக அளவில் வெப்பம் அடைந்து வருகிறது. இதனால் கடல் மட்டம் ஆண்டுதோறும் உயர்ந்து வருகிறது. அதோடு பனிக்கட்டி உருகுவதாலும் கடல் மட்டம் உயர்கிறது. கடந்த 20 ஆம் நூற்றாண்டில் கடல் மட்டம் 10 முதல் 20 செ.மீ. உயர்ந்தது. இப்போது கடல் மட்டம் ஆண்டு தோறும் 2 மி.மீட்டர் உயர்ந்து வருகிறது.

அடுத்த 95 ஆண்டுகளில் அதாவது 2100ஆம் ஆண்டில் உலக வெப்பம் 1.4 முதல் 5.8டிகிரி சென்ரிக்கிரேட் உயரும். இதனால் கடல் மட்டம் 9 முதல் 88செ.மீ.வரை உயரும். அப்படி உயரும்போது சிறிய தீவுகள், துறைமுக நகரங்கள், கடலோரப் பகுதிகள் ஆகியவை கடலில் மூழ்கிவிடும் அபாயம் உள்ளது. மாலைதீவு, பசுபிக் பெருங்கடலில் உள்ள டுவாலு ஆகிய நாடுகள் கடலில் மூழ்கி விடும் என்று அஞ்சப்படுகிறது. கடலோரங்களில் உள்ள கொல்கத்தா, டாக்கா, லாகோஸ், லண்டன், நியூயோர்க், ஷாங்காய், டோக்கியோ ஆகிய நகரங்களுக்கும் பெரும் அளவில் சேதம் ஏற்படும். கிரீன்லாந்து, அண்டார்டிக் பகுதிகளில் பனிக்கட்டிகள் எதிர்பார்த்ததைவிட வேகமாக உருகத்தொடங்கி இருப்பதும் அபாயத்தை அதிகரித்துள்ளது.



மேற்கத்திய நாடுகளில் வெயில் காலம் என்பதெல்லாம், நம் ஊரில் காலை 8 மணிக்கு வீசும் சூரிய வெளிச்சம் போலத் தான் இருந்தது. இப்போதல்ல! முன் ஒரு காலத்தில். இப்போதெல்லாம், கோடைகாலம் என்றாலே அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்தில் மக்களுக்கு நடுக்கம் வந்துவிடுகிறது. ஏனென்றால் கடந்த சில ஆண்டுகளாக கோடைகாலத்தில் கடுமையான வெயிலால்தாக்கப்பட்டு, பலர் இறக்கத்தொடங்கியுள்ளனர். ஒருவகையில் முன்னேறிய நாடுகளின் சுயநலம் தான் இதற்குக் காரணம் எனலாம். முன்னேறிய வல்லரசு நாடுகள், மற்றும் வல்லரசாக துடித்துக்கொண்டிருக்கும் நாடுகள் பலவகை அணு ஆயுதங்களை கடலுக்கடியிலும், பாலைவனங்களிலும்வெடித்துப் பார்த்துசோதித்து வருகின்றன.மனித இனத்தையும், புல் பூண்டுகளையும் பல நூறு வருடங்களுக்கு தலை காணாமல் போக வைக்கும் அளவு வலிமை கொண்ட அணு ஆயுதங்களை பூமிக்கடியில் வைத்து வெடித்தால், பூமி எவ்வளவு காலம் தாங்கும்?

உயர்ந்து வரும் கடல் மட்டம் குறித்தும், சுனாமி பேரழிவில் இருந்து பாதுகாத்துக் கொள்வது குறித்தும் ஆலோசிப்பதற்காக சிறிய தீவு நாடுகளின் மாநாடு மொரிஷியஸ் நாட்டில் நடைபெறுகிறது. இதில் 37 சிறிய தீவு நாடுகள் கலந்து கொள்கின்றன. தீர்மானங்கள் நிறைவேற்றி விட்டு கலைந்து விடும் சம்பிரதாய மாநாடாக இல்லாமல், தங்களையும், பிறநாடுகளையும் அதில் வாழும் மக்களையும் காக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் மாநாடாக இம்முறை அமையுமென நம்புவோம்! அப்போதுதான் காப்பாற்ற முடியும்; தீவுகளை மட்டுமல்ல; அப்பாவி ஜீவன்களையும்!




# பெண்களைத் தாக்கும் தைரொக்சின்

நமது உடலில் சுரப்பிகள் உள்ளன. அவற்றில் சுரக்கும் நீா (Hormones) நேரடியாக இரத்தத்துடன் கலந்து உடல் இயக்கத்திற்குத் தேவையான வேலைகளை செய்கின்றது. இதனை நாம் நாளமில்லாச்சுரப்பிகள் என்கின்றோம. இவற்றுள் முக்கியமானதொன்று தைரொய்ட் சுரப்பியாகும்.

இது தைரொக்சின் எனும் ஓமோனைச் சுரக்கிறது, இவ் ஓமோன் உடலில் உள்ள கலங்களுக்குச் சென்று அவற்றை சரியாக செயற்பட உதவுகிறது. அதாவது ஒரு இயந்திரத்திற்கு எரிபொருள் எப்படித் தேவையோ அதே போன்று மனித உடலுக்கு தைரொகசின் தேவைப்படுகிறது. இத் தைரொய்ட் நோய் இரண்டு வகையாக நோக்கப்படுகிறது. தைரொய்ட் சுரப்பி தைரொக் சினை அதிகமாக சுரத்தல் இதனால் "தைரோடொக்சி கோஸிஸ் Thyro Toxiosis எனும் நோயும்.

தைரொக்சின் குறைவாக சுரப்பதால் "மிக்ஸ்சோ டிமா" (Myxo edema)எனும் நோயும் ஏற்படுகிறது. இதில் முதல் குறிப்பிட்ட நோய் பெரும்பாலும் முதுமைப் பருவத்தில் தோன்றும் இதில் மிக்ஸ்சோ டிமா நோய் பெரும்பாலும் பெண்களுக்கே ஏற்படும். இந் நோய் ஏற்பட்ட பெண்களுக்கு சற்று உடல் பருத்துக் காணப்படுவதோடு, தோல் கடினமாகவும் வரட்சியாகவும் மாறிவிடும். மேலும் வியர்வை குறையும், நாக்கு சற்று தடிப்பாக காணப்படும் மந்த நிலை உருவாகும். இதனால் வேலைகள் அனைத்தும் மெதுவாகவே செய்வார்கள், கை, கால் க[illegible]ல் மரத்த உணர்ச்சி நடை தள்ளாடுவது கு[illegible]காலங்களில் குளிரை தாங்க முடியாத நிலை, மலச்சிக்கல், மற்றும் மாரடைப்பு, உயர் இரத்த அழுத்தம் போன்றன ஏற்படலாம். இந் நோய் ஏற்பட்டுள்ளதை இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலம் கண்டறியலாம்.($T_3$,$T_4$, TSH) அத்தோடு Scan Test மூலமும் நோய் ஏற்பட்டுள்ளதை அறியலாம். இங்கு மகிழ்ச்சியான விடயம் என்ன வெனில் இதனை முழுமையாக குணப்படுத்தலாம் அதாவது மூன்று முறைகளில் தீர்வை பெற்றுக் கொள்ளலாம்.

**மாத்திரை:-**

மாத்திரை மூலம் சிகிச்சையளிக்க முடியும். ஆனால் மருத்துவரின் ஆலோசனைப் படி எடுத்துக் கொள்வது முக்கியமானதே.

**அறுவை சிகிச்சை:-**

மாத்திரை பயனளிக்காவிட்டாலும் தைரொய்ட் சுரப்பியில் கட்டிகள் இருந்தாலும் அறுவை சிகிச்சை மேற் கொள்ளலாம். பூரண பயனளிக்கும்.

**ரேடியம் அணுக்கதிரியக்க முறை:-**

முதியவர்களுக்கு மிகவும் தகுந்த சிகிச்சை முறையாகும். மாத்திரை உண்ணும் பிரச்சினையோ அல்லது அறுவை சிகிச்சையால் ஏற்படும் சிக்கலோ இதில் இல்லை. ரேடியம் கலந்த மருந்தை ஒரே முறை உண்டால் போதுமானதே. இந் நோயின் தொல்லை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து உடல் பூரண குணமடையும்.

எனவே பெண்களை தாக்கும் "மிகஸ்சோ டிமா" தைரொய்ட் நோயை கண்டறிவ தற்கானபரிசோதனை இலகுவானதே. ஆரம்பத்திலே கண்டறியப்பட்டால் நோயை குணமாக்குவது இலகுவானதே.

# நீரழிவு நோயும் புற்று நோயும்

நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு வகையான புற்றுநோய்களால் பீடிக்கப்படுவதற்கும், அவைகளால் உயிர் இழப்பதற்கும் அதிகமான வாய்ப்புகள் இருப்பதாக கொரிய ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக நீரழிவு வியாதிக்காரர்களுக்கு உணவுக் குழாய் பாதையில் கட்டிகள் உண்டாக வாய்ப்பு இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நீரழிவு வியாதிக்கும், புற்றுநோய்க்கும் தொடர்பு இருப்பது புதிய விசயமல்ல. இது ஏற்கனவே பல கட்டங்களில் பல்வேறு விஞ்ஞானிகளால் சொல்லப்பட்ட ஒன்றுதான். ஆனால், இந்தத் தொடர்பு எப்படி ஏற்படுகிறது என்பது பற்றி போதிய அளவுக்கு விளக்கப்படவில்லை. இந்நிலையில் இதற்கு தற்போது ஓரளவுக்கு விடை கிடைத்து விட்டது. நீரழிவு வியாதி என்றால் அது உடல் பருமனோடு நெருங்கிய தொடர்பு உள்ளது என்று ஏற்கனவே தெரியும். அந்த உடல் பருமன்தான் புற்றுநோய் ஆபத்துகளை அதிகரிக்கிறது. ஆகையால் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவு, மற்றும் நீரழிவு வியாதிக்கான இதர காரணங்களால் புற்று நோய் உண்டாகலாம் என்கிறார்கள் நிபுணர்கள்.

கொரிய ஆராய்ச்சியில் கலந்து கொண்டவர்களில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாக காணப்பட்டவர்களே புற்றுநோயால் அதிக அளவில் பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீன்களால் ஆபத்தில்லை

ஆசியாவில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு சுனாமி தாக்குதல் அளவிட முடியாத சோகத்தையும், துயரத்தையும் கஷ்டத்தையும் ஏற்படுத்தி விட்டது. இருந்தாலும் இந்த இடர்பாடுகளை களைய நாம் அறிவியல் பூர்வமாக திட்டமிட்டு செயல்படுவது மிகவும் முக்கியம். இந்நிலையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள உண்மையற்ற அச்சத்தை போக்க பல அறிவியல் பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஏற்கனவே கால்நடை மருத்துவ கல்லூரியும், மீன்வளக் கல்லூரியும் ஆய்வின் மூலமாக சுனாமி பாதிப்பால் மீன்கள் சாப்பிடுவது ஆபத்து என்பதை மறுத்துள்ளது.

இப்பொழுது மீன் அங்காடியில் விற்கப்படும் மீன்களில் சுனாமியால் எந்தவித பாதிப்பும் இல்லை என்று ஆணித்தரமாக எடுத்துக் கூறப்பட்டு உள்ளது. சென்னை மாநகராட்சி அனுப்பிய மீன்களில் தீவிர ஆய்வு செய்து பார்த்ததில், நோய் ஏற்படுத்தக்கூடிய நுண்கிருமிகளான சால்மோனெல்லா, சிகெல்லா, கொலரா மற்றும் பொட்டிலிசம் என்ற விஷம் உண்டாக்கக்கூடிய எந்த ஒரு நுண் கிருமிகளும் இல்லை. எலிகளிலும் இந்த மீன்களிலிருந்து எடுக்கப்பட்ட திரவத்தை செலுத்தி ஆய்வு செய்ததில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. இதிலிருந்து இந்த மீன்கள் சாப்பிடுவதற்கு மிகவும் ஏற்றதுதான் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

சுனாமி அலையால் வேதியியல் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு இல்லை. கடல் நீரின் உப்புத்தன்மை நோய் கிருமிகளின் வளர்ச்சியை தடுக்க வல்லது என்பதை இப்போது மேற்கொண்ட சோதனைகள் சான்றளிக்கின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய இழந்த வாழ்க்கையை திரும்பப் பெறும் வகையில் நம்பிக்கையூட்டுவதே இத்தருணத்தில் வேண்டுவதாகும்.

மேலும் பாதிக்கப்பட்ட இடங்களில் தண்ணீர், மண், தாவரம் மற்றும் மீன்களில் ஏற்பட்ட மாறுபாடுகளை அறிந்து கொள்வதன் மூலம் அறிவியல் பூர்வமாக பாதிக்கப்பட்ட மீனவர்களின் எதிர்கால வாழ்க்கைத் தரத்தை உயர்த்த திட்டமிட ஏதுவாகும்.



# அவனது உயிர் மூச்சு மண்ணோடு கலந்து விட்டது

**க.மிரேசு**

டேய் இளஞ்சுடர் ராங் வருகுது. உனக்குக் கண் தெரியலயா என்கிறான் சக தோழன்!

இளஞ்சுடரண்ணோய், கிட்டவந்திட்டான் அடியுங்கோ என்கிறான் இன்னுமொருவன்!

இதற்கிடையில் எதிரியின் அணி ஒன்றுடன் துருப்புக்காவி ஒன்றும் முன்வர போராளிகள் சண்டைசெய்துகொண்டே வந்த எதிரியின் கவசங்களை விடக்கூடாது என்று சபதம் எடுத்தவர்களாய். எதிரியை கிட்டவிட்டுத் தாக்கக் காத்திருந்தனர். மேலும்,மேலும் கிட்டவாக வந்துவிட்ட எதிரியின் கவச டாங்கி ஒன்றை இளஞ்சுடர் அடிக்கவில்லை என்று நடைபேசியில் பேசுவதையும் அடி,அடி என கத்துவதையும் கேட்டவண்ணமே இருந்தோம்.

நிச்சயமாக இளஞ்சுடர் ஏதோவொன்றை நிதானமாக செய்வார் என்பதுமட்டும் அனைவருக்கும் தெரிந்திருந்தது.

இளஞ்சுடர் நிதானமாக எதையோ செய்கிறான் என்பதை உணர முன்னரே எதிரியின் டாங்கி ஊரியானிலுள்ள எமது நிலையைத்தாண்டிவிடவேண்டும் என்று வேகமாக வந்தது. இப்போதுதான் பொறுமையாக இருந்த இளஞ்சுடர் செயற்படத் தொடங்கினான்.

சரியாக குறிபார்த்து முன்னேறிவந்த எதிரியின் கவசத்தை நோக்கி குறிபார்த்து, உந்துகணை ஒன்றை அடித்தான். கூவிச் சென்ற உந்துகணை கவசத்தின் பக்கவாட்டை தாக்கியதும். எல்லோருக்கும் ஒரே குதூகலம்.

ஆ......ஓ......கூ என சத்தமிட, வந்த கவசம் திரும்பியது. திரும்பியதும் பரிசுதனின் 50கலிபர் பின்பக்கமாக அதைத் தாக்கியது. அதேகணத்தில் இளஞ்சுடர் தனது இரண்டாவது உந்துகணையை ஏவினான். அது எதிரியின் கவசத்தின் பின்பக்கத்தை தாக்கியதும் கவசம் புகையை கக்கியவாறே எதிரியின் காவலரணைத்தாண்டிச் சென்று மறைந்தது.

ஓடுறான்.....ஓடுறான்......என்று கத்தியதும். பக்கவாட்டாக வந்த துருப்புக்காவியை நோக்கி இளஞ்சுடரின் இன்னுமொரு உந்துகணை கூவிச்சென்று பக்கத்தில் வெடித்தது. ராஜாவின் பீ.கே யும், பரிசுதனின் 50 கலிபரும் எதிரியை நோக்கி அனலைக் கக்கின. எதிரி முற்றுமுழுதாகப் பின்வாங்கி ஓடிவிட்டான். எமக்கோ எல்லையற்ற சந்தோசம். ஆனால், எதிரி தனது ஊடகங்களில் கிளிநொச்சி ஊரியானில் நடைபெற்ற இராணுவத்தினரின் புலிவேட்டை நடவடிக்கையில் புலிகளுக்கு பலத்தசேதம் என அறிவித்தான். இதைக்கேட்டு இளஞ்சுடரே நகைத்தான்.

எந்தவேளையிலும் நிதானமுடன் நிலைமையை நன்கு உணர்ந்து செயற்படும் ஆற்றல் கொண்டவன் வீரவேங்கை கப்டன் இளஞ்சுடர் (சுப்பிரமணியம் சிவராசா)



சிரித்த முகமும், கோபம் கொள்ளாத சுபாவமும், சிலவார்த்தைகளால் பலவிடயங்களை சொல்லிடும் பேச்சுத் திறமையும் கொண்ட கப்டன் இளஞ்சுடர் பெரும்பாலான சண்டைகளில் பங்குபற்றியது மட்டுமல்ல பெரும்பாலான களத்தில் பலசாதனைகளையும் செய்திருக்கிறான்.

கிளிநொச்சி எதிரி படைத்தளத்தின் ஓரங்கமான பேருந்து நிலைய சந்தித் தாக்குதலில் எதிரியின் இரண்டு காவலரண்களை தனது உந்துகணையினால் அழித்தான், அதிலுள்ள எதிரிகளும் கொல் லப்பட்டனர். இது நடந்தது இரவு நேரத்தில், தனது அனுபவத்தின் உச்சமான கணப்பொழுதில் மின்னிய எதிரியின் ஏதோவொரு வெளிச்சத்தைக்கண்டு ஒரு காவலரணை தாக்கினான். பின் அந்த காவலரணில் வெடித்த உந்துகணையின் வெளிச்சத்தில் எதிரியின் அடுத்த காவலரணை இனங்கண்டு தாக்கினான். மறுநாள் விடிந்தவுடன் பார்த்தபோதுதான் அவனது தாக்குதல் துல்லியமானதாக இருந்தது.

இதேகளத்தில் சண்டை முடிந்து, அடுத்தகட்ட தரக்கு தலுக்காக ஆயத்தப்படுத்தவென சேவியர் கடைச் சந்திப்பக்கமாக அமைந்திருந்த எதிரியின் காவலரண் தொடரில் அணிகளை தளபதி சேகர் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார். திடீரென வானில் தோன்றிய கிபிர் ரக விமானங்கள் வட்டமிட்டு எம்மை நோக்கி தாழப் பறந்து வரவே, எல்லோரும் நிலை எடுத்தோம். ஆனால், பைரவனும்,கப்டன் இளஞ்சுடரும் எமக்கு நேரே குத்தென வந்த விமானத்தை நோக்கி தங்களின் உந்துகணை செலுத்திகளால் உந்துகணைகளை ஏவினர். உந்துகணைகள் தனது நியம தூரத்தினை கடந்து வானில் வெடித்து தன்னைத்தானே அழித்துக்கொண்டது. வானில் வந்த விமானம் வேறு இடத்தில் தனது குண்டுகளை போட்டுவிட்டு திரும்பிச்சென்றுவிட்டது. கப்டன் இளஞ்சுடர் கணப்பொழுதில் அந்த முடிவை எடுத்திருக்காவிட்டால் அன்று எமது இழப்பு பெரிதாகவே இருந்திருக்கும்.

கப்டன் இளஞ்சுடர் பெரிதாக கதைக்கமாட்டான். ஆனால், செயலால் எதையும் செய்துகாட்டுவான், எல்லாவற் றையும்விட- போராளிகளிடத்தில் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவான். தனது அணி யிலுள்ள அனைத்துப் போராளிகளுக்கும். தனது வீட்டாரிடம் சொல்லி அடிக்கடி சுவையான உணவும், பொருட் களும் வாங்கிக்கொடுப்பதை ஒருவழக்கமாகக்கொண்டிருந்தான். தனது அணியுடன் அடிக்கடி கதைத்து எப்போதுமே சண் டைக்குத்தயாராகவே வைத்திருப்பான்.

ஓயாத அலைகள் இரண்டில் எமது அணி உள் நுழைந்து தாக்குதலை தொடங்கிய போது தனது உந்துகணை செலுத்தியினால் பல எதிரியின் நிலைகளை தாக்கி அழித்து அணிகள் வேகமாக நகர வழியமைத்துக்கொடுத்த பெருமையும் இவனையே சாரும்.

பரந்தன் பகல் தாக்குதலின் போதும் இளஞ் சுடரின் சேவை பெரிதாகவும், பெறுமதியாகவும் இருந்தது. இரசாயனத் தொழிற்சாலை யிலிருந்த எதிரிக்கு இவனின் உந்துகணைகளே மரணப் பயத்தை ஏற்படுத்தியது எனச் சொல்லலாம். எதிரியிடமே எடுத்த உந்துகணைகளை அதே எதிரிக்கு எதிராக நிமிடத்துக்கு ஒன்று என்ற ரீதியில் அடித்துக்கொண்டே இருந்தான். இவன் ஒரு உந்துகணை அடித்தால் எதிரி பல நூறு எறிகணைகளையும், உந்து கணைகளையும், ரவைகளையும் அடித்தான். ஏதோ ஒரு விதத்தில் எதிரியை பலமிழக்கச் செய்து வெற்றிக்கும் வழிவகுத்துக் கொடுத்தான்.

கப்டன் இளஞ்சுடரின் அபாரத் துணிச்சல் எல்லாப் போராளிகளையும் பெரும்பாலும் கவர்ந்திருந்தது. எனவே சண்டைக்கென அணிகள் புறப்படும்போது இளஞ்சுடரை எல்லோரும் தங்கள் பக்கமாக அழைப்பதுண்டு.


அண்ணோய் எங்களோட வாங்கோ..., அண்ணோய் எங்களோட வாங்க... என்றே அழைத்து... அவனை தொல்லைப்படுத்து வார்கள். தம்பிமார், நான் எல்லோருடனும் வாறன்.... சரி தானே... என்று மெதுவாகச் சொல்லி சமாளித்துவிட்டு, இறுதியாக அதே தாக்குதலில் கடுமை யானதும் இடர் நிறைந்ததுமான முக்கியமான பணிக்கு சென்றிருப்பான்.

இதே போலவே குடாரப்பு தரையிறக்கத்துடன் கூடிய இத்தாவில் இராணுவ வலயச் சண்டையிலும் தனது திறமையினால் எதிரியின் பல நகர்வுகளைத் தடுத்தான். கப்டன் மதியனோடு இணைந்து, கிளாலிப் பக்கமாக வந்த எதிரியின் கவசங்கள் பலவற்றை சேதமாக்கி சாதனை படைத்தான்.


எதிரியின் முழுப் பலத்தையும் திரட்டி வந்து தீச்சுவாலை நடவடிக்கையை 12000 எதிரியுடன் முன்னெடுத்தான். இந்தத் தாக்குதலை முன்னதாகவே எதிர் பார்த்திருந்த எமது தளபதிகள், கப்டன் இளஞ்சுடரை முறியடிப்பு அணியொன்றுக்குப் பொறுப்பாக விட்டு பயிற்சிகளை கொடுத்து வந்தனர்.

கப்டன் இளஞ்சுடர், தனது போராளிகளுடன் சிறப்பாக பயிற்சிகளை எடுத்து எதிர்வரும் சண்டைக்காகக் காத்திருந்தான். எதிரி தீச்சுவாலையை தொடங்கிய பத்து நிமிடங்களில் தனது முறியடிப்பு அணியுடன் களமிறங்கினான் இளஞ்சுடர். எதிரி முற்றிலும் எதிர்பார்த்திராத கோணத்தில் சண்டையை எதிர்கொண்டான். எதிரி பலமாக உடைந்த ராங்கோ 03 தொடக்கம் ராங்கோ 22 வரையிலும் தனது முறியடிப்புச் சண்டையை வேகமாக, நிதானமாகச் செய்து வெற்றி கொண்டவன். ராங்கோ 33இல் எதிரி கூடுதலாக உள்நுழைவதை நன்கு அவதானித்துவிட்டு அங்கு சென்று எறிகணைகளை உதவிக்கு எடுத்து அடித்தவாறே முன்நகர்ந்து அந்த இடத்தையும் கைப்பற்றினான். தீச்சுவாலை தள சமர்க்களம் 72மணித்தியாலம் தொடர்ந்து நடந்தபோது, தொடர்ந்து அதில் சண்டைசெய்து சாதனை படைத்து தனது உழைப்பை வெற்றிக்கு உரமாக்கினான்.

இவனது திறமைகளைக் கண்ட தளபதிகள் மிக முக்கியமான களப்பணியொன் றினை வழங்கி கிளாலிப் பக்கமாக உள்ள எதிரியின் நிலைகளை நோக்கி அனுப்பினர். 26.08.2001 அன்று மாலை வழமையான தனது சிரித்த முகத்துடன் தனது கடமையைச் செய்யவென உற்சாகமாக முன் சென்றவன், சிறிது நேரத்தில் எதிரியை கண்டுவிட்டதாக அறிவித்தான். தான் சென்ற கடமையின் நிமிர்த்தம், எதிரியைத் தாக்கமுடியாது எனவே வேறு இடம்மாறிப் போக முயற்சித்தவனுக்கு அங்கும் எதிர்ப்புக் காத்தே இருந்தது. எதிரி சண்டையை தொடங்கிவிட்டான், இளஞ்சுடரும் தன்னிடமிருந்த கைக்குண்டை அடித்துவிட்டு, துப்பாக்கியால் சுட்டிருக்கிறான். ஆனால், எதிரியின் பல ரவைகள் அவனது உடலை துளைத்துவிட்ட நிலையில் நடைபேசியில் நிலைமைகளை அறிவித்தவாறே மூன்று மணித்தியாலம் தொடர்போடு இருந்தான். அதன் பின் அவனது மூச்சு காற்றாகித் தமிழ் மண்ணோடு கலந்து விட்டது. ●




# நிகழ்காலம்



**வைகை**

நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. ஓட்டமும் நடையுமாக ஆலடிச் சந்திக்கு வந்தேன். பயணிகள் சிற்றூர்தி சந்தியைத்தாண்டி விரைந்து கொண்டிருந்தது. ஒருபக்கம் ஏமாற்றமாகவும் இன்னொருபக்கம் கோபமாகவும் இருந்தது. சிற்றூர்தி ஐந்துமணித்துளிகள் முந்தி போய்க் கொண்டிருந்தது. கடற்கரைவீதி என்பதால் அடுத்த ஊர்தி வர அரைமணி நேரமாகும்.

கடற்கரைப்பக்கம் நோட்டமிட்டேன். மீனவர் ஓய்வுமண்டபம் வெறிச் சோடிப்போய்க்கிடந்தது. மண்டபத்துக்கு முன்னால் இராணுவக் காவலரண் இருந்தது. அது பலத்த பாதுகாப்புடன் சிறிய முகாம் போலவே அமைக்கப்பட்டிருந்தது. கட்டாக்காலி நாய்கள் காவலரணைச்சுற்றி வலம்வந்துகொண்டிருந்தன.

கடற்கரையெங்கும் சிறிய குடிசைகள் முளைத்து பல வருடங்களாகியிருந்தன. அந்த குடிசைகளுக்குச் சொந்தகாரர் அந்த ஊரவர்களில்லை. இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயங்களாக உள்ள பலாலி, மயிலிட்டி ஊரவர்களின் குடிசைகளே அவை. இடம் பெயர்ந்து குடியேறி சொல்லொணா துன்பங்களில் மூழ்கிப்போயிருந்தார்கள். அவ்வூர் மக்களின் ஒத்துழைப்பு ஓரளவு அவர்களுக்கு ஒத்தடம் கொடுத்தது.

கடலலைகள் முருகைக் கற்பாறையில் வந்து மோதி சிதறிக் கொண்டிருந்தன. முருகைக் கற்பாறையில் அமைக்கப்பட்டிருந்த கண்காணிப்பு நிலையில் இராணுவத்தின் ஒருவன் இருந்தான். கடலில் ஆங்காங்கே கட்டுமரங்கள் தெரிந்தன. காரைநகர் படகொன்று கரைக்குத் திரும்பிக்கொண்டிருந்தது.

ஊர்தியொன்றின் இரைச்சல்கேட்டது. பார்வையை வீதிக்கு திருப்பினேன். தெற்கிற்கு மீன் கொண்டுபோகும் ஊர்தியொன்று வந்துநின்றது. மீன்வியாபாரிகளின் உந்துருளிகளும் ஈருருளிகளும் ஆலடியை மொய்க்கத்தொடங்கின.

இடிந்துபோயிருந்த வாசிகசாலை புதுப்பொலிவுடன் கட்டப்பட்டிருந்தது. நேற்றைய பத்திரிகைகள் மேசையில் இருந்தன. நேரத்தைப்பார்த்தேன் சிற்றூர்திவரும் நேரத்துக்கு இன்னமும் பத்து மணித்துளிகள் இருந்தன. இராணுவ ட்றக்கொன்று வீதியே தன்னுடையது என்பதுபோல போய்க்கொண்டிருந்தது.

தூரத்தே சிற்றூர்தி வருவது தெரிந்தது. வீதிக்குவந்தேன். ஊர்தி மெதுவாக நகர நடத்துனர் ஏறுமாறு சைகை செய்தான். பாய்ந்து ஏறிக்கொண்டேன். சினிமாப்பாடல் உச்சத்தொனியில் ஒலித்துக்கொண்டிருந்தது. பெரும்பாலும் அலுவலர்களும் ஆசிரியர்களும் இருந்தார்கள்.

சிற்றூர்தி உடுப்பிட்டிச் சந்தியைத் தாண்டியபோது பயணிகளால் நிறைந்துபோயிருந்தது. வல்லவெளியில் சாரதி அக்சிலேட்டரை ஒட்ட மிதித்தான். யமனில் ஏறியிருந்த உணர்வே என்னுள் ஏற்பட்டது. வல்லவெளி கோயிலடியில் ஊர்தி நின்றது, நடத்துனர் சில்லறையை உண்டியலில் போட்டுவிட்டு சந்தனத்தை எடுத்து ஊர்தியில் பூசினான். எனக்கு சிரிப்பாக இருந்தது. 'இவர்கள் தறிகெட்டு ஊர்தி ஓடிக்கொண்டு சந்தனத்தை பூசி என்ன பயன்' என நினைத்தேன். மீண்டும் சாரதியின் கால்களுக்குள் அக்சிலேட்டர் ஒட்ட அகப்பட்டிருந்தது.

"உப்பிடி ஓடித்தான் கோதாரியிலைபோவாங்கள் அடிபட வைக்கிறவங்கள்" பின்னிருக்கையில் இருந்த ஆச்சி ஆக்ரோசமாகக் கத்திக்கொண்டிருந்தாள். ஆச்சியின் நியாயம் விளங்காமல் இளசுகள் சில சிரித்தன.

நடத்துனர் பயணிகளை வரவேற்று சிற்றூர்திக்குள் அடைத்துக் கொண்டிருந்தான். ஆவரங்கால் சந்தியில் சிற்றூர்தி நின்றபோது கைக்குழந்தையுடன் பெண்ணொருத்தி ஏறினாள். அவளுக்கு இருக்க இடம் கொடுத்து எழுந்து, பிடிக்க இடமில்லாத கம்பியில் கஷ்டப்பட்டு இடம்பிடித்து நின்றேன்.

நேரத்தைப் பார்த்தேன், ஏழு மணியாகியிருந்தது. ஒன்பதுமணிக்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரை இருக்கிறது. எட்டுமணிக்குள் ரூமுக்குப்போய், விரிவுரைக்குப் போய்விடலாமென கணக்கிட்டேன். சிற்றூர்தி ஆமைவேகமாகி நின்றது. எனக்கு புரிந்துவிட்டது. சிற்றூர்திக்காரன் தனது செயற்பாட்டை அரங்கேற்றிக் கொண்டிருந்தான்.

குறித்த நேரத்துக்கு முன் விரைந்து ஓடிச்சனங்களை ஏற்றிவிட்டு ரைம்கீப்பர் நிற்கும் இடத்துக்கு சரியான நேரத்துக்கு போவதற்காய் காத்திருந்தான்.

"எட்டரைக்கு சோதினை இவையின்ரை விளையாட்டைப் பாருங்கோ" இளம்பெண்களில் ஒருத்தி சினந்துகொண்டிருந்தாள்.

"C.T.B பஸ் வந்தா இறங்கி அதிலை ஏறுவமடி" இன்னொருத்தி அவளின் சினத்துக்கு ஒத்தடம் கொடுத்தாள்.

ஐந்து மணித்துளிகளின் பின் சாரதி மீண்டும் வேகமெடுத்தான். அடுத்த சந்தியில் நின்ற ரைம்கீப்பரிடம் நல்லபிள்ளை பட்டம் பெற்றுவிட்டு, ஆமை வேகத்தில் நகர்ந்து பயணிகளை அடைத்தார்கள்.

சனவெக்கைக்குள் அகப்பட்ட கைக்குழந்தை வீரிட்டு அழுதது. தாய் கைக்குழந்தையை சமாதானப் படுத்த முற்பட்டு தோற்றுக்கொண்டிருந்தாள். நீர்வேலியில், சிற்றூர்தி கரியல் வாழைக் குலைகளால் நிறைக்கப்பட்டது. அடுத்த ரைம்கீப்பரிடம் நல்லபிள்ளை பட்டம் பெறுவதற்காக சாரதி மீண்டும் வேகமெடுத்தான். ஒரு மணித்துளி பிந்தினால் ஐம்பதுரூபா கட்டவேண்டும். அவனுக்கு ஐம்பது உயிர்களைவிட ஐம்பதுரூபா பெரிதாக இருந்திருக்கவேண்டும். ஊர்தி பறந்தது.

நாளுக்கு நாள் நடக்கும் விபத்துக்கள் மனத்துள் வட்டமிட்டன. முந்த நாள்கூட இளம் குடும்பத் தலைவன் ஒருவன் சிற்றூர்தியில் அடிபட்டு தலை சிதைந்து இறந்திருந்தான். ஊர்ச்சனங்கள் சிற்றூர்தியைக்கொளுத்தியிருந்தார்கள்.

விரிவுரை நடந்துகொண்டிருந்தபோது, விரிவுரையாளர் விபத்துக்கள் பற்றியும் கதைத்தார். "பஸ்ஸை கொளுத்தினாப்போல போன உயிர் திரும்பி வந்திடுமே. கொளுத்தின நேரம் பஸ்ஸை வித்துப் போட்டு செத்தவற்றை குடும்பத்துக்கு அந்தக் காசை குடுத்திருக்கலாம்"

விரிவுரையாளரின் பேச்சு நியாயமாகவே பட்டது. ஆனால், அது எவ்வளவுக்கு சாத்தியப்படும் என்பது கேள்விக்குறிதான்.

வழமையாக நடத்துனர்களிடம் தாள் காசு கொடுத்து அனுபவப்பட்ட நான் சில்லறையைக் கொடுத்தேன். இருபாலைச்சந்தி தாண்டி சிற்றூர்தி விரைந்தது. பின்னால் C.T.B பேருந்து வந்துகொண்டிருந்தது. அதனை முந்தவிடாமல் அக்சிலேட்டரை அழுத்தினான் சிற்றூர்திக்காரன்.

அடுத்த தரிப்பிடத்தில் நான் இறங்கவேண்டும். நடத்துனருக்குச் சொன்னேன். அவன் சாரதிக்கு கேட்கும்படியாய் கத்தினான். சாரதி உள்வாங்கியதாய் தெரியவில்லை. நான் இறங்க வேண்டிய தரிப்பிடம் தாண்டி பஸ் விரைந்தது. நானும் தொண்டை கிழியக் கத்தினேன். அதறகுள் சாரதி அசையவில்லை. அடுத்த தரிப்பிடத்தில் பயணிகள் இருவர் ஏறுவதற்கு நின்றார்கள். சிற்றூர்தி நீண்ட பிறேக்கின் பின் நின்றது.

எனக்குக் கோபம் தலைக் கேறிவிட்டது. இவர்களை விட்டு வைத்தால் இப்படியேதான் தொடர்வார்கள், என்றுஎண்ணிய நான் குதித்து சாரதியின் பக்கம் வந்தேன். சாரதி திடுக்குற்றவனாய் பார்த்தான்.

"உங்களுக்கெல்லாம் அறிவிருக்கா. முதல் தரிப்பிடத்திலை இறங்கவேண்டிய என்னை இஞ்சை கொண்டந்து இறக்கிறியள். நான் எண்டபடியா பரவாயில்லை, நடந்து போவன். வயது போனதுகளையும் இப்பிடித்தானே செய்வியள். உழைக்கிறதை மட்டும் பாக்காதைங்கோ. சனத்தையும் கவனியுங்கோ" எனக்கு இன்னும் கதைக்கவேணும் போலிருந்தது. பயணிகளின் நன்மைகருதி அத்தோடு நிறுத்திக்கொண்டேன். சாரதி முழுசியபடி கியரை மாத்தி ஊர்தியை செலுத்தினான்.

நேரம் எட்டுமணியாகியிருந்தது. காலைச்சாப்பாட்டை முடிப்பதற்காக அந்தக் கடையினுள் புகுந்தேன். கடைக்காரர் மகிழ்ச்சிமுலாம் முகத்தில் பூசியபடி வரவேற்றார்.

காலை நேரமென்பதால் கடை களை கட்டியிருந்தது. சாம்பிராணிப்புகை எங்கும் வியாபித்திருந்தது. அந்தப் புகையையும் மீறி சிகரெட் புகை மூக்கை தொட்டது. அந்த மேசையில் இருப்பவர்களை பார்த்ததும் எனது நரம்புகள் கொதித்தன. வயது பதின்னான்கிற்குள்தான் இருக்கும்.வாயில் சிகரெட் இரசித்து சுவைத்து புகையை உள்ளிழுத்து வெளிவிட்டுக்கொண்டிருந்தார்கள். எழுந்துபோய் அவர்களுக்கு கன்னம் கன்னமாக அறையவேண்டும் போலிருந்தது. 'அவர்களின் விடயத்தில் தலையிட நான் யார்' என நினைத்து அமைதியானேன். கடைக்காரர் தந்ததோசையை வேகமாய் சாப்பிட்டுவிட்டு வெளி யேறினேன்.

ரூமுக்கு வந்தபோது; நண்பன் இன்னமும் எழும்பாமல் குப்புறக்கிடந்தான். மேசையில் இரவுச் சாப்பாடு சாப்பிடாமல் மூடியபடியே எனக்குப் புரிந்துவிட்டது. பல்கலைக் கழகத்தை சுற்றி போடப்பட்டுள்ள தாகசாந்திக்கடையொன்றினுள் இரவு போயிருக்கவேண்டும். இந்த கடைகள்கூட கடந்த எட்டு ஆண்டுகளில் முளைத்தவைதான். நண்பன் கொஞ்சம் பியர் அடித்திருக்க வேண்டும்.

நண்பனை தட்டி எழுப்பினேன். புரண்டுபடுத்தான். இவனின் கூத்து இவனின் பெற்றோருக்கு தெரியவாய்ப்பில்லை. நான் வீட்டுக்குப் போகின்ற நாட்களில்தான் இந்த கூத்து. நண்பனை அடித்து எழுப்பினேன். இனி செய்யமாட்டேன் என்பதுபோல பார்த்தான். குளித்துவிட்டு விரிவுரைக்குப் புறப்பட்டோம்.

பல்கலைக்கழக வாசலில் ஒரேகூட்டம். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி அரசுக்கு எதிராக அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். ஆனால், விரிவுரையாளர்களின் முயற்சியினால் விரிவுரைகள் தடங்கலின்றி நடந்தன.

எங்களின் பீட பீடாதிபதியின் சீரான செயற்பாட்டால் மாணவர்கள் மத்தியில் அவருக்கு நல்ல மதிப்பிருந்தது. காலையில் ஏழுமணிக்கு பல்கலைக்கழகம் வந்துவிடுவார். மாலை ஏழுமணிக்குத்தான். பல்கலைக்கழகத்தைவிட்டு புறப்படுவார். மாணவர்கள் தயக்கமின்றி தங்களின் சிக்கல்களை அவருடன் போய்க் கதைப்பார்கள். அவரும் சிக்கல்களை சரியாக ஆராய்ந்து தீர்வுதருவார்.

பல்கலைக்கழக கல்வியை முடித்து பட்டம்பெற்று வெளியேறியவர்களும் அவரிடம் அடிக்கடி வந்து போவார்கள். வேலைவாய்ப்பு சூழல்கள் வரும்போது பட்டம்பெற்ற மாணவர் ளுக்கு இயன்றளவு வழிகாட்டியாகவும் இருக்கிறார்.

ஒன்பதுமணிக்கு பீடாதிபதியின் விரிவுரையே நடக்கவிருந்தது. சரியான நேரத்துக்கு வந்துவிட்டார். விரிவுரை பத்துமணிக்கு முடிவுற்றது. சிலபுத்தகங்கள் வாங்க வேண்டியிருந்தது. நண்பனும் நானும் ரவுனுக்குப் புறப்பட்டோம்.

சந்தியில் காக்கியுடையுடன் காவல்துறையினர் நின்று சிரித்துக்கொண்டிருந்தார்கள். வாங்குகின்ற சம்பளத்திற்குக்கூட கடமையை செய்கிறார்களா என்றால் அதுகூட இல்லை. சனங்கள் போக்குவரவு நெரிசலில் திண்டாடிக்கொண்டிருந்தார்கள்.

வீதியின் இடையிடையே இராணுவத்தினர் சிறு குழுக்குழுவாக நின்றனர். அவர்களின் கண்கள் போய் வரும் இளம்பெண்களை விழுங்கிக் கொண்டிருந்தன. நண்பனை பார்த்தேன். அவனின் கண்கள் ஆமியில் ஆக்ரோசமாய் மொய்த்திருந்தன.

யாழ்ப்பாண ஆசுப்பத்திரி சனங்களால் நிறைந்துபோயிருந்தது. அளவுக்கு மீறிய வசதிக்குறைபாடுகளுடனும் ஆசுப்பத்திரி ஆளுகை அனலாய் உழைத்துக்கொண்டிருந்தது.

பூபாலசிங்கம் புத்தக சாலையில் வியாபாரம் சூடுபிடித்திருந்தது. எமக்குத்தேவையான புத்தகங்களையும் கொப்பிகளையும் வாங்கிக்கொண்டு புறப்பட்டோம்.

ராஜா தியேட்டருக்கு போகும் வீதி ஒரேசனநெரிசலாக இருந்தது. 'மதுர' பட கதாநாயகன் விஜயின் பிரமாண்டமான கட்டவுட் தியேட்டர் முகப்பில் வைக்கப்பட்டிருந்தது. புதிய சினிமாவை பார்க்க, வயது வேறுபாடின்றி கதவை தள்ளியபடி அடிபட்டுக்கொண்டிருந்தார்கள். எட்டாண்டில் யாழ்ப்பாணம் எங்கோ போய்விட்டது என கவலைப் பட்டபடி பெடலை மிதித்தேன்.

கலட்டிச்சந்திக்கு போக எண்ணி சைக்கிளை திருப்பி வேகப்படுத்தினேன். எதிரே இரண்டு ரவலிங் பாக்குகளுடன் துணி விற்பவன்ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவனின் முகம் அடிக்கடி எங்கோ கண்ட ஞாபகமூட்டியது. அடிக்கடி நாங்களிருக்கும் வீட்டுக்கு வந்திருக்கிறான். அந்த வீட்டு அன்ரி அவனிடம் துணிகள் வாங்கியிருக்கிறார்கள். நல்ல மலிவாகவும் கடனுக்கும் துணிகளை கொடுத்து விட்டுப்போயிருக்கிறான். அன்ரிக்கு அளவுகடந்த மகிழ்ச்சி. அவன் வந்தால் அளவுகடந்து கதை நீளும். அவனின் விருப்புக்கேள்விகள் எனக்கு சந்தேகத்தையூட்டின.

நாடுகடந்து இங்கு வந்து இப்படி மலிவாக வியாபாரம் செய்ய வேண்டியதன் அவசியமென்ன? என்னுள் கேள்வி எழுந்தது. அவன் போன்றவர்களின் பின்னணியில் தமிழ்த்தேசியத்துக்கு ஆபத்திருப்பதை உணர்ந்துகொண்டேன். அன்ரிக்கு படிப்படியாய் அவனின் போக்கை கூறியிருந்தேன். தொடக்கத்தில் ஏற்கமறுத்த அன்ரி படிப்படியாய் அவனின் செயற்பாட்டை புரியத்தொடங்கியிருந்தாள்.

ஆமியின் அப்பக்கடைப் பாட்டு காதுகளில் இரும்புக்கணையாய் இறங்கியது. அப்பம் சாப்பிடும் மேசையில் ஆமியொருவன் ஏறியிருந்து காலாட்டிக்கொண்டிருந்தான்.

"மறைமுகமாய் எங்கடை சனங்களை பாழ்படுத்தினாங்கள். இப்ப வெளிப்படையாக செய்ய இடமும் போட்டாங்கள். இனி கஞ்சாக்கும் நீலப்பட விற்பனைக்கும் குறைவிருக்காது.

நண்பன் அப்பக்கடையை வெறித்தபடி வார்த்தைகளை வெளிப்படுத்தினான்.

'இதுக்கு ஒருமுடிவு காண வேணும்.'

எனக்கும் எல்லைமீறிய கோபம் தலைக்கேறியிருந்தது. பல்கலைக்கழகம் நோக்கி வேகமாய் பெடலை மிதித்தேன். அப்பக்கடைப் பாட்டு காதுகளிலிருந்து தேய்ந்து அழிந்துகொண்டிருந்தது.




## தெரிந்து கொள்ளுங்கள்

01. கூடு கட்டும் பாம்பினம்?
இராஜநாகம்

02. யானைகள் அதிகமுள்ள நாடு?
சிம்பாவே

03. வெட்டுக்கிளிக்கு உள்ள கண்கள்?
ஐந்து

04. கோள்களில் எதிர்ப்பாகம் சுற்றும் கோள்?
யுரேனஸ்

05. மோட்டார் சைக்கிளை பிரதானமாக உற்பத்தி செய்யும் நாடு?
யப்பான்

ப.காந்தரூபன்

# எங்கள் எறும்பு



பூச்சி இனங்களில் எறும்புதான் அறிவுமிக்கது. எறும்பில் 8000 வகைகள் உண்டு. அவை உலகெங்கும் காணப்படுகின்றன.

எறும்புகளால் தனியாக வாழமுடியாது. ஒரு எறும்புச் சமூகத்தில் மூன்று வகையான எறும்புகள் உள்ளன. ராணி எறும்பு ஆண் எறும்பு, வேலைக்கார எறும்பு என அவை. மனிதர்களில் ஆண்கள் குடும்பத்திற்கு தலைமை தாங்குவதுபோல் எறும்புகளில் பெண் எறும்பு ஒன்றுதான் தலைமைதாங்கும். இதனை ராணி எறும்பு என்று அழைப்பார்கள் ஒரு கூட்டில் ராணி எறும்பு ஒன்று தான இருக்கும். சில ஆண எறும்புகளும்' இருக்கும்.

வேலைக்கார எறும்புகள் நிறைய இருக்கும். வேலைககார எறும்புகள் யாவும் பெண் எறும்புகளே. ஆனால், அவை முட்டை இடுவதில்லை. ராணி மட்டுமே முட்டையிடும். மற்ற எறும்புகளைவிட ராணி எறும்பு பெரிதாக இருக்கும்.

ராணி எறும்புக்கும் ஆண் எறும்புகளுக்கும் முதலில் இறக்கைகள் இருக்கும். பிறகு அவை உதிர்ந்துவிடும்.

வேலைக்கார எறும்புகள் தான் சமூகத்தில் எல்லா வேலைகளையும் பகிர்ந்துகொண்டு செய்கின்றன. சில இரை தேடும் சில கூட்டில் இருந்து ராணியையும் குஞ்சுகளையும் பாதுகாக்கும். மற்றும் சில எதிரிகள் உள்ளே நுழையாதபடி கூட்டை பாதுகாக்கும்.

எல்லாவகை பூச்சிகளின் பிறப்பில் காண்பதுபோலவே எறும்பின் நிலையிலும் காணலாம். முட்டை- குடம்பி நிறையுடலி முதிர் பருவம்.

எறும்புக்கு இரண்டு கண்கள் இருந்தாலும் இவற்றால் பார்க்க முடியாது. ஆனால், எறும்பு தன் உணர் கொம்புகளால் மோப்பம் பிடித்து வழியை அறிந்துகொள்ளும். இந்த உணர் இழைகளின் மூலம் எறும்புகள் ஒன்றோடு ஒன்று பேசிக்கொள்கின்றன.

வேலைக்கார எறும்புகளுக்கு இரண்டு இரைப்பைகள் உண்டு. ஒரு பையில் தனக்குத் தேவையான உணவை நிறைத்து வைத்துக்கொள்கிறது. மற்றப் பையில உணவை நிறைத்துக்கொண்டு வந்து குஞ்சுகளுக்கு ஊட்டுகின்றது. எறும்புகளுக்கு தாடைகள் உண்டு. சிற்றெறும்பு, கட்டெறும்பு, முசுறு எறும்பு முதலியவை எம்மை தாடைகளால் கடிக்கும்.

எறும்புகள் பெரும்பாலும் பூமிக்கு அடியில்தான் கூடுகளைக் கட்டுகின்றன. சிலவகை எறும்புகள் மரத்திலும் கூடு கட்டும். அக்கூடுகள எங்கு இருந்தாலும் ஒழுங்காக அமைநதிருக்கும். ராணி எறும்பு தங்குவதற்கு தனியாக அறை உண்டு. மற்ற எறும்புகளுக்கு தனித்தனி இடமுண்டு. குஞ்சுகள் வளரத் தனி இடங்கள். உணவு சேமித்து வைக்கப் பண்டகசாலைகள் ஆகியவை தனித்தனியாக உண்டு.

அசுகுணி என்னும் ஒரு வகைப் பூச்சியை எறும்புகள் கொண்டு வந்து அதற்கு உணவு கொடுத்து நன்றாக வளர்க்கும். கொழுத்து வளர்ந்த அசுகுணியை எறும்பு தொடும்போது அதிலிருந்து இனிப்பான நீர் சுரக்கும். அதனை எறும்பு குடிக்கும். பால் தரும் பசுவாக இப்பூச்சி இருக்கிறது. அதை அடைத்துவைக்கவும், இந்த எறும்புகளின் வளையில் தொழுவங்கள் கூட உண்டு.

சில எறும்புகள் தோட்டங்கள்கூட செய்கின்றன! எறும்பு இலைகளை மென்று பிறகு வெளியே உமிழ்ந்து பரப்பிவைக்கும், சில நாளில் அந்த பூஞ்சான் காளான் வளரும். அதனை எறும்புகள் உணவாக தின்கின்றன. இனிப்புப் பண்டங்களும் இறந்த சிறு புழு பூச்சிகளும் எறும்பின் உணவாகும். உலகில் எவரெஸ்ட் சிகரம் தவிர்ந்த ஏனைய இடங்களி லெல் லாம் இந்த எறும்புகள் உள்ளன.

## சொற்சிலம்பம் - 71

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| னா | வு | ம | தி | ல் | டா | தீ |
| டி | கு | நீ | நா | ள் | ர் | ட் |
| ன | பா | ல் | கோ | ன் | ணி | கா |
| லை | அ | க் | ய | சு | ங் | வெ |
| நா | ட் | த | ஷ் | ரா | வா | த் |
| சு | வ | கா | சா | ய் | யெ | ளி |
| சி | மு | ய் | ஓ | கி | வி | க |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 69 இன் விடைகள்

01. சூரியன்

02. முல்லைத்தீவு

## சொற்சிலம்பம் - 69 இன் பரிசுக்குரியவர்

கோ.வேணுகா,
யாழ்.கைதடி விக்னேஸ்வரா,
வித்தியாலயம்.

## சொற்சிலம்பம் - 69 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. P.ஜெயக்குமார், பேராறு 4ஆம் கண்டம், ஒட்டுசுட்டான்.
02. செ.பிரசாந், காட்டுப்புலம் கரவெட்டி, யாழ்ப்பாணம்.
03. செ.நிசாந், இல39 செல்வபுரம், மு/பாண்டியன்குளம் ம.வி.
04. உ.அன்னநாயகி, 3ஆம் சந்தி கெருடாவில் தெற்கு, தொண்டமனாறு.
05. நொ.துயிலகா, 37/39, 1ஆம் ஒழுங்கை, கற்குழி, வவுனியா.
06. பொ.கதிர்ச்செல்வன், தரம்-8A வள்ளிபுனம், கனிஷ்ட உ.வித்தியாலயம்.
07. சூ.புவிதர்சன், அ.த.க. பாடசாலை, நட்டாங்கண்டல்.
08. சு.கௌரீஷன், இல-15, சின்னப்புதுக்குளம் வீதி, வவுனியா.

01. சனத்தொகை குறைந்த நாடு?
01) ....................................

02. கொக்கி எந்த நாட்டுக்குரிய தேசிய விளையாட்டு?
01) ....................................

சொற்சிலம்பம்-71
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ....................................
முகவரி :-....................................
....................................

# மிருகங்களின் பல் வைத்தியம்

பகுதி-02





# தாலாட்டு...

காற்றில் எழுந்து
வெறுவெளியில் அலைந்து
சலனமற்றிருக்கும் - அப்
பெருங்கடலின் ஒரு புறத்தில்
மரக்குற்றிகளில் - நீ
மிதந்து கொண்டிருப்பதாய்
என் நினைப்பு....
ஊருக்குள் வரும் - ஆயிரம்
கப்பல்களில் ஒன்றாவது
உன்னை மீட்டுவிடும்
எனும் வேட்கை....
தேரிற்குப் போகையிலும்
தொலைந்த பிள்ளை- நீ
அப்போது வீரிட்டு
அழுத குரல் - இன்னும்
நெஞ்சில் ரீங்காரமிட்டபடி- அன்று நீ
அழுத கண்ணீர்- இன்னும்
உதடுகளில் உலரவில்லை.....
உனக்காய் - முத்தங்கள்
சேர்த்து வைத்து
காத்திருக்கிறேன்.....கண்ணே!
தாழப் பறந்து வரும்-ஒரு
"ஹெலி" யாவதுனைக் காணும்
அப்போதாவது? நீவருவாய்..... ஐயா!
"அம்மா"- என்ற உன்
ஒற்றைக் குரல் போதும்
குழியுதறி வெளிவருவேன்...

த. அகிலன்



# தவறிப்போனவன்

தினமும் உன் அழகில்
பூரித்துப் போனேன்!

தனிமையில்!
நிலவும் விண்மீன்களும் சாட்சியிருக்க
படகில் எம்மைத்தாலாட்டியது
நாட்கள் ஒன்றல்ல!!

தாயின் கருவறை சுவாசம்
தாண்டி தரையில் வந்தவுடன்
உனது உப்புக் காற்றில்தானே
உயிர்வாழ்ந்தோம்!

கண்ணீர் சிந்திய போதும்!
களியாட்டம் போட்டபோதும்!
தோள் தட்டி துணையாய் இருந்தது
நீதானே!!

நாளை நமதென்று மார்தட்டிக்
கொள்ள நீதானே காரணம்!
வலைவிரித்த போதெல்லாம்
கைவிரிக்காது அள்ளி அள்ளித்
தந்தது நீதானே!!

எங்கள் குழந்தைகள்
விளையாட பஞ்சணை விரித்ததில்லை.
அடிக்கொரு ஆடை மாற்றி
அழகுபார்த்ததில்லை.
உனது மடியில் அவர்கள் தவழ்வது தானே
அழகென்று நம்பினோம்!
உனது உப்பு நீர்தானே
எங்கள் உடலின் ஊட்டச்சத்து.
இப்படி இருக்க எப்படி
மாறிப்போனாய்!!

இறைமகன் பிறந்துவிட்டான்
என்ற களிப்பு!!
புதுவருடம் ஒன்று பிறக்கப்போவதான
பூரிப்பில் பூபாளம் இசைத்தன
குயில்கள்!
பூவும் பிஞ்சும் காயும் கனியுமாய்
கூடியிருந்த எங்களை காணப்பொறுக்க வில்லையா??

போதுமம்மா!! போதும்!!
யுத்தத்தால் இறுகிப் போன தொண்டையை
தளர்த்தி சுவாசிக்க ஆரம்பித்தோம்.
அதற்கிடையே நீ வந்து
இதயத்தை பிடிங்கி விட்டாய்
ஏனம்மா!!

அன்றாடம் எம் பசியை
ஆற்றிய அன்னையே
உன் பசிக்கு உணவாய் எங்களை
தின்பாய் என்று எண்ணவில்லை!!
பரவாயில்லை!!
அடித்த உன்கரத்தால்
அணைத்துக் கொள்வாய்.
அந்த நம்பிக்கையில்!
உடைந்து போன படகுகளை
ஒட்டவைத்துக் கொண்டிருக்கிறோம்.
கரையில் இருக்கும் உறவுகளுக்கு
கையசைத்து உன்மடிமீது
உறவாட வருகிறோம்!!

தென் சீலன்-



# மீண்டும் துணிவுப் படகோடு...

வார்த்தைகளின் ஒத்தடம்
வலிகளைத் துடைக்காது
தேறுதல் மொழிகள் உம்
தேம்புதல்களையும் ஆற்றாது,
ஆயினும் தெம்பு கொடுக்கிறோம்.
நம்புங்கள் நாங்கள்
உடனிருக்கிறோம் என்று.

கூடியிருந்த எவர் பிரிந்துபோயிடினும்
மீதிக்காலம் உள்ளது நிஜமாய்.
துன்ப அலைகளாற்
காலத்தைக் கரைக்காமல்
மீண்டும் துணிவுப் படகோடு
வாழ்க்கைக் கடலேறுவோம்.
நாங்கள் ஓயாத அலைகளின் குழந்தைகள்
திரும்பத் திரும்ப வீசினாலும்
உளம் சளைக்காதவர்கள்.
உள்ளக்கடலின் ஆர்ப்பரிப்புக்கு முன்
அலைகடலும் சிறுதுரும்பாகி
அடங்கிக் கிடக்கும்.

எங்கள் பலத்தையும் நிமிர்வையும் சிதைக்க
எந்தவொரு 'சுனாமி' யாலும் முடியாது.
வலியையும் திடனையும் உலுப்பச்
சூறாவளிகளாலும் முடியாது.
இடிதாங்கிய ஈழத்தைப்
பிறரெவரும் ஆளமுடியாது.

காலத்தைப் பணிய வைப்போம் ஒருநாள்
எங்கள் காலடியில்.
தோளுயர்த்துங்கள்
தொலைதூர வெள்ளி
அருகாகத் தெரிகிறது.

—— அம்புலி

# துடைத்தெறி கண்ணீரை...

அழுதது போதும்
துடைத்தெறி கண்ணீரை.

விழுந்தவரெல்லாம்
எழுந்திராவிட்டால்
இந்த பூலோகம்
வெறும் பூச்சியமாகவே
இருந்திருக்கும்.

அழுத கண்ணீரும்
துவண்ட கரங்களும்
உங்கள் பயணத்துக்கு
தடைக்கல்.

வாழ்க்கைப் பயணத்தில்
இதுவொரு அனுபவம்
மீதிப்பயணத்திலும்
பல அனுபவங்கள் வரலாம்.

சோகத்துள் மூழ்கி
சோர்ந்து விடாதே.

வடியும் கண்ணீரை
துடைத்தெறிந்துவிட்டு
உந்தன் பயணத்தை
தொடங்கு
இந்த இயற்கையே
உனக்கு வழிகாட்டும்.

புகழன்



# அழிவின் அடையாளம்

குப்பற கிடக்கும்
என்வீட்டு முகடு
ஒரு அழிவுக்கு
சாட்சியாம்.

ஆனால்
நேற்றுவரை
இதுவே எங்கள்
வாழ்வின் அடையாளம்.

காகிதங்கள்
பல கொண்டு
நீட்டு காற்சாட்டை
அதிகாரி பலமுறை
வந்து போகிறார்.

இழந்து போனவை -எல்லாம்
திரும்ப கிடைக்குமாம்
ஆனால்
அழிவின் அடையாளம்
அப்படியே இருக்க
வேண்டுமாம்.

மகிழன்

எல்லாருக்கும் வணக்கம் ! வணக்கம் ! என்ன கனகாலமா ஆளையே காணேல்லை... வாகனக்காரங்கள் ஆராவது ஆத்திரத்தில ஒரேயடியா அடிச்சு நொருக்கிப் போட்டாங்களாக்கும் எண்டு நினைச்சிருப்பியளாக்கும். என்னை அறிஞ்சவை தெரிஞ்சவையள் காணிற நேரமெல்லாம் கேட்பினம் "என்ன அப்பு எழுதிறதை விட்டிட்டியள். நொட்டை தாங்கேலாமல் ஆராவது வெருட்டிப்போட்டாங்களோ ?" எண்டு. ம் . .ம்.... அடுத்தவங்கள் வெருட்ட மருண்டு போற ஆளில்லை இந்த ஏரம்பர் ! எட நல்ல விசயத்தை துணிஞ்சு சொல்லிறதுக்கு, அதுகும் அது எங்கையிருந்து கிடைக்கிதெண்டு கேட்டால் 'அறிஞ்சு கொள்ளேலாமல்' கிடக்கிதாம். தயவுசெய்து உந்த 'விலாங்குப்பம்மாத்து' விளையாட்டுக்களை கொஞ்சம் ஒத்தியாவது போடுங்கோ ! எங்கட தலையளைக் காட்டி எடுக்கிற பிச்சையை வைச்சே, எங்கட தலையிலை குண்டுகளைக் கொட்டக்கூடிய 'நோணா'வின்ர நோகாத நகர்வுகளுக்கு, தெரியாமல் கூட ஒத்துழைச்சு, பாதிக்கப்பட்ட சனத்தின்ர பழியை வாங்கிக்கொள்ள வேண்டாம் ! அந்த வெள்ளைக்காரத்தங்கைச்சி பிரான்சிஸ் ஹரிசன் தன்னோட வேலையைத்தரமாச் செய்யிது. அதளவுக்கெண்டாலும் அழுது காட்டி...) எடுத்து ராணுவத் தேவையளை பூர்த்திசெய்து, வீர 'துட்ட'கைமுனுக்களின் கைகளில நாட்டை விளையாடக்குடுக்கத்தான் அலுவல்கள் நடக்கிது. அதுக்காகத்தான் அந்தப் பொறுப்பும் ராணுவத்திட்டை குடுக்கப்பட்டிருக்கு. இப்போதைக்கு ஆமியின்ரை சாப்பாட்டுத் தேவையளையாவது நிவாரணத்தில இருந்து எடுத்தாலே, அவாவின்ரை க்ஜானாவின்ர கஷ்ரம் ஓரளவுக்கு எண்டாலும்தீரும் தானே ! என்னவோ ஒண்டு சொல்லிறன். ஆராவது ஒரு நாடு நல்ல உள்ளத்தோட உதவி செய்ய முன்வந்தால், அதை ஏற்றுக கொண்டு உறவாக இருக்கோணுமே தகப்பன் குடுக்கிறதுக்கு மேலாக அவாவும் தன்னோடை கையிருப்பைப் பொறுத்து அப்படியே இயக்கத்துக்கும், புனர்வாழ்வுக்கழகத்துக்கும் தொடர்ந்தும் குடுத்துக் கொண்டு வாறாவாம் ! உண்மையில அந்த வீட்டில வயசுக்கு வந்த இரண்டு பொம்பிளைப் பிள்ளையள் இருக்கினம், ஆம்பிளைப்பிள்ளையள் இல்லை. அப்பிடியிருந்தும் தங்களைப பற்றி நினைக்காமல், நாட்டைபற்றி நினைக்கிற அப்பிடியான சனம் இருக்கேக்கிள்ளை எங்களுக்கென்ன யோசனை !! அதுசரி. நீங்கள் யோசிக்கிறது விளங்கிது... அங்கை எங்கட சனம் எப்பிடியெண்டு முந்திச் சொன்னனான் ?... பாருங்கோ வயசு போறதால வாக்கும் மாறத்தொடங்கிட்டிது. ஆ... எழுபத்தி மூண்டெண்டு சொன்ன ஞாபகம். அதோட ஒண்டைக் கூட்டிக் கொள்ளுங்கோ! அதாலதான் நேரகாலத்துக் குள்ளை போய்ச்சேர்றதுக்கு முன்னால உங்களோட எவ்வள வைக்கதைக் கலாம் எண்டுதான் இறங்கிட்டன்.

நீங்கள் வேற பிரச்சினையளில இருக்க, நான் வந்து என்ர கதையளைச் சொல்லிக்கொண்டிருக்கிறன். இண்டைக்கு முடிக்க முதல் ஒண்டைச்சொல்லிறன். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்கவேண்டாம்.

# "...ஆராவது கண்ணீர் வடிச்சபடி மூக்கு உறிஞ்சிக்கொண்டு இருக்கிறதா கேள்விப்படோணும்... எனக்குக்கெட்ட கோபம் வந்திடும்..."




வன்னியில நான் ஏன் பயப்பிட வேணுமெண்டு கேட்கிறன்.

உதுக்கு மேல நடந்ததைப் பற்றிக் கதைக்கிற தருணமும் இல்லை இப்பை. ஏனெண்டால் எங்கட இனம் பெரிசா ஒரு அழிவைச் சந்திச்சிருக்கு. கன சனத்தை நாங்கள் இழந்திருக்கிறோம் ! சொத்து, பத்தெண்டு காலாகாலமாச் சேர்த்ததையும் சுனாமி அள்ளிக்கொண்டு போட்டிது. அவனவன் அங்கையிஞ்சை உதவி செய்ய ஆலாப்பறக்கிற நேரத்தில எங்கட 'சிங்கிடி நோணா' தமிழாக்களின்ரை சடலங்களுக்குப் பக்கத்தில நிண்டுகொண்டு, போறவாற நாடுகளையெல்லாம் இழுத்திழுத்து ஒப்பாரி வைச்சுக் கொண்டிருக்கிறா. என்னடா ! எங்கையிருந்து உப்பிடி ஒரு ஞானம் பிய்ச்சுக் கொண்டு வந்திச்செண்டு பார்த்தால், பிணங்களின்ரை தொகையைக் காட்டி சர்வதேச சமூகத்துக்கு முன்னால பிழைப்பு நடத்தலாம் எண்டிற கேவலமான புத்திதான் பாருங்கோ அது !. சே... உதுகும் ஒரு பிழைப்பே! எந்தக்கேவலமான பிழைப்பும், உந்தளவுக்கு கேவலம் இல்லை ! தங்கட இனவாதப்போக்கின்ரை வன்முறையால கன வருசங்களாகப் பாதிக்கப்பட்ட சனத்துக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்யிறதுக்கான 'சிரான்' ஐயும் உருப்படவிடேல்லை, 'இடைக்காலத்தீர்வுத்திட்ட'த்தையும் ஏற்றுக்கொள்ளேல்லை. இப்ப என்னடாண்டால் கலைச்சுக்கலைச்சுப் பிடிச்சு கைகுடுக்கிறா ; கோபால் பற்பொடிக்கு மாதிரி ஈ . . யெண்டு போஸ் வேற குடுக்கிறா ! இழப்பைப் பொறுத்தவரை இனசனம் பார்க்கக்கூடாது. உண்மையைச் சொல்லப் போனால் இன்னுமொரு தரையிறக்கத்தை அனுமதிக்கக்கூடாதெண்டு கரையெல்லாம் முகாம் அடிச்சு நிண்டு, அலையடிச்சதில செத்துப் போட்டினம். சண்டையில சாகிறது வேற, இது வேற ! நினைச்சா ஏதோ மனசில வேதனையாத்தான் கிடக்கும். எங்கட மனம் இப்படிப் பாடுபட, 'கோல்' ஐயும், 'ஹம்பான் ரோட்டை'யையும் காட்டி, அங்கதான் முழு இழப்பும் எண்டு சொல்லிறதோட, வாற உதவிப்பொருள்களில ஆறிலொரு பங்கை மட்டும்தான் தாங்கள் எடுக்கிறம், மிச்சத்தையெல்லாம் புலியளிட்டைக் குடுக்கிறம் எண்டு அண்டாப்புளுகை எல்லோ அவிழ்த்து விடிறா. இஞ்சை அவையின்ர வந்து குவியிற லட்சணத்தை ஒருக்கால் பார்ப்போமெண்டால் பிபிசி இன்ரை கமரா வயர் காலியில சிக்குப்பட்டுப் போய்க் கிடக்கு. எங்கட செய்தியாளர்மாரும் பேய்க்காயள். அன்றாடம் தேவையான பொருட்களெல்லாம் வன்னி மற்றும் யாழ்ப்பாணம் பகுதியில தவறாமல் கிடைக்கிது. ஆனால் செய்யாட்டி தமிழனா இருந்து என்ன அர்த்தம் ? நீங்கள் சொல்லிறது வெறுமனே செய்தி மாத்திரமில்ல, இஞ்சை நொந்துபோயிருக்கிற எங்கட சனத்தின்ரை நிலைமை எண்டதையும் மனசில வைச்சுச் செயறபடுங்கோ ! மற்றது இன்னுமொரு விசயம் : நாங்கள் கி.பி 2005 இலும், பிரபாகரனுக்குப்பின் 51ஆம் ஆண்டிலையும் இருக்கிறம். அப்பிடியிருக்க பன்னாட்டு சேவையில கிடைச்ச ஒரு வாய்ப்பில அதேன் இயக்கத்தைக் குறிப்பிடிறதுக்கு Rebel (கலகக்காரர்கள், கிளர்ச்சியாளர்கள்)' எண்டு பாவிக்கிற பழக்கம்? விடுதலைப்புலிகளின்ர மாவீரர் தினம் பற்றியும் குறிப்பிடிறனீங்கள். சனத்தின்ர விடிவு இயக்கத்துக்கான சர்வதேச அங்கீகாரத்திலையும்தான் தங்கியிருக்கு. அதுக்காக நானொணடும் பரணிபாடச்சொல்லிச் சொல்லேல்லை. மனச் சாட்சியோட பாதிக்கப்படிற மக்களின்ர குரலா வெளியுலகத்துக்கு ஒலிக்கிற ஒரு பத்திரிகையாளனாக இருந்தால் போதும். தயவுசெய்து 'விறகு நெருப்பில்' மட்டும் குளிர்காயவும் ! மற்றது பாருங்கோ , உந்த உலக நாடெல்லாம் கண்ட கிண்ட பிரச்சினைக்கெல்லாம் விசாரணைக்கமிசனுகள் வைப்பினம். எங்கட நாட்டிலையும் காணாமல் போன பட்டியலில உப்பிடியானகன 'கமிசனுகள்' இருக்கினம். வெளிநாட்டுக்காரரைக் கொண்ட அப்பிடி ஒண்டை வைச்சு, உந்த நிவாரணப்பொருட்கள பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேர்றதை உறுதி செய்யேலாதோ ?

என்னவோங்கோ ! முதல் தொங்கிக்கொண்டிருந்த 4.5 பில்லியன் உதவியையும் இப்படியாவது (இன, மத பேதமில்லாமல் எல்லாற்றை சடலங்களையும் வைச்சு, தவிர அதுக்காக மற்றாக்களின்ரை கையளையே நம்பியிருக்கக்கூடாது. எங்களின்ரை பலம், நாங்கள் ஒவ்வொருவரும் தான் ! அதிலையும் வெளியால வாழிற எங்கட சனம் தங்கட கடமைக்கு மேலாலயே செய்யிறது நீங்களெல்லாம் அறிஞ்சிருப்பியள்தானே ! சில ஆக்கள் நினைப்பீங்கள் 'ஏதோ தாய்-தகப்பனுகள் தங்கட மனச்சாட்சிக்குச் செய்யினம். அடுத்த தலைமுறைக்கு சமூகம் கைமாறேக்கிள்ளை நிலைமை மாறிடும்' எண்டு. அது பிழையுங்கோ! இன உணர்வு மனச்சாட்சியில தங்கியிருக்கேல்லை. இழக்கப்படிற ஒவ்வொரு ஈழத்தமிழன்ரை உயிராலையும், எங்கட தலைவரின்ரை நெறிகாட்டலாலையும் இன உணர்வு சகலதுமாய் வியாபிச்சிருக்கு. உதாரணத்துக்கு ஒரு சம்பவம் நான் சொல்லிறன். எனக்குத் தெரிஞ்ச ஒரு தம்பி வெளியால போய்க்கனகாலம் ஆயிட்டிது. அவருக்கு போகேக்கிள்ளை கைக்குழந்தையா ஒரு பொம்பிளைப்பிள்ளை இருந்தது. இப்ப கிட்டடியில அவற்றை இடத்தில இருந்து வேற ஒரு தம்பி வந்து என்னைச் சந்திச்சிது. உங்களுக்குத் தெரியும்தானே, உந்த விடுப்புக் கேட்கிறதெண்டால் எனக்கும் அல்வா மாதிரி எண்டு. அப்பை நானும் விளாவாரியா விசயங்களைக் கேட்டன். கீழ்ப்பந்திக்கு வாங்கோ, வடிவாய்ச் சொல்லிறன் !


கைக்குழந்தையா போன அந்தச் சின்னன் இப்ப பதினைஞ்சு வயசு, பத்தாம் வகுப்பு முடிச்சு, பல்-டொக்ரரா வரப்படிக்கிதாம். அப்படிப் படிக்கேக்கிள்ளை போக்குவரத்து, அதுஇதுகெண்டு உதவித்தொகை கிடைக்குமாம் ! தன்ர முதலாவது சம்பளம் நாட்டுக்குத்தான் எண்டு சொல்லி, எடுத்து வைச்சுக்குடுத்திச்சாம் ! யெல்லாம் கஷ்ரப்பட்டு உழைச்சுக் கொண்டிருக்க, இஞ்சை வேலைவெட்டி ஒண்டும் செய்யாமல், நோகாமல் இருந்து கொண்டு, ரெலிபோன் அடிச்சு காசனுப்பச் சொல்லிறதும், அந்தக் காசில மோட்டர்சைக்கிள் வாங்கி பெற்றோலும் விட்டுக் கொண்டு, நேரகாலம் தெரியாமல் பெட்டையளுக்குப் பின்னால சுத்திறதுகளும் எங்கடை சந்ததியள் எண்டு தானே நீங்கள் யோசிக்கிறீயள். இனத்துக்கு அது குறுகிய காலப் பிரச்சினை பாருங்கோ ! அவையளுக்கு கழுத்தை நீட்டிற ஆக்களுக்குத்தான் அது நீண்டகாலப் பிரச்சினை. ஆரோ ஒரு சிலர் தங்களை ஏதோ பெரிய வைஜந்திமாலா, பட்டம்மா, சரோஜாதேவி . . சீச்சீ ! நான் என்ர காலத்திலேயே நிக்கிறன். இப்ப ஆரது ? உந்த... என்ன பேர்... அதுகும் அயத்துப் போச்சு.. ஆ... சோனியா அகர் வாலோ... ஆட்டுவாலோ எண்ட நினைப்பிலை, இரவல் பெற்றோலிலை ஓடிற TVS களுக்கு கழுத்தை நீட்டினால் அது தனிப்பட்ட பிரச்சினை தானேங்கோ. சே ! எங்கையோ தொடங்கி புனர்வாழ்வு வரைக்கும் வந்திட்டன். எதிலை விட்டனான் ? ஆ. .அப்பிடி கனக்க வெளிநாட்டு விசயங்கள் வைச்சிருக்கிறன்; பேந்து பேந்து தாறன்.

அப்பிடி ஆயிரம் விசயங்கள் இருக்கு கதைக்கிறதுக்கு பத்தாக் குறைக்கு எருமைமாடு வேற எனக்குக் கிட்ட வந்திட்டிது. ஐயோ... என்ர பக்கத்துவீட்டுக்காரர் தங்களைத்தான் நான் சொல்லிறன் எண்டு கோவிக்கப்போயினம். சத்தியமா நான் அந்த எருமையளை சொல்லேல்லை. இயமன்ர எருமையைச் சொல்லிறன். சுனாமி அமளியோட பிறந்தநாளுகளையும் மறந்திட்டன். எத்தினை முக்கியமா ஒருத்தரும் நடந்ததை நினைச்சு கவலைப்பட்டுக்கொண்டு இருக்கக்கூடாது. நாங்கள் ஒரு சின்ன இனமா இருக்கலாம், ஆனாலும் சிறுத்தை இனம் பாருங்கோ ! மற்ற இனங்கள் மாதிரி இல்லாமல், உலகத்திலையே எங்கட இனம் மட்டும்தான் இரண்டு சூரியனுக்குச் சொந்தக்காரர்.

இயற்கைச்சூரியன் ஒண்டு இனத்துக்கான சூரியன் மற்றவர். ஒண்டும் யோசிக்காமல் எதிர்காலத்தில பற்றுறுதியோட இருக்கோணும். உலகநாடுகள் உதவுதோ இல்லையோ உங்கட இயக்கம் உங்களுக்காக இருக்கெண்டிறதை நினைவில வைச்சிருங்கோ! தலைவற்றை விருப்பப்படி தம்பி சூசை முன்னுக்கு நிண்டு எல்லாம் செய்துகொண்டிருக்கிறதா முல்லைத்தீவுக்குப் போய்வாற சனங்கள் சொல்லுது. அதேமாதிரி மற்றமற்ற இடங்களிலையும் கெதியாத் தொடங்கிடும், நம்பிக்கையா இருங்கோ! அதைவிட்டிட்டு ஆராவது இடம்பெயர்ந்தோருக்கான நிலையங்களில கண்ணீர் வடிச்சபடி, மூக்கு உறிஞ்சிக்கொண்டு இருக்கிறதா கேள்விப்படோணும்... எனக்குக் கெட்டகோபம் வந்திடும். வந்து அலகு பேர்த்துப்போடுவன் பேர்த்து, சொல்லிப்போட்டன்... ஓம் ! **வேறென்ன குஞ்சு, குருமன், குட்டி, பேரப்பிள்ளையள், நைன்ரி, ருவென்ரி, சிக்ஸ்ரி, செவிண்டி என எல்லாருக்கும் இதயம்கனிந்த தைத்திருநாள் வாழ்த்துக்களுடன் விடைபெறும் உங்கள் ஏரம்பர்.**

பொறுங்கோ ! பொறுங்கோ ! கடைசியாய்க் கிடைச்ச விசயங்கள் கொஞ்சம் கிடக்கு. ஆரோ ஒருத்தர் இந்தோனேசியாவில நிண்டு சொல்லியிருக்கிறார் "இனியெண்டாலும் 'ஆச்சே' இலையும், இலங்கையிலயும் பிரிவினை கோரிறதை விட்டிட்டு, சுமூகமாக வாழப்பார்ப்பினம் எண்டு நினைக்கிறன்" எண்டு. இதென்ன கதை ? நாங்களென்ன சுனாமிக்குத் தாற சோத்துப்பாசலுக்கும், சுடுதண்ணிப்போத்திலுக்காகவுமே போராடிறோம். எங்களை அவங்கள் மதிச்சா, இணைஞ்சிருப்பம். அதைவிட்டிட்டு மிதிக்க வெளிக்கிட்டா, பிரிஞ்சு போவோம் ! அதைப் புரிஞ்சுகொள்ளாமல் உதென்ன கதை ! இன்னுமொரு விசயம் பிள்ளையள். இதுவரை காலமா தமிழரின்ர இழப்புக்கள் வெளியுலகத்துக்குத் தெரியவந்தால்தான், அரசாங்கத்துக்கு சரியான சிக்கல்கள் வாறது. செம்மணிப்புதைகுழிகளையே நினைச்சுப்பாருங்கோவன் ! ஆனால், இப்பயோ வெளியால தெரியவரவரத்தான் அரசாங்கத்துக்கு வலு சந்தோசமாம். ஒரேயடியா உத்தினை உயிருகளைக் கொடுத்த வேதனைக்கு மத்தியிலயும் இஞ்ச சனங்களும், இயக்கமும் சேர்ந்து

(20 ஆம் பக்கம் பார்க்க...)




# நெஞ்சில் வைராக்கியம் வேண்டும்

வாழ்வில் வெற்றிபெற இன்றியமையாத ஒரு விஷயம் நாம் நம்பிக்கையில் இருக்கிறோமோ அலலது பிறர்பிடியில் இருக்கிறோமோ என்பது. பிறர்பிடியில் இருந்தால் வெற்றியே பெறமுடியாதென்று நாம் கூறமுடியாது. பிறர்பிடியில் இருந்தாலும் நாம் வெற்றி பெறுவதற்கு உத்தரவாதம் வேண்டும். அல்லது அதற்கான அறிகுறிகளாவது தெரியவேண்டும். இவர் துணையின்றி நாம் முன்னேறவே முடியாது என்பது வேறு. இவர்கள் எங்களுக்கு துணையா அல்லது துன்பமா என்கிற் முடிவுக்கு வரமுடியாத நிலை வேறு.



சிலர் எந்த தனிநபர்களிடமும் சிக்காமல் சூழ்நிலையின் கைதிகளாக இருக்கிறார்கள். இவர்களும் தங்களின் விலங்குகளை உடைத்தெறிய வேண்டும். எல்லாம நல்லபடி நடக்கும் என்பது ஆக்கபூர்வமான சிந்தனைதான். ஆனால், அதற்கான களங்களை உருவாக்க எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளாமல் இருப்பது சரியான பத்தாம் பசலித்தனம். உங்களுக்கு என்னவேண்டும்? நீங்கள் என்னவாக ஆகவேண்டும்? அவை எப்போது வேண்டும். இந்த மூன்று கேள்விகளுக்கும் உடனே தெளிவான விடைகளை காண்பதுடன் எழுதி வைத்துக்கொள்ளுவதும் முக்கியம். அடுத்த கட்டமாக இவற்றிற்கான தடைகளை அடையாளம் காணவேண்டும்.

நம்மைச் சுற்றி என்னென்ன தடைகள் இருக்கின்றன என்று தேடும் முன் நம்மனதிற்குள் இருக்கும் தடைகள் என்ன. நம்மிடம் உள்ள கோளாறுகள் என்ன என்பதை உணர்ந்து பார்த்து அவற்றை எம்மிடமிருந்து அகற்றிவிடவேண்டும். உடலைக் கயிற்றால் கட்டிக் கொண்டுவிட்டு, எனக்கு ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொள்ள ஏன் வாய்ப்புத் தரவில்லை என்று சண்டைக்குப் போகும் அப்பாவிச் சிறுவன கதையாய் நம் கதை ஆகிவிடக் கூடாது. அடுத்தது எங்களினது மனத்திரையில் உள்ள ஐயங்களை அகற்றவேண்டும். எங்களால் முடியுமா என்கிற ஐயம் எங்களுக்குத் தேவையா என்கிற ஐயம், எங்களால் அதை காப்பாற்றிக்கொள்ளமுடியுமா என்கிற ஐயம் இந்த ஐயங்கள் எங்களை சுற்றிக்கொண்ட பாம்புகள். இவற்றை வசிக்க அனுமதித்துவிட்டால் கடிக்காமல்விட இவற்றை ஆக்கபூர்வ சிந்தனைகள்மூலம் அகற்றிவிட முடியும், ஆரோக்கியமான சிந்தனைகளைத் திரைப்படம்போல் மனதிற்குள் கொண்டு வந்து அதற்குள் உர மூட்டுங்கள். யார் என்னை பயமுறுத் தினாலும்சரி, காற்று இறக்கினாலும்சரி, அல்லது சூழ்நிலைகள் மிரட்டினாலும் சரி அவற்றில் உள்ள செய்திகளை மட்டும் ஆக்கபூர்வமாக எடுத்துக் கொணடு அனைத்தையும் சமாளிப் பேன் என்று மனதிற்குள் உறுதி பூணுங்கள்.

எந்த இலக்கைநோக்கி நடைபோடுகிறோமோ அதற்கான பாதைகளை இனங்கண்டு அறிந்து தகவலை அகற்ற வேண்டியது அவசியம். நம்முடைய ஒவ்வொரு நாளையும் சாதனை புரியக்கிடைத்த வாய்ப்பு நாளாகக்கரு[illegible]ண்டும். எங்களைத தேடிவரும் [illegible]ளைக் கண்டு மிரண்டு போகாம[illegible] இது எங்களுக்கு கிடைத்த அரியவாய்ப்பு என்று துணிந்து ஏற்றுக்கொள்ளுங்கள். வாய்ப்புகள் கடந்து போனால் பார்வையாளராகிவிட வேண்டாம். அவற்றை கைப்பற்றுங்கள். வீண் விமர்சனம் செய்யும் வாய்களை வெற்றிகளின் வீச்சால் அடையுங் கள் மீறிவரும் வீண் விமர்சனங்களை பற்றி அளவுக்கு அதிகம் கவலைப் படாதீர்கள். ஒவ்வொரு நாளும் எங்களமது விரும்பியோ விரும்பாமலோ இருவிதமான அனுபவங்கள் ஏராளமான அளவில் திணிக்கப்படுகின்றன. அவற்றில் இனிமையான அனுபவஙகள் ஏற்படும்போது நிதானித்து ஏற்றுக்கொள்ளுங்கள். மோசமான அனுபவங்கள் ஏற்படும்போது எங்களுக்குச்சொல்ல வந்த செய்திகள் என்ன, உணர்த்த முயன்றபாடங்கள் என்ன என்கிற தேடலில் இறங்குங்கள். எத்தனையோ மோசமான அனுபவங்களைத் திரும்பத்திரும்பப் பெறுகிறவர்கள் கடந்த கால பாடங்களை உணராதவர்கள் என்றோ அவறறைச்சரிவர நெஞ்சில் பதித்துக் கொள்ளாதவர்கள் என்றோ உறுதியா கக்கூற முடியும். கடந்த காலத்தில் மோசமான அனுபவங்களை நெஞ்சில் பதித்துக்கொண்டால் அவை தரும் எச்சரிக்கை உணர்வே அலாதி.

முள்பாதை என்று தெரிந்தும் காலணி இன்றி நடந்து திரும்பத் திரும்பக் காலில் அதை குத்திக் கொள்வது ஏன்? சுடும் என்று தெரிந்தும் நெருபபிற்குள் கையை விடுவது ஏன்? மூட்டுச்சுவர் இருககிறது என்று தெரிந் தும் அந்தப்பாதையை தேர்ந்தெடுபபது ஏன்? செய்த தவறுகளை தொடர்வதும் ஒரே பாடத்தை திருமபத் திரும்பக் கற்பதும் [illegible]விரையம மட்டுமல்ல பின்நோக்கிச் செல்லும் செயலாகும்.

இலக்குகளை விதைகளாக்கி அனுபவப்பாடங்களை உரமாக்கி உழைப்பு எனும் நீரிட்டு, முயற்சி எனும் உரமிட்டு, எச்சரிக்கை உணர்வு எனும் மருந்தைத்தெளித்தால் நல்ல அறுவடை உறுதி.

முன்னேற்றம், வளர்ச்சி, வெற்றி என்பனவெல்லாம் எந்தத் தனிநபரின் சொத்துகளும் அல்ல. இவை எங்களுக்கு உரியவை இவற்றை அடையும் காலம் கனிந்து விட்டது. இனியும் செக்குமாட்டுத் தனம் கூடாது. நெஞ்சில் வைராக்கியம் வைத்து உலகிற்கு உங்களை அடையாளம் காட்டுங்கள், வெற்றி உறுதி.

இ.றஜித்

# வீண் ஆடம்பரத்தை குறையுங்கள்

இன்றைய குடும்பங்களில் பொருளாதார நெருக்கடியை தோற்றுவிக்கும் காரணியாக ஆடம்பரம் விளங்குகிறது. இதனை நாம் இயன்றளவு அகற்றி வாழ்ந்தால் குடும்பத்தில் ஏற்படும் பொருளாதார பிரச்சினையை ஓரளவு குறைக்கலாம்.

ஆடம்பரம் எப்படி ஆண் பெண்களை ஆட்டிப்படைக்கிறது என்பதை பார்ப்போம். குறிப்பாக மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கும் குடும்பங்களில் வசதிக்கு மீறியவற்றைச் செய்தல் மிகவும் கஷ்டத்தை மென்மேலும் கொண்டு வரும். எம்மிடம் இருப்பது எவ்வளவோ அதன் படிவாழநாம் பழகிக் கொள்ளவேண்டும்.

தேவையில்லாமல் தேவையில்லாதவற்றைச்செய்யாமல் தேவையறிந்து சிக்கனமாய்ச் செய்தால் வ்ணாக செலவழியும் பணம் நாம் இன்னலுற்றவேளையில் உதவியாக அமையுமல்லவா.

சில வீடுகளில் குடும்பப்பெண்மணிகளும் சரி கணவன்மாரும் சரி ஆடம்பரத்தில் ஆசைகொண்டு தம் வாழ்வை அலங்கோலப் படுத்துகின்றனர். இவர்கள் இருவரும் இப்படி நடந்தால் பிள்ளைகளின் எதிர்காலம் என்பது கேள்விக்குறியாகவே அமையும்.

எப்போதும் எம்முடைய வரவுக்கு மிஞ்சிய செலவுகளை நாம செய்தல் கூடாது. தற்போது வருடா வ்ருடம் தம் பிள்ளைகளுக்கு ஆடம்பரமாக செலவிடுவதை தவிர்த்து அப்பிள்ளையின் சேமிப்பாக வங்கியில் சேமித்து வைத்தால் அப்பிள்ளையின் வருங் காலத் திற்கு வழிவகுக்குமல்லவா.

உண்மையில் கஷ்டமான நிலையில் உள்ள பெற்றோரும் கூட கடன் பட்டாவது வ்ண ஆடம்பர கொண்டாட்டங்களை கொண்டாடுகின்றனர். ஏன் அது கட்டாயம் செய்யவேண்டுமா? இவற்றைச் சிந்திக்காமல் பகட்டுக்காக பகடைக்காய்போல ஏன் வாழ வேண்டும். எத்தனையோ ஏழை எளிய மக்கள் ஒரு நேரக் கஞ்சிக்கே கதியற்று தவிக்கின்றனா. ஏன் தாய் தந்தையற்று எததனை சிறார் அன்புக்காகவும் ஆதரவிற்காகவும் தவிக்கின்றனர். இவர்களை நல் நிலைப்படுத்த உங்கள ஆடம்பரச்செலவு உதவலாம் அல்லவா. கோடி புணணியம் உங்களுக்குவரும் எனியாவது உங்கள குணத்தை மாற்றி அமைதியான வாழ்வை அமையுங்கள்.

சு.சிவாஜினி

# புரிந்து கொள்ளுங்கள்

வாழ்வின் வேகத்தை அறியுங்கள் -இந்த
வரிகளைக்கேட்டுப் புரியுங்கள்.
வாழ்வின் வாசல் கோலங்கள்- இந்த
வர்ண வரிகளின் ஜாலங்கள்.
செயல் என்பது முடிவின் விளைவு.
தவறு என்பது வாழ்வின் வளைவு.
உறவு என்பது உணர்வின் பாடல்.
பிரிவு என்பது உயிரின் தேடல்.
பொறுமை என்பது ஞானத்தின் இருப்பு.
பொறாமை என்பது இயலாமையின் நெருப்பு.
அன்பு என்பது மாய முத்திரை.
ஆசை என்பது போதை மாத்திரை.
துணிவு என்பது மானச்சிகரம்.
துயரம் என்பது தூங்கும் நகரம்.
கோபம் என்பது குறும்பு மழலை.
கர்வம் என்பது மாரித்தவளை.
பணம் என்பது வானவில்.
குணம் என்பது சிற்பக்கல்.
நீதி என்பது சட்டக்கண்ணீர்.
சாதி என்பது உப்புத்தண்ணீர்.
நன்மை என்பது கடலின் முத்து.
தீமை என்பது சுடலைச் சொத்து.
தோல்வி என்பது சபதவிழி.
வெற்றி என்பது வியர்வைத்துளி.

ஆ.ஆனந்தி

## பரோடா




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| சீனி | - 1/2 கிலோ |
| ரவை | - 1/4 கிலோ |
| நிலக்கடலை | - 1/4 கிலோ |
| கஜு | - 100 g |
| பிளம்ஸ் | - 100 g |
| நெய் | - 100 g |
| ரின்பால் | - 1/4 பகுதி |

செய்முறை:-

ரவையை பொன்னிறத்தில் வறுத்தெடுக்கவும், நிலக்கடலையையும், கஜுவையும் வறுத்து அரைப்பதத்திற்கு அரைத்தெடுக்கவும். பின்பு தாச்சியில் எல்லாவற்றையும் நெய் விட்டு ஒன்றாக கிளற வேண்டும். திரண்டு வரும் பதத்தில் ரின்பாலைச் சிறிது நீரில் கரைத்து கலவையில் தெளித்து உருண்டைகளாகச் சுடச்சுட பிடித்தெடுத்து ஆறியதும் பரிமாறலாம்.

P. மகிழ்மணி

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்–32

பெயர்:..............................................

முகவரி:..............................................

..............................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

நீண்ட காத்திருப்புக்குப் பிறகு, ஆச்சரியந்தருகிற மாதிரியாய் பட்டதாரிகளுக்கு நியமனம் கிடைத்திருக்கிறது.

பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பின் வேலைவாய்ப்புகளுக்காகக் காத்திருந்தவர்கள் இப்போது ஆறுதலடையக்கூடும்.

படித்துவிட்டு, தனியார் நிறுவனங்களிலும் பொது அமைப்புகளிலும் வேலை செய்துகொண்டிருந்தவர்கள், 'அரசாங்க உத்தியோகம்' என்றவுடன் செய்த வேலையைவிட்டு ஓடிவந்து விட்டார்கள்.

சிலர் ஏற்கனவே வேலை செய்த இடங்களில் கூடுதலான சம்பளம் வாங்கியவர்கள். சிலர் கூடுதலான வாய்ப்புகளைப் பெற்றவர்கள். இப்போது அடிப்படைச் சம்பளத்தில் குறைந்த ஊதியத்தில் வேலைசெய்கிறார்கள்.

பலருக்கு, அவர்கள் படித்த துறைகளுக்கும் கிடைத்திருக்கிற வேலைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லாதிருக்கிறது. பொருத்தமில்லாதவேலை-விருப்பமில்லாத பணியென்றபோது 'அரசாங்க உத்தியோகம்' என்பதால் அதற்குத் தங்களை இசைவாக்குவது என்ற தீமானத்துக்கு வந்துவிட்டார்கள் இந்தப்பட்டதாரிகள்.

அரசாங்க உத்தியோகத்துக்கு தனியான மதிப்புண்டு என்பது இவர்களுடைய எண்ணம்.

பொறுப்பான பதவி, அதிகாரமுள்ள பொறுப்பு என்றாலும் தமக்கு லாபநட்டம் நேரடியாக இல்லை என்பது இன்னொன்று. அதாவது நேரடிப்பொறுப்பில்லை என்பது.

அதிகாரமும் வசதிகளும் உத்தரவாதமும் அரச உத்தியோகத்துக்கு உண்டென்பது மற்றொரு அபிப்பிராயம்.

எல்லாவகையான வசதிகளுக்கும் இடமுண்டென்பது வேறொரு காரணம்.

ஓய்வூதியம் உண்டென்பது இன்னொன்று. இப்போது ஓய்வூதியமில்லையென்றபோதும் பதவிக்கால வசதி+ அதிகாரம்+மதிப்பு+ பெருமை+ சலுகை போன்றவற்றுடன் திரண்ட தொகை தேறியலாபமாகக் கிடைக்கும் என்ற கணிப்பு.

இவ்வாறான காரணங்களால் உண்மையில் கணிப்புகள்+ விருப்பங்களால் - பலரும் அரசாங்க உத்தியோகத்துக்காகக் காத்திருக்கிறார்கள்.

'கோழி மேய்த்தாலும்' 'கவுண்மேற்றில்' மேய்க்கவேணும் என்றொரு வலுவான கருத்து எங்களிடையே ஒருகாலத்தில் இருந்தது. அந்த மனோபாவம் இன்னும் தீரவில்லை. பதிலாக இப்போது அது பல முகங்கொண்டு இன்றும் வளர்ந்தேயிருக்கிறது.



# பட்டதாரிகளின் நியமனமும் சமூகப்பொறுப்புணர்வும்

அதிகாரத்திலிருப்பதுதான் இதில் முக்கிய இலக்கு. ஆட்சி, நிர்வாகம் என்பவற்றில் உத்தியோகம் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆட்சியை நிர்வகிக்கும் தரப்பாக தம்மைக் கருதுவதே இதன் உள்ளார்ந்த அம்சம்.

உண்மையில், படித்தவர்கள், தாங்கள் படித்த துறைகளில் அறிவுபூர்வமாக புதிய வேலைகளில் ஈடுபடலாம். புதிய வேலைகளைத் தொடங்கலாம். புதிய மாதிரிகளை உருவாக்கலாம். விரிவாக்கலாம்.

**கருணாகரன்**

தங்களுடைய கல்வியறிவையும் துடிப்புமிக்க இளமைக் காலத்தையும் சமூகப்பயனுள்ள காரியங்களுக்கு பயன்படுத்தும் கடமையும் பொறுப்பும் பட்டதாரிகளுக்குண்டு. சமூகப்பயனுக்குரிய கல்வியைப் பெறுவதற்கே பல்கலைக் கழகங்களுக்கு நிதியும் ஏனைய வளங்களும் கொடுக்கப்படுகின்றன. அத்துடன் ஒவ்வொருதுறைகளிலும் துறைசார்ந்த அறிஞர்களின் பணி பல்கலைக்கழகங்களில் வழங்கப்படுகிறது. அவர்களுடைய அறிவும் உழைப்பும் பகிரப்படுவதும் இளையோர் அணி சமூகப்பயன் தருவதற்கான வழியாகட்டும் என்றே.

ஆனால், தொடர்ச்சியான நிலைமை வேறுவிதமாக - பாதகமாகத்தான் உள்ளது.

படித்து வெளியேறுவோர் ஒடுங்கியமுறையில் வெறுமனே உத்தியோகத்தை மட்டுமே சிந்திப்பது இன்றும்தொடரவேணுமா?

ஒரு சாரார் அரசாங்கத்தில் வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கிறார்கள். அதில் வேலை செய்வதற்காக வேறு பணிகளிலிருந்தே விலகுகிறார்கள். இன்னொரு சாரார் சர்வதேசத்தொண்டர் நிறுவனங்களில் வேலை செய்வதற்கு விரும்புகிறார்கள்.

தமக்குரிய தொழிலைத் தேர்வதில் ஒவ்வொருவருக்கும் உரிமைகளுண்டு. ஆனால் பொது நிறுவனங்களில் இலவசமாகப் படித்தவர்களுக்கு சமூகம் பற்றிச் சிந்திக்கும் பொறுப்புண்டு என்பதையும் மறக்கக்கூடாது.

தனிமனித விருப்பம், உரிமை, நலன், முன்னேற்றம் என்று பார்த்தால் சிலவேளைகளில் ஒவ்வொருவரும் இன்று தேடுகின்ற வேலைகள் சரியாக இருக்கலாம். அல்லது அவர்களுக்குத் தோதானதை அவர்கள் தேடுகிறார்கள். இதில் ஏன் வீண்வாதங்கள் என்று யாரும் கேட்கலாம்.

இந்தக்கேள்விக்கப்பால் அவர்களுக்கு சில சேதிகள் தெரிய வேண்டும்.

ஒருவர் வாழுகின்ற சூழலைவிட்டு தனியாக, வேறுவிதமாக, நினைந்த மாதிரி, விரும்புகிறமாதிரி வாழ முடியாது. சூழலின் தாக்கம் எப்படியும் அவரைப் பாதித்தே தீரும். அது தவிர்க்கமுடியாதது

ஆகவே முன்னேற்றவில்லை. ...வில்லையென்றால் அதனு... ...மும் சிறைப்படவேண்டியதுதான். சமகால நெருக்கடிகள், பிரச்சினைகள், பற்றாக் குறைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய பொறுப்பு படித்தவர்களுக்கே கூடுதலாகவுண்டு.

உடல் உழைப்பாளிகள், தொழிலாளர்கள், உற்பத்தியாளர்கள், விவசாயிகள்போன்றோர் தமது அறிவு, அனுபவம், உழைப்புமூலம் வாழும் காலத்தை நிறைவாக்குகிறார்கள். நிறைவு பூரணமாகவில்லையென்றாலும் முடிந்தளவு தமது பணியில் பாடுபடுகிறார்கள்.

ஆனால், படித்தவர்கள் அதிகாரம் பண்ணுவதில்தான் அதிகம் அக்கறை காட்டுகிறார்கள். இது அதிகாரச்சுவையை விரும்புகிற பழைய மனோபாவத்தின் வெளிப்பாடு.

வாழுகின்ற சமகாலத்தை நிறைவுசெய்வதுடன் எதிர்காலத்துக்குரிய வளங்கள், வசதிகள், வழிகளை உருவாக்குவதிலும் படித்தவர்களுக்கே அதிகம் பொறுப்பிருக்கிறது.

ஐ.என்.ஜி ஒக்களில் வேலைசெய்வோரில் அநேகர் அந்நிறுவனங்களின் சேவையோடு இணைந்திருப்பதைவிடவும் அந்த நிறுவனங்களின் கொடுப்பனவுக் கவர்ச்சியினாலேயே அதிகம் ஈர்க்கப்படுகிறார்கள்.

(இங்கே இச்சந்தர்ப்பத்தில் இன்னொரு விசயமும் ஞாபகத்துக்கு வருகிறது. உள்ளூர் வாசிகள், உள்ளூர் நிறுவனங்களுக்கு வாடகைக்கு வீடுகொடுப்பதிலும் பார்க்க சர்வதேச நிறுவனங்களுக்கு வீடுகொடுப்பதிலேயே அதிக அக்கறை பலருக்குண்டு. சுளையாக காசு வரும் என்ற ஒரேநோக்கம்தான் இதன் காரணம்)

சொந்த வாழ்வின் முன்னேற்றம் கருதியே பலரும் இயங்கும் போக்கு வளர்ந்தால் சமூக வளர்ச்சி பாதிப்படைந்தேதீரும். சமூக வளர்ச்சிக்குரிய உழைப்பும் சிந்தனையும் பெருகினால் சொந்தவாழ்வும் சமூக நிலையோடிணைந்து உயரும்.

இல்லையென்றால் கடும் அலைச்சலும், தீராதபோட்டியும் ஓய்வின்மையும் சூழ்ந்தே இறுக்கும். அதேவேளையில் வெளியாரிடம் கையேந்தியும்அடிமைப்பட்டும் வாழும் நிலையே ஏற்படும்.

இப்போது நியமனம் பெற்றிருக்கிற பலரை அவதானித்தபோது கிடைத்தவேலைகளைவிட்டு வேறு இலகுவான சுயமுன்னேற்றத்துக்குரிய வழிகளை நோக்கியே அவர்கள் பயணிக்க எத்தனிப்பது தெரிகிறது.

தொழில் திணைக்களம், வடிகாலமைப்புச் சபை, கைத்தொழிற் திணைக்களம் போன்றவற்றில் நியமனம் கிடைத்தவர்கள் இந்த இடங்களிலிருந்து கழன்றுவிடவே முயல்கிறார்கள். இந்தத் திணைக்களங்கள் இப்போது உறங்கு நிலையிலேயே இருக்கின்றன. தொழிலாளர் அபிவிருத்தி, நலன்கள், உரிமைகள் தொடர்பான அக்கறைகள் குறைந்திருப்பதற்கும் இந்த உறங்குநிலை ஒரு காரணம். அதேபோல சரியான வடிகாலமைப்பு முறையும் அணுகுதலும் இல்லாதிருப்பதற்கும் அதன் உறங்கு நிலைதான் காரணம். இப்படியே புதியதொழில் விருத்திகள், கைத்தொழில் ஆர்வங்கள் இல்லாதிருப்பதும்.

இங்கே இந்தத் துறைகளுக்குரிய நிதிமூலம், அபிவிருத்திக்கான ஏனைய ஏற்பாட்டுச் சீரின்மை பற்றி பலரும் பலவிதமாக அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். நிலையற்ற அரசியற் சூழல் இதில் முக்கியம் என்பது அவர்கள் தரப்பு நியாயம்.

ஆனால், எதுவும் செய்யாமல் இருப்பதைவிட சிறு அளவிலாவது செய்யமுயன்று அதை வெற்றியாக்குவது சிறப்பும் அவசியமுமல்லவா.

அதற்கும் ஒரு நியாயம், அர்ப்பணிப்பு உழைப்புத்தேவை. அதையே இன்றையகாலம் எதிர் பார்க்கிறது.

---

(06 ஆம்பக்கத்தொடர்ச்சி..)

கொண்டு வரலாம். சிங்கள அரசின் செயல்களுக்குத் தீனிப்போட்டால் இங்கு சமாதானம் ஏற்பட இடமில்லை என்பதை உலகநாடுகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

சந்திரிகாவின் தாயார் சிறிமாவோ பிரதமராக இருந்தபொழுது பொது நல அரசுகள் மாநாட்டுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது தென்னாபிரிக்காவின் வெள்ளையரின் இனவெறி அரசு ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தகலாம். கறுப்பின மக்கள் என்றால் அடிமைகளாக வாழவே படைக்கப்பட்டவர்கள் என்று வெள்ளை இனத்தவர் எண்ணியிருக் கலாம். பொதுநல அரசுகள் மாநாட்டில் தென்னாபிரிக்காவுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் கொண்வரப் பட்டது. அதில் சிறிமாவோ தென்னாபிரிக்க அரசின் இனவெறிக்கொள்கையைக் கடுமையாகச் சாடினார். ஆனால் தென்னாபிரிக்க பிரதமராக அப்பொழுது இருந்த ஹென்றிக் வேர்வூட் என்பவர் எழுந்து சிறிமாவோவைப்பார்த்து இலங்கைத்தீவில் தமிழினத்துக்கு எதிராகச் செய்யப்படும் இன ஒழிப்பை புட்டுக்காட்டி சிறிமாவோவுக்கு என்ன தகுதி இருக்கிறது. இனவெறியைப் பற்றி பேசுவதற்கு என்று கேள்வி எழுப்பினார். சிறிமாவோ மௌனமானார். அம் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் இங்கு நடக்கும் இன ஒழிப்பை அறிந்துகொள்ள வாய்ப்புக்கிடைத்தது. கறுப்பினத்தவர்களைக் கேலி பேசியவர்கள் இன்று ஏராளமான கறுப்பினத்தவர்களின் நாடுகள் விடுதலை பெற்று உலகப்படத்தில் இடம் பிடித்துள்ளன. ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் கறுப்பினத்தவராக வர முடிந்துள்ளது இன்றைய யதார்த்தமாகும்.

ஆழமான சமுத்திரத்தில் எழும் சுனாமியின் அழிவு பேரழிவைத் தரும். ஆழமற்ற கடலில் ஏற்படும் நிலநடுக்க அலையின் தாக்கம் குறைவானது என்பது அறிவியலாளரின் கருத்து. இதேபோலத்தான் தோலின் ஆழமான இன வெறியைவிட மனத்தளவு ஆழமான இனவெறியின் தாக்கம் மிகவும் அதிகம். இதைத்தான் இன்று இலங்கைத்தீவில் அனைவரும் காண்கின்றனர்.

தமிழ்ப் பகுதிகளுக்குரிய பங்களிப்பை உலகம் சரிவரப் பங்கீட்டுக் கொடுக்கவேண்டும் அவ்வாறு கொடுத்தால்தான் உலகம் சுனாமிக்காகச் செய்யும் உதவிகள் உண்மையான பலனைத்தர முடியும். போரினால் சரிவடைந்தப்பொருளாதாரத்தைக்கட்டியெழுப்ப இவ்வுதவிகள் பயன்படுமானால் அதன்விளைவு பாராதூரமாக இருக்கும். இராணுவத்தாலும், சுனாமியினாலும் தொடர்ந்து அழித்துவிடலாம் என்று சிங்கள அரசுக்கு இவ்வுதவிகள் ஊடகமளிப்பவையாக இருக்கக்கூடாது என்பதே தமிழ் மக்களின் அவாவாகும். உலக நாடுகள் இக்கடமையை தவறி சிங்கள அரசுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் உதவி சுனாமி அனர்த்தம் என்ற பெயரில் வழங்கும் உதவிகள் அனர்த்தமாகவே போய்விடும்.


COMITE INTERNATIONAL GENEVE

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபரை பின்வருவனவற்றில் ஏதாவது ஒரு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறது- கிளிநொச்சி, மல்லாவி, வவுனியா, யாழ்ப்பாணம் அல்லது புதுக்குடியிருப்பு. அதேவேளை இவரைப்பற்றி ஏதாவது தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து இவர் எங்கே இருக்கிறார் என்பதை அறிய உதவி செய்யவும்.

திரு. சின்னத்துரை கந்தையா - யாழ்ப்பாண நகரில் 1938 ஆம் ஆண்டு பிறந்தவர் தகப்பனின் பெயர்: திரு. இராசையா சின்னத்துரை இறுதியாக வசித்த விலாசம் (2000) முருகன் கோயிலாடி (அன்பு அச்சகம் அருகில்) கிளிநொச்சி.

றசல் பென்கார்ட்
உப பேராலய தலைமைப் பிரதிநி,
செஞ்சிலுவைச் சர்வதேசக் குழ,
மல்லாவி. (5568)



# திரை விமர்சனம்



## இயற்கை

பிதாமகன், இயற்கை, முகம், தேவதை, விருமாண்டி. பேரழகன் போன்ற படங்களைப்பற்றி ஏன் எழுதவில்லையென்று பலர்கேட்டிருக்கிறார்கள். இந்தப்படங்களிற் சில கவனத்துக்குரியவைதான். சினிமாவை ஒரு கலையாகவும் மனித மேம்பாட்டுக்குரிய அக்கறையோடும் மனித உணர்வுகளின் சித்தரிப்புச் சிறப்புகளோடும் அணுகியவையும்கூட.

நிராகரிக்கவேண்டிய கூறுகள், கண்டிக்கவேண்டிய பகுதிகள் இருந்தாலும் இந்தமாதிரி படங்கள் விமர்சனத்துரியவை என்பதை ஏற்றுக்கொள்ளவேவேண்டும். இப்போது 'இயற்கை'பற்றி இங்கே எழுதப்படுகிறது.

தமிழ்ச்சினிமாவின் பார்வையாளருக்கு ஒரு புதிய பார்வைப் பரப்பையும் புதிய அனுபவத்தையும் 'இயற்கை' அறிமுகப்படுத்துகிறது. அதேவேளையில் அது பலகேள்விகளையும் எழுப்புகிறது.

கப்பல், கடல், துறைமுகம், துறைமுகத்துடன் இணைந்த குடியிருப்பு,இரவுவிடுதி, உணவுக் கடைகள், கப்பற்பணியாளர்கள்-சிப்பந்திகள் என்று விரியும் புதுப்பரப்பு, தமிழ்ச்சினிமா இதுவரையிலும் அக்கறையற்றிருந்த பகுதி.

இந்தப்பரபில் நிகழ்கிற வாழ்க்கை, அந்த, வாழ்வின் விளைவும் எதிர்கொள்ளுமான நிகழ்வுகள், அந்த மனிதர்கள், அவர்களின் உணர்ச்சிகள் எல்லாமும்கூட தமிழ்ச்சினிமாவுக்குப் புதுஅனுபவமே.

ஏன் தமிழ்ப்படைப்பிற்கூட கப்பல் வாழ்க்கை சரியான முறையில் பகிரப்படவில்லை. ப.சிங்காரம், நரசய்யா போன்ற ஒரு சிலரைத் தவிர்த்தால் பெரும்பாலும்இல்லையென்ற வரட்சிதான்.

இந்தநிலையில் இயற்கை மாறுதலான ஒரு புதிய தோற்றத்தையும் உணர்வையும் தருகிறது என்பது முக்கியமானது.

முன்பு 'கப்பலோட்டிய தமிழன்' போன்றபடங்கள் வந்திருந்தாலும் அவை கப்பல் மற்றும் கப்பல் மனிதரின் வாழ்க்கைபற்றி ஆழமாகப் பேசவில்லை. அவை புறத்தியில் நிகழ்ந்த வேறு பிரச்சினைகளையே பேசியிருந்தன. அவற்றின் போக்கும் நோக்கும்கூட வேறானதாகவே இருந்தது.

இயற்கை காட்டுகிற உலகம் நாம் அங்கங்கே உதிரியாகக் கேள்விப்பட்டது. சிலருக்கு அது சொந்தவாழ்வின் அனுபவமாகவும் இருக்கலாம்-கப்பல் அனுபவத்தையுடையோருக்கு.

கப்பலில் வேலைசெய்து வந்தவர்கள் சொன்ன கதைகளில், அவர்கள் பகிர்ந்துகொண்ட அனுபவங்களில் இயற்கைகாட்டுகிற பரப்பை அறிந்திருந்தோம். அது இங்கே காட்சிப்புலத்தினூடாக விரிக்கப்படுகிறது. இப்போது இயற்கையைப்பார்க்கும்போது அறிந்திருந்த அந்தப் பரப்பில் நாங்களும் ஒருவராக அதற்குள் நின்றுகொள்வதாக ஒரு உணர்வு. அந்தளவுக்குப்படத்தின் காட்சிகள் வலுவாயுள்ளன. கப்பல் வாழ்க்கையைத்திரட்டி அதன் யதார்த்தங்களோடு ஒரு நிகழ் அனுபவமாகப்பட்டுள்ளது என்பதே 'இயற்கை' என்ற இந்தப் படம்.

எங்கும் நிலை கொள்ளாமற் தவிக்கிற வாழ்க்கையின் ஒரு குறியீடாக படத்தின் மையப்பாத்திரங்களில் ஒன்றான ஒளியாமைக் காணலாம். விட்டேத்தித்தனமும் பற்றற்ற நிலையும் போகிறபோக்கில் வாழ்கிற தன்மையும் பெரும்பாலான கப்பற்பணியாளர்களின் ஒரு பொது அடையாளம் என் கப்பல் அனுபவத்தர்கள் சொல்லிக்கேட்டிருக்கிறேன்.

இன்னொரு பக்கத்தில் கப்பலை உலகம்-அதுவே வாழ்க்கை என்றிருப்போரும் உண்டு. ஏறக்குறைய அதுமாதிரி ஒரு அடையாளம் அருண்குமார்.

ஸ்ரீதருடைய படங்களில் வருவது போன்ற முக்கோணக்காதற் கதைதான் இயற்கையிலும்.

ஒரு கப்பலின் கப்ரனை எதேச்சையாகச் சந்தித்த ஒருபெண் அவனை விரும்பியபோது, அந்தக் கப்ரன் கப்பலோடு பயணமாகிவிட்டான். பிறகு தொடர்பில்லை. தகவல்களில்லை. அவனுக்காகக் காத்திருக்கிறாள். தீராத காத்திருப்பு. அப்போது இன்னொரு கப்பலின் சிப்பந்தியுடன் அறிமுகமும் சினேகமும் ஏற்படுகிறது.

இந்த நிகழ்வுகள் இடம் பெறுகிற களம்தான் இந்தப்படத்தில் முக்கியம்.

இந்தக்களத்தை தேர்ந்திருக்கிற விதம், அதைக்காட்சியப்படுத்திய திறன், அது நமது மனதில் பதிகிற நுட்பம் எல்லாமே சிறப்பாகவுள்ளன.

சினிமா என்றகலை வடிவத்தின் நுட்பஅறிவு இயற்கையை காட்சிப்படுத்தியவர்களிடம் நிரம்பத்தொழிற்பட்டிருக்கிறது.

ஒளியமைப்பு, படத்தொகுப்பு, ஒலியமைப்பு, ஒளிப்பதிவு எல்லாமே மிகச் சிறப்பாகவுள்ளன. இவற்றுக்கு இணையாக நிகழ்களத்தை ஒழுங்கமைத்துள்ள அரங்கமைப்பு. ஒவ்வொரு பிறேமும் மனதில் மிக நன்றாகப் பதிகின்றன. ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொரு தனித்தனிச்சட்டகம். ஒவ்வொரு சட்டகமும் இணைந்தே முழுப்படம் என்பதாக ஒரு ஒழுங்கு.

கமெரா ஒவ்வொரு இடமாக நகர்கிறது. ஒவ்வொரு இடதுக்கும் நம்மைக்கூட்டிச்செல்கிறது. ஒவ்வொரு இடத்திலும் எங்களை அமர்த்திவிடுகிறது.

அந்த வெளிச்சவீட்டை, கடற்கரையை துறைமுகத்தை, துறைமுகக்குடியிருப்பை, அங்கேயுள்ள இரவுவிடுதியை, அங்குள்ள உணவுச் கடையை இங்கெல்லாம் இருக்கிறை மனிதர்களை, அவர்களின் அடையாளங்களை, அவர்களின் வாழ்க்கைமுறையை. அவர்களுடைய உலகை இயல்போடு காட்டுவதில் உள்ள கரிசனை கவனத்திற்குரியது.

படத்தின் திரைக்கதையில் இல்லாத பலம் படமாக்கப்பட்டதின் விதத்தில் உண்டு.

ஒரு திரைக்கதையில் பாதிவெற்றி அதன் கதையின் பலம். மீதிவெற்றி அது சினிமாவாக்கப்பட்ட விதத்தில் சேரும்.

இயற்கையில் கதையமைப்பைவிடவும் காட்சியமைப்புச் சிறப்பு. பார்வையாளருக்கு புது அனுபவத்தைத் தருவதாகவும் பரவசத்தையூட்டக் கூடியதாகவும் அதுவேயுள்ளது.

இயற்கைபற்றி ஒரு காட்டமான விமர்சனமும் உண்டு. இதில் ஆங்கிலப்படங்களின் தழுவல் காட்சிகள் உண்டென்றும் கூறப்படுகிறது.

ஆனால், தமிழில் இந்த மாதிரிச் செறிவான காட்சியடுக்குகளுடன் ஒளிக்கோர்வைப் படுத்திய சினிமாவைத் தரத் துணிந்தது முதலில் பாராட்டவேண்டியது.

அபூர்வமாக எங்கேனும் ஓரிரண்டு ஆட்கள் மட்டும்தான் தங்களுடைய படங்களில் இத்தகைய கரிசனையைக் காட்டியிருக்கிறார்கள்.

வெளிச்சவீடு முதல் இரவவிடுதி,உணவுக்கடை, சீட்டாட்டம், குடித்துக் களத்தில் என்று எல்லாக் காட்சிகளிலும் வாழ்க்கையைப் பரப்பிவைத்துக் குமுறுகிறது கமெரா.

அந்த மனிதர்கள் எப்படியானதொரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று நம்மைத் திடுக்குற வைக்கிறது ஒவ்வொரு காட்சியும்.

கதை நிகழும் புலமே இயற்கையின் பலம் பெறும் பகுதி. சில படங்களில் நிகழ்புலம் வரண்டு தோற்றுவிட கதைபலமாகும். இங்கே கதை மெலிந்து ஒடுங்கிவிட நிகழ்புலம் பலமாகி அது தனியுலமாகப் பலமடைகிறது.

இயற்கை தவிர்க்கமுடியாமல் நினைவூட்டுவது மஹாகவியின் புதியதொரு வீட்டை.

இயற்கையின் கதை நிகழ்வது கப்பலில், துறைமுகத்தில் துறை முகக்குடியிருப்பில் என்றால் புதிய தொரு வீட்டில் கடலோரத்தில், மீனவக்குடும்பத்தில்.

இயற்கையில் காதலனுக் காதக்காத்திருக்கும் காதலி. புதிய தொரு வீட்டில் கணவனுக்காகக் காத்திருக்கும் மனைவி.

இரண்டும் வேறுவேறான கதைப்போக்குகள், தளங்களாகத் தெரிந்தாலும் இரண்டுக்குமுள்ள ஒற்றுமை காணாமற்போனவர்கள் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் திரும்பி வருவது.

இரண்டு மீள்திருப்புகைகளும் எதிர்பார்ப்புகள் தணிந்துவிட்ட நிலையில், வாழ்க்கைப்போக்குகள் மாறுதலடைந்துள்ள வேளையில் நிகழ்கிறது. ஆகஅடிப்படையில் இரண்டின் சாரம்சமும் ஒன்றே.

இரண்டிலும் வாழ்க்கையை அதன் உயிர்ப்போடு அணுகப்பட்டிருக்கும் விதமே பார்வையாளனை கௌரவப்படுத்தியிருக்கிறது எனலாம்.

ஒரு புதிய பிராந்தியத்துக்கு தமிழ்ச்சினிமாவை வாழ்த்தியதிலும் தமிழ்ப்பார்வையாளனைக்கூட்டிப் போவதிலும் இயற்கைக்கு ஒரு தனியிடமுண்டு.

கப்பலில் தங்களின் குடும்ப உறுப்பினர்கள் பணிசெய்யும் குடும்பங்கள் இயற்கைமூலம் பலவிடயங்களை அறிவதற்கு ஏராளம் விசயங்களுண்டு. அங்கே காட்டப்படுகிற வாழ்க்கையை உற்றுப் பார்ப்பது மிகமிக அவசியம்.

**ஆரதி ——————**

---

# விளையாட்டு வீரர்களின் மனிதாபிமானம்



சூ மேக்கர்

கடந்த 26 ஆம் திகதி ஆசிய பிராந்தியத்தின் சுனாமி பேரலை தாக்குதலில் பாதிக்கப்பட்ட நாடுகளுக்காக பல உள்ளூர் வெளியூர் அரசுகளும் அரசசார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு வழிகளில் உதவிக்கரம் நீட்டியுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் அதிகமான உதவிகள் கிடைப்பதை ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

ஒரு நாட்டு அரசாங்கமோ நிறுவனமோ நிவாரண உதவி வழங்குவது என்பது அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஒன்றும் பெரிதாகப்படமுடியாதபோதிலும் தனியொரு நபர் ஒரு நிறுவனத்தைவிடவும் அள்ளி வழங்குவது என்பது நினைக்கமுடியாத ஒன்றாகும்.

அந்த வகையில் உலகின் முன்னணி கார் ஓட்டப்பந்தய வீரரான சூ மேக்கர் அனைவரையும் ஆச்சரியப்படுத்தும்வகையில் 10 மில்லியன் யூரோக்களை ஏறத்தாழ இந்நாட்டு நாணயத்தில் ரூபா 140 கோடியை பாதிப்புற்றவர்களுக்கென ஒதுக்கியிருக்கிறார். (இந்நாட்டுக்கு மட்டுமல்ல) இது அண்மையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற நலநிதி சேகரிப்புக்காக நடத்தப்பட்ட உலக, ஆசிய அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டியில் சேகரித்ததைவிட கூடிய தொகையாகும்.


மைக்கல் சூ மேக்கர் உலகிலுள்ள விளையாட்டு வீரர்களுள் மிகுந்த கோடீஸ்வரராவார். அவர் இதுவரையினங் காணமுடியாத கோடீஸ்வரர் என்று கூறுவதில் தவறில்லை. அவர் ஒரு நாளில் போட்டிகளில் வெல்லும் தொகை கோடிக்கு மேலாகும். அத்துடன் அவர் விளம்பரங்களுக்காக ஒப்பந்தம்செய்து பெரும் தொகை இருமடங்கு மும்மடங்காக அதிகரிக்கும்.

தற்போது அவர் சுவிஸ்லாந்தில் பலஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள கார் ஓட்டபாதைகளைக் கொண்ட அழகிய மலை உச்சியில் அமைந்தவீட்டில் குடியிருக்கிறார்.

இவ்வாறு வீடமைத்திருப்பதற்கு சூழலுக்கு தீமையளிக்குமென சூழல் பாதுகாப்புப் பிரிவினர்எதிர்ப்பு தெரிவித்தனர். எனினும் சூழலுக்குமாசு ஏற்படாதவகையில் நிர்மாணிகள் அவரது வீட்டை அமைத்துள்ளனர். சூ மேக்கரினால் சப்பாரி நிறுவனத்துக்குக்கிடைக்கும் லாபம் எண்ணிலடங்காது.

இவரைத் தொடர்ந்து உலகின் நட்சத்திர கிரிக்கெட் வீரரும் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளருமான ஷேர்ன் வோனும் பாதிப்புற்றோருக்கு உதவியளிக்க முன்வந்துள்ளார். அவர் இந்நாட்டில் தெற்கு மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிப்புற்றோருக்கு உதவி வழங்கும் பொருட்டு விரைவில் வரவிருக்கின்றார்.

விளையாட்டு வீரர்களின் உதவிகள் வரிசையில் அடுத்ததாக உலக குத்துச்சண்டை வீரர் மைக் டைசனை வீழ்திய இவான்டர்-கொலிபீலட் பொலிவூட் இணையும் உதவிக்கரம் நீட்டியுள்ளது. அவர்கள்



மரியா சரபோவா

நிதியுதவியோ பொருள் உதவியோ வழங்காது விடினும் பாதிப்புற்ற சிறுவர்களின் உளவளத்தை மேம்படுத்தும்வகையிலான விளையாட்டுப்



ஷேர்ன் வோன்

பயிற்சி முகாம்களை நடத்தவிருக்கின்றனர். பொருட்களையும் நிதிகளையும் விட இது மிக முக்கியமான ஒன்றாகும்.

அடுத்ததாக உலகில் இளம் டெனிஸ் வீராங்கனையான ரஷ்யாவின் மரியா சரபோவா எல்லாரையும்விட முந்திக்கொண்டு வந்து உதவிக்கரம் நீட்டியமை சூமேக்கரின் தொகையைவிட மேலானதாகும். இவற்றுடன் வரும் 22ஆம், 24ஆம், 26ஆம் திகதிகளில் நியூசிலாந்தில் நியூசிலாந்து அணிக்கும் உலக அணிக்கும் இடையில் நடைபெறும் நிதியுதவி ஒருநாள் கிரிக்கெட் போட்டி மூலமும் மேலும் பலவகையான போட்டிகள் மூலமும் பல லட்சம் டொலர்கள் பாதிக்கப்பட்ட நாடுகளுக்குச் சென்று சேரும் ஆயினும் இவற்றில் இடைத்தரகர்கள் தலையிடுவது இல்லாது போவது மேலும் ஒரு உதவியாக இருக்கும்.

**சம்பத்**

கடலின் அனர்த்தங்களில் இருந்து தரையை பாதுகாக்க உலகளவில் சில நிபந்தனைகள் உள்ளன. பவளப்பாறை கரைகள் கண்டல்காடுகள். இவை உள்ள இடங்களில் கடல் அனர்த் தங்கள் கடலழிவுகள் மக்களை பாதிப்பதில்லை.

யாழ்ப்பாணத் தீவுகளின் தனித்தன்மை அதன் பவளப்பாறைகள் தான். உலகளவில் பவளப்பாறைத்தீவுகளுக்கு தனித்த மதிப்பு உள்ளது. அவற்றை பாதுகாக்க பெரும் நிதியுதவிகள் உள்ளன.

இங்கு யாழ்ப்பாணத்தீவுகள் முழுமையும் பவளப்பாறைகளால் ஆனவை.இங்கு மக்கள் இந்த பவளப்பாறைகளை முருகைக்கற்கள் என்று அழைக்கிறார்கள். இந்த மக்களின் வாழ்வுப்பண்பாட்டை முருகைக்கற் பண்பாடு என்று சொல்லலாம். இங்கு வேலணைத்தீவு மேற்பரப்பு ஒரு அடி உயரத்துக்கு மட்டும் மண்படை உள்ளது.அதன்கீழ் பவளப்பாறை படைதான். இங்குள்ள கிணறுகளைப் பார்த்தால் இது வடிவாகத்தெரியும்.

இந்தக்கிணறுகளுக்கு பெருநிலப்பரப்பு- யாழ்ப்பாண நிலப்பரப்பு கிணறுகளைப்போல உட்பக்கச் சுவர் கட்டத்தேவையில்லை. ஏனென்றால் அதில் அந்த சுவராக பவளப்பாறைகள் உள்ளன. வேலணைத்தீவு தவிர்ந்த ஏனைய தீவுகளில் தரை மேற்பரப்பு பவளப் பாறைகளால்தான் ஆனது. தரை மேற்பரப்பு சிமெந்துத் தரைபோல கல்லால் இருக்கும். இதை தெளிவாக நயினாதீவு. நெடுந்தீவில் பார்க்கலாம். இங்கு மண்ணே குறைவு. பவளப்பாறைத் தரைவைதான். நயினாதீவு ஒரு சுற்றுலாத்தீவாக இருக்கின்றது. இதன் நாகபூசணி அம்மன் கோயில் அதற்குள்ள இந்து மத ஐதீகம், மணிமேகலை காப்பிய ஐதீகம்,பௌத்தமத ஐதீகம், பௌத்த விகாரை என்பனவற்றால் இது சுற்றுலா மற்றும் யாத்திரைத்தீவாக உள்ளது.யாழ்ப்பாணத்திலிருந்து




# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

பேருந்து வழியாக வேலணைத்தீவு புங்குடுதீவு ஆகியவற்றை கடந்து குறிகாட்டுவான் என்ற தீவை சென்றடைகிறோம். இதற்கிடையில் வேலணைத்தீவின் அல்லைப்பிட்டியில் சிறிலங்கா கடற்படை சோதனைச் சாவடியை சோதனைக்குட்பட்டு கடக்கவேண்டும்.அதன்பின் புங்குடுதீவு கடந்து குறிகாட்டுவானை அடைகிறோம்.அங்கு முன்னயைமாதிரி சுயாதீனமாக படகுத்துறைக்கு நேரடியாகச் சென்று படகேற முடியாது.

குறிகட்டுவான் இறங்குதுறையில் கடற்படைமுகாம் உள்ளது. இந்த முகாமுள்தான் இறங்குதுறை உள்ளது.

இறங்குதுறைக்குள் நுழைய ஒரு வாசல் கதவு உள்ளது. அதற்கு வெளியே ஒருதரிப்பு மண்டபம் இருக்கிறது. அதுபோல முகாம் உள்ளாகவும்ஒரு மண்டபம் உள்ளது. வெளிமண்டபத்துள் தான் பயணிகள் இருக்க வேண்டும். கடற்படையினர் அனுமதிக்கின்ற வேளை மக்கள் தமது அடையாள அட்டைகளை காண்பித்து இறங்குதுறைக்குள் நுழையவேண்டும். அங்கும் ஒருமண்டபம் அதில் மக்கள் தங்கி நின்று கடற்படையினர் அனுமதிக்கின்றபோது நயினாதீவுக்கான படகில் ஏறவேண்டும்.அந்தத்துறையே நெடுந்தீவுக்கான துறையாகவும் இருக்கிறது. நெடுந்தீவு படகு புறப்படும் 10 நிமிடத்தில்தான் முகாம் இறங்குதுறைக்கே மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். நயினாதீவுக்கு செல்வது சிங்கள யாத்திரிகர்கள் எனில்அவர்களுக்கு முன்னுரிமை. யாருடைய மண்ணில் யாருக்கு முன்னுரிமை.யார் இரண்டாம் தரப்பிரஜை. மனம்வெம்புகிறது. இங்கு நயினாதீவுக்குப்படகேற இரண்டாவது மண்டபத்தில் தரித்திருக்கிறோம். இந்த மண்டபமும் மூடி அடைக்கப்பட்டது. வெளியே இறங்குதுறை தெரியாது. எட்டி இறங்கு துறையை பார்க்க முனையும் தமிழர்களை அதில் நிற்கும் கடற்படைச் சிப்பாய் விரட்டுவார்.

சரி இப்ப நயினாதீவு ஏன் திடீரென நுழைகின்றது என நினைப்பீர்கள். இங்குதான் பவளப்பாறை வியாபாரம் நடக்கின்றது.அது பற்றிச் சொல்லவே இத்தனை இடர்கள்.

இங்கு எதற்கு பவளப்பாறை வியாபாரம் என்ற நினைப்பு வரலாம்.இப்பாதையால் வாருங்கள் என்ற தமிழ் சிங்கள தொலை காட்சித்தொடர் சிங்கள இயக்குனரான அசோக கந்தகமவினால் உருவாக்கப்பட்டது. அதில் இந்த நயினாதீவில் ஒரு காட்சி மனிதாபனம்மிக்க சிங்கள இளைஞன் தன்குடும்பத்தாருடன் நயினாதீவுக்கு வருகிறான்.

அங்கு நுழைந்ததும் அவனிடம் சிறுவர்கள் ஓடுகிறார்கள் பவளப்பாறைகளை வாங்குமாறு. பவளப்பாறை உயிரினங்களை வாங்குமாறு. அப்பபொழுது அவன் சொல்கிறான் இயற்கை அழிக்கப் படுகின்றது என்று.

துருவன்




# தொன்மை இருப்பை நிறுவுவதன் மூலம் விடுதலையை முழுமையாக்க முடியும்

எங்களது மண்ணில் நாம் உரித்துடையோராய் வாழ நாம் இந்த மண்ணின் தொன்று தொட்டு குடி மக்கள் என்ற வரலாறை மறுத்து எம்மை வந்தேறு குடிகளெனக் கூறி, எமக்கான உரிமைகளை சிங்கள ஆளும் வர்க்கமும் பௌத்த பேரினவாதமும் மறுக்கின்றது. எமக்குத் தாயகம் இல்லை என அது கூறுகின்றது. இந்தத் தீவு சிங்களவருக்கே உரியதென்கிறது. மகாவம்சம் என்ற சிங்கள ஒரு கட்டுக்கதை. நாம் இந்த மண்ணின் மூதாதைகள். கற்காலம் முதல் வரலாறின் முன் மனிதர்களான இந்தத் தீவின் மூத்த குடிகள் என்பதை நாம் நிறுவுதலே வரலாறில் எமது விடிவுக்கான ஒரு படிக்கல் ஆகும்.

எம்மைப் போல் இந்தியாவின் மூத்த மனிதர்களான திராவிடத் தமிழர்களுக்கும் இது நடந்தது. இன்று பாகிஸ்தானுள் இருக்கும் சிந்துவெளி நாகரிகம் 1925இல் தான் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு முன் இந்தியாவுக் கான ஒரு வரலாறு எழுதப்பட்டிருந்தது.

18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரான வில்லியம் சோன்ஸ், கோல்புறூக், எச்.எச் வில்சன் ஆகியோர் சமஸ்கிருதத்தை முதன்மை மொழியாகக் கொண்டு இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பக் கொள்கையை அடிப்படையாக இந்திய வரலாறை எழுதினர். இதன் படி ஆரியர் வருகைக்கு முன் சிந்துவெளி நாகரிகம் கண்டு பிடிக்கப்பட்டதன் மூலம் தகர்க்கப்பட்டது. காட்டு மிராண்டிகள் என எழுதிய வரலாற்று மனிதர்கள் உலகின் மூத்த ஒழுங்கமைக்கப்பட்ட நகரைக் கட்டியவர்கள் ஆவர். இந்த மனிதர்கள் திராவிடர்கள் இந்திய உபகண்டத்தின் சொந்தக் காரர்கள். நாடோடிகளான ஆரியர் களின் வருகையினாலேயே அவர்கள் ஒடுக்கப்பட்டனர். சிந்து வெளி என்ற நகரை கட்டியெழுப்பியவர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டதனாலேயே ஆரியக் கோட்பாடு ஈடாட்டம் கண்டது.

இந்தியாவைப் போல, இலங்கைத்தீவுக்கும் ஒரு ஆரியக் கோட்பாடு உள்ளது. இந்த ஆரியக் கோட்பாடே இலங்கைத்தீவின் தொல் குடிகளான திராவிடர்களை காட்டு மிராண்டிகளாக்கி வைத்துள்ளது. இந்த பொய் வரலாறை, எம்மை அடக்கி வைத்திருக்கும் ஆரியக் கோட்பாட்டை தகர்க்க எமது

தொன்மை நூலின் குறிப்பின் படி வட இந்தியரான விஜயன் மற்றும் 700 பேரின் வருகைக்கு முன் இந்தத் தீவில் வாழ்ந்த இயக்கர் நாகர் என்ற உயிரினங்கள் ஒழுங்கான மனிதர்களே அல்ல.

தமக்கென தாம் பேச மொழியில்லாதவர்கள். காட்டு மிராண் டிகள், தமக்கென பேசும் மொழியுடன் குடியேற்றங்களை நிறுவிய முதல் மனிதர்கள், விஜயனும் தோழர்களுமான 700 பேரே என்றவாறு தம் ஆரிய வாதத்தை மகாவம்சக் கூற்றுப்படி சிங்கள பௌத்த பேரினவாதம் கூறுகின்றது. பாடநூல்களும் இதனையே கூறுகின்றன. இது இந்தியர்களுள் மிகப் பெரும்பாலானோர் காட்டு மிராண்டிக்குழுவினர். ஆரியர் வருகையின் பின்னரே இந்தியாவில் பண்பாடு உதயமாகியது. ஆரியரின் சமஸ் கிருத பாரம்பரியத்துக்கு புறம் பானவர்கள் காட்டுமிராண்டித் தன் மையிலானவர்கள், பிற்போக்கு நிலையினர் என்றவாறு 1925 வரையிலான இந்திய வரலாறு இருந்தது. ஆரியர்கள் / ஐரோப்பியர்கள் என்றதால் இந்த வரலாறு இப்படி எழுதப்பட்டது.

இது இந்தோ ஆரிய வரலாற்றுக் கொள்கையாகும். இத் தகைய கோட்பாடு 1925 வரலாறு தோண்டப்பட்டு எமது இருப்பு நிறுவப்படவேண்டும். அதற்கான சான்றுகள் எமது மண்ணில் புதையுண்டு கிடக்கின்றன. பல ஆயிரம் ஆண்டுகளின் முன் இந்தத் தீவைச் செழிக்க வைத்து எமது முது மனிதர்கள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை எழுப்பி எம்மை நிறுவவேண்டும். எமது தொன்மை இருப்பை நாம் நிறுவுவதன் மூலம் எமது விடுதலையை முழுமையாக்கிக் கொள்வோம்.

எமது வரலாற்றுச் சான்று களை அறிமுகப்படுத்துவம்.

குரலோன்

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மை நாட்களாக கொழும்புக்குவரும் உயர் தலைவர்கள், முதன் நிலை பிரதானிகள் போன்றோர் வன்னிக்கு வருவதில்லை. அதேசமயம் உதவி வழங்கும் அமைப்புக்களின் இரண்டாம் நிலை பிரதானிகள் அல்லது வெளிநாட்டு அமைச்சர்கள் போன்றோரே வன்னிக்கு வருகின்றார்கள்.

உதாரணமாக கொபிஅனான், கொலின்பவல் உலகவங்கியின் தலைவர் மற்றும் கனேடிய பிரதமர் போன்றோர் வன்னிக்கு வரவில்லை. மட்டுமல்லாது, அன்னை தெரேசாவின் தொண்டு நிறுவனத்தின் தலைவியாய் இருக்கும் சகோதரி நிர்மலா கூட வன்னிக்கு வராமலே போய் விட்டார்.

அதாவது சுனாமிக்கு முன் காணப்பட்ட அதே அரசியலின் நீட்சிதான் சுனாமிக்கு பிந்திய மனிதாபிமான அரசியலிலும் காணப்படுகிறது என்பதே. இப்படி பார்த்தால் தமிழர்கள் தமது சொந்த சேமிப்பை கரைத்துக் கொண்டிருக்கும் அதேசமயம் சுனாமியின் பெயரால் கொழும்பு உதவியைப் பெற்று வீங்கி வருகிறது. ஒருபுறம் தமிழர்களின் சேமிப்பு கரைகிறது. இன்னொருபுறம் கொழும்பின் சேமிப்பும் பேரம் பேசும் சக்தியும் அதிகரிக்கிறது. இதனால் அங்கே டச்நோய் வந்து விடுமோ என்று அஞ்சும் ஓர் நிலை.

இது யுத்த நிறுத்த உடன்படிக்கையின்போது காணப்பட்ட வலுச்சமநிலையை குழப்பக் கூடிய ஓர் அம்சம். இது இப்படியே போனால் தமிழர்கள் சமாதானத்தின் அநாதைகளாகி, விரக்தியுற்று சமாதானத்தில் நம்பிக்கை இழந்தது போலவே சுனாமியின் அநாதைகளும் ஆகிஉலக சமூகத்திடம் நம்பிக்கை இழக்கும் ஓர் நிலை விரைவில் தோன்றக்கூடும். இத்தகையதொரு பின்னணியில் முன்பு ரணிலின் காலத்தில் எப்படி மேற்கு நாடுகளின் பிடி கொழும்பில் ஒப்பீட்டளவில் அதிகரித்து காணப்பட்டதோ அவ்வாறான ஓர் நிலை இப்பொழுது சுனாமிக்கு பின்பு வளர்ச்சி அடைந்துவருவதுபோல தோன்றுகிறது. இப்படி சந்திரிகாவை தமது செல்வாக்கு வலயத்திற்குள் கொண்டுவரும் முயற்சியில் மேற்கு நாடுகள் வெற்றி பெறுமாயிருந்தால் அவரை சமாதானத்தை நோக்கி நிர்ப்பந்திக்கவேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு உண்டு.


இதன்படி, இப்பொழுது சுனாமி அரசியலின் கீழ் சமாதானம் செய்வது என்பது தமிழர்கள் சுனாமியின் அநாதைகளாகிவிடாதபடி பார்த்துக்கொள்வதிலிருந்து தான் அதாவது தமிழர்களுக்கு உரிய உதவிகள் உரிய வழிகள் ஊடாக உரியநேரத்தில் வழங்கப்படுவதிலிருந்தே தொடங்கப்படவேண்டி இருக்கிறது.

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீட்டெடுத்த உடல்களுக்கு முன்னால நாங்கள் இடிஞ்சு போயிருக்க, தெற்கில அந்த கணக்கெடுப்பை வெளிநாடுகளுக்குக் காட்டியே காலியாக் கிடந்த கஜானாவை நிரப்பிது சந்திரிகா அரசு. உடலுகளைக் காட்டி உழைக்கிறதுக்கு வேற பேர் சொல்லிறவை. சே ! அலை அடிச்சுப் பறிச்ச சனத்தின்ர வயித்தில அடிக் கிறதுகள் உருப்படாதுகள்.

வேற ஒரு விசயமும் எனக்கு துண்டற விளங்குதில்லை. எடஈராக் விசயத்தில தான் அமெரிக்கா சம்பந்தப்பட்டதால, ஆவெண்டு ஆராவது பார்த்துக்கொண்டிருந்தால், அதை ஏதோ ஏற்றுக்கொள்ளலாம். அது பெரிய சுப்பர் வல்லரசு. இதென்னடா வெண்டால் பொலிச்சி பிஸ்கற் மாதிரி ஒரு தீவு. அதிலை ஒரு பகுதியை மட்டும் கையில வைச்சிருக்கிற, பெரும்பான்மையை இண்டுவரைக்கும் நிரூபிக்காத 25 கட்சியளின்ர கூட்டுக்கு ஒரு குடுமி. போயும் போயும் அப்பிடி யொண்டுக்கு ஒருத்தர் அடங் கித்தலையாட்டியிருக்கிறார் எண் டால்....

இதென்ன உலகம் பாருங்கோ ? சமாதானத்துக்கான நோபல் பரிசு குடுத்தது உந்த அரசாங்கத் தோட சமாதானமாகப் போகிறதுக் கில்லை. இஞ்ச நாங்கள் ஒரேயடியா ஆயிரமாயிரமாக் குடுத்துப்போட்டு இருக்கிறோம். கடைசி ஒருக்கால் எட்டிப்பார்த்து ஒரு ஆறுதல் வார்த்தை ஆவது!! கொலின் பவல் 4மணித் தியாலத்தில பார்த்து முடிச் சதைப் பார்க்கிறதுக்கு 48 மணித்தியாலம் தேவையோ? தாங்கள் போங்கோவன் எண்டு சொல்லியும், அவர் தான் விரும்பேல்லை எண்டு ஜனாதிபதிச் செயலகம் விட்ட அறிக்கைக்கு, இதுவரைக்கும் மறுப்பறிக்கை விட்டதாவும் தெரியேல்லை. நாட்டில சமா தானம் வந்தாப் பிறகு எங்கட பக்கமும் வந்து ரொபி, சொக்ளேற் தாறதா சமாதானம் சொல்லியிருக்கிறீங்கள். சமாதானத்துக்கான நோபல் பரிசு உங்களுக்கு வலு பொருத்தம் தான்! ஆனாதாழ்மையான ஒரு வேண்டுகோள். தமிழ்ப்பிரதேசங்களைப் பார்க்கவே விடாத அரசாங்கம், நாளைக்குக் கிடைக்கிற உதவியை மட்டும் நியாயமா பகிர்ந்தளிக்கும் எண்டு ஒருக்காலும் எதிர்பார்த்துப் போடாங்கோ !



# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மனக்குமுறல்கள்

கடந்த மாதம் இடம்பெற்ற சுனாமி கடல் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களை விட ஏனையவர்கள் அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் அதிகளவில் உதவிகளைப்பெற்று வருகின்றனர். இல்லாதவர் இருப்பவர் எல்லோருமே சுனாமி அனர்த்த நெருக்கடியை சாட்டாக வைத்து நிவாரணம் தேடும் மக்களாக மாறி வருகின்றனர். இருப்பவர்கள் கூட தம்மை தாமே வறுமைப்படுத்தி ஏழ்மைத் தோற்றமாக உருமாற்றி அனுதாபம் தேடுவதுடன் அகதி என்ற பெயரில் பொருள் அபகரிப்பு வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

சுனாமி பேரலையினால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் இருப்பவர்களில் இரண்டு வகையானவர்கள் உள்ளனர். பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர், பயத்தினால் இடம் பெயர்ந்தவர்கள் இருந்த போதிலும் இழப்பீடுகளைப் பெறுவதில் இருவரும் சமமாக முன் நிற்பதே வேதனைக்குரிய விடயமாகும். தமது மறுவாழ்வை எவ்வாறு ஆரம்பிக்கலாம்." என்ற ஏக்கத்திலுள்ளவர்களிற்கு தம்மாலான உதவிகளை பலர் அமைப்பு ரீதியாக மேற்கொண்டு வருகின்றனர்.

இருந்தவற்றை இழந்து விட்டோம் இனி இழப்பதற்கு என்ன இருக்கின்றது என்ற மன நிலையில் உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களிற்கும் உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளை ஒரு சில அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன.

ஆயன் இல்லா மந்தைகள் போன்று சிதறுண்டு போயுள்ள மக்களிற்கு நேர் வழியைக் காட்டுவதற்கு தகுதியானவர்கள் முன்வர வேண்டும். இலக்குகள் இன்றி, இனி இழப்பதற்கு என்ன இருக்கின்றது என்ற ஆதங்கத்தில் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் எதிர்காலம் என்ன? இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை நாளைக்கு பாடசாலைகளிலும் தேவாலயங்களிலும் இருக்கமுடியும்? நலன்புரி நிலையங்களில் தங்கவைத்து மனித மனங்களை மட்டும் சிதைக்காது மனித வளங்கள் வீணடிக்கப் படுவதுடன் மழுங்கடிக்கப்படுகின்றன.

உறவுகள், உடமைகள், உறைவிடங்களை இழந்தவர்களிற்கு உதவிகள் சரியாக பகிரப்படாமையினால் பாதிக்கப்பட்ட மக்கள் தம்மிடம் இருந்தவற்றையும் தாம் இழந்தவற்றையும் மனக் கண் முன் கொணர்ந்து உள நெருக்கீடுகளிற்கு ஆளாகி வருகின்றனர். இவற்றை நேரடியாக அவதானிக்க முடிகிறது.

உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. அரச அதிகாரிகள் இழப்புக்களின் விபரங்களை சேகரித்து வருகின்றனர். அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டு உதவிநிறுவனங்கள் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர். புதிய வீடமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. மாதாந்தம் 5000 ரூபா பணமும் 375ரூபா முத்திரையும் வழங்கப்படவுள்ளன. இவை யாவும் கடந்த மூன்று வாரங்களாக வெளிவந்த ஊடகச் செய்திகள்.

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களிற்கான உதவிகள் யாவும் அறிக்கை வடிவிலும் அச்சு ஊடகங்களின் செய்தியாகவுமே உள்ளன. வடமராட்சிப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ளவர்களிற்கு தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. பனி கூடாரங்களின் மேல்ப்பகுதியை நனைக்கின்றன. பனித்துளிகள் நித்திரையில் இருப்பவர்கள் மீது வீழ்வதினால் கடல் அலையின் ஞாபகத்தில் பயந்து அதிகாலைகளில் கதறியழும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

மாணவர்கள் அனைவரும் சரிசமமாக பாடசாலை செல்ல வேண்டும் இதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இது சிறையிலுள்ள கைதியின் சிந்தனை, பாதிக்கப்பட்ட மாணவர்களை மையமாகக் கொண்டுள்ளது. கைதியின் மனிதாபிமானமான சிந்தனை இங்குள்ள தனவந்தர்களிற்கோ, பொறுப்பு வாய்ந்த அமைப்புக்களிற்கோ ஏற்படவில்லை. பாடசாலைகளை நலன்புரி நிலையங்களாக பாவித்து வருகின்றனர் இதனால் கடந்த இரண்டு வாரங்களாக பாடசாலைகள் இயங்கவில்லை.

**இரா-வின்**

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமைக்கான காரணம் என்ன? நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களின் கருத்து "எங்களை திங்கட் கிழமைமுதல் பாடசாலைகளிற்கு வருமாறு குறிப்பிடுகின்றனர். ஆனால், அதற்கான வசதிகள் ஏற்படுத்தித்தரவில்லை. பள்ளிக்கூடங்களில் தான் நாங்களே தங்கியுள்ளோம். எங்களிற்கு மாலை நேர பாடசாலையையாவது ஒதுக்கித் தரவேண்டும். நாம் எல்லாவற்றையும் இழந்துள்ளோம் எம்மிடமேயுள்ள எமது கல்வியைத் தொடர்வதற்கான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் ஏற்படுத்தித் தரப் படவேண்டும்." இவை நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களின் கருத்துக்கள். சுனாமிகடல் அலையினால் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்விகற்ற 20 மாணவர்கள் பலியானதுடன் 47 மாணவர்கள் காயமடைந்துள்ளமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

குறிப்பிட்ட சில நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களிற்கு கல்வியைத் தொடர்வதற்கான முன் ஆயத்த கற்பித்தல் செயற்பாடுகள் விடுகதைகளாக, வினாவிடைகளாக, குழுப்போட்டிகளாக இடம்பெற்று வருகின்றன. இவை பாராட்டப்படவேண்டியது மட்டுமன்றி நன்றியுடன் நினைவுகூரத்தக்கதுமாகும். கல்வி முன் ஆயத்த கற்பித்தல் செயற்பாடுகளை கல்வி கற்ற யுவதிகளைக் கொண்டு கியூடெக் நிறுவனமும் ஒரு சமூக நிறுவனமும் மேற்கொண்டு வருகின்றன. இதனால் மாணவர்களது மனங்கள் திறக்கப்பட்டு கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் வழங்கப் படுகின்றன. இவை தவிர இன்னுமொரு நிறுவனதினரால் பாடசாலை மாணவர்களிற்கான சீருடைகள் தைத்து வழங்கப்பட்டு வருகின்றன. முழுமையான கல்விச் சமூகம் தோற்றம் பெறாமையினால் சில நலன் புரிநிலையங்களில் தங்கியுள்ள பெற்றோர்கள் மாண்வர்களது கல்வியில் அக்கறை செலுத்துவதில்லை. இதனை சாட்டாக வைத்து மாணவர்களும் கல்வியைத் தொடர்வதற்கு பின்னடித்து வருகின்றனர். "நோயாளர்கள் மருந்து மாத்திரைகளை உட்கொண்டாலேயே நோயை குணமாக்க முடியும்.

மருந்து கசக்கிறதென அதனை தள்ளிவைத்துவிட்டு தொடர்ந்து நோயாளர்களாக இருக்க யாரும் விரும்புவதில்லை." பாடசாலைகள், உபகரணங்கள் அழிவடைந்துள்ளன. இனி எவ்வாறு,ஏன் பிள்ளைகளை அனுப்ப வெண்டுமென்ற மன நிலையிலுள்ள பெற்றோர்களையே அதிகளவில் காணமுடிகிறது. முழுமையான கல்வியை பெறுவதன் மூலமே இன்றைய மாணவர்கள் இனிவரும் காலங்களில் பூரணத்துவமான முழு மனிதர்களாக மாற முடியும் என்பதை ஒவ்வொரு பெற்றோர்களும் பிள்ளைகளும் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

பொற்பதிக்கிராமத்தில் இருந்து கடல் அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்து குடத்தனை தேவாலயத்தில் தங்கியுள்ள 5 பிள்ளைகளின் தந்தையான பொடிமாட்டீன் ஜெகதீஸ்வரன் எம்முடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள். உடமைகள், தொழில்கள் எல்லாம் கடலோடு போய் விட்டது. இப்ப எங்களிட்டபுதியதொழிலை வாங்குவதற்கோ பழுதடைந்த இயந்திரங்கள், படகுகளை திருத்துவதற்கோ பணமில்லை. இதுவரையில் எங்களிற்கு சமைத்த உணவுகளே வழங்கப்பட்டு வருகின்றன. பல நிறுவனங்கள் வருகிறார்கள் பதிவுகளை மேற்கொள்கிறார்களே தவிர இழப்பீடுகள், புனரமைப்புப் பணிகளிற்கான நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. எங்கட தொழிலாளர்கள் சும்மா, சும்மா குந்தியிருப்பதும் இழப்புக்களை மீட்டுப்பார்ப்பதுமாகவே இருக்கிறார்கள். எங்களிற்கு கடற்றொழில் தான் தெரியும். ஆனால் கடல் இப்படி செய்து போட்டுதே என்று கடலை வெறுத்தால் தொழிலை இழக்க வேண்டும் எனவே எங்களிற்கான உபகரணங்கள்.

வழங்கப்பட்டதும் மீண்டும் கடற்றொழிலுக்கே போகவுள்ளோம். பிள்ளைகளிற்கு பள்ளிக்கூடம் இல்லை. இதனால் பள்ளிக்கூடம் புத்தகங்களோ சீருடைகளோ இல்லை. எங்கட பகுதிப்பள்ளிக்கூடம் சேதடைந் துள்ளது. பாதிக்கப்படாத பள்ளிக் கூடங்களில் மாலை நேரக் கல்வி யையாவது எங்கட பிள்ளைகளிற்கு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென தனது கருத்துக்களை நிறைவு செய்தார் பொடிமாட்டீன்- ஜெகதீஸ்வரன்.


திருமதி மேரியூரியட்- சாள்ஸ் தேவ பாலன். சுனாமி கடல் பேரலையினால் சகோதரி உட்பட ஆறு உறவுகளை இழந்தவர். தனது கருத்துக்களை இவ்வாறு முன் வைக்கிறார். நாங்கள் நம்பி இருந்த கடல் எங்களிற்கு இப்படிச் செய்து போட்டுது. இனி என்னெண்டு தொழிலுக்குப் போறது. எந்த நேரத்தில் எப்ப அலை வரும் எண்டு தெரியாது. சொத்துக்களை உறவுகளை தொழிலைக் கூட இழந்து இப்படியே அநாதையாப் போட்டம். கடற்றொழில் செய்யவும் பயமாய் இருக்கு வேறு என்ன தொழிலைத் தான் செய்யிறது என்ற நிலையில் உள்ளோம். எங்கடப் பிள்ளைகளின்ர நிலைதான் மிகவும் கேள்விக் குறியாகவுள்ளது. பள்ளிக்கூடம் போற பிள்ளைகளைப் பார்த்து எங்களிட்ட கேட்கினம் இனி நாங்கள் என்னெண்டு பள்ளிக்கூடம் போறது புத்தகங்கள், உடுப்புக்கள் எல்லாம் கடலோட போட்டுதெண்டு. கவலைப்படுகினம். எங்கட வீடுகளைப் போய்ப் பார்த்து வளவுகளை துப்புரவாக்கி வருகிறோம். இனிபோகச் சொல்லேக்க போவம். அதுவும் வீடுகள் போட்டுத்தந்தால் தான் போக முடியும் இருக்கிறதற்கு ஒன்றுமில்லை. என தனது கருத்துக்களை நிறைவு செய்தார் திருமதி மேரியூபியட்- சாள்ஸ் தேவபாலன்.

குடத்தனைவடக்கு கடற்றொழிலாளர்கூட்டுறவுச் சங்கச் செயலாளர் அருணாசலம்-அருந்தவநாதன் தமது கிராமம் தொடர்பாக பகிர்ந்து கொண்டவற்றை வாசகர் களிற்காகத் தருகிறோம். எங்கட தொழிலாளர்களில் அநேகமானோரின் தொழில்கள்அலையோடு போய்விட்டது. எமக்கான மாற்றுத்தொழில்களை ஏற்படுத்தித்தருவதாகச் சொல்லி இருக்கினம், இனி நடக்கிறதற்கு மேல் நடந்தால் கண்டு கொள்ளுவம். எமது கிராம மக்களிற்கு இதுவரையில் ஒருவரிற்கு ஒன்றரைக் கிலோ அரிசி மட்டுமே வழங்கப்பட்டுள்ளமை மனவேதனைக்குரிய விடயம்.



பருத்தித்துறை கடற்றொழிலாளர் சமாசம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 500ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கியுள்ளது. தொழிலாளர்களில் அநேகமானோர் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இனி நாங்கள் தொழில் செய்வமோ...? தொழில் செய்துகொண்டிருக்கேக்க இப்படி ஒருநிலைமை வந்தால் என்ன செய்கிறதென்ற மனநிலையில் உள்ளனர். எமதுகிராமத்தொழிலாளர்களிற்கு உதவிகளை வழங்க வேண்டும் அதுமட்டுமன்றி தொழிலாளர்களிற்கு உளநல ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள முன்வரவேண்மென தனது கருத்துக்களை நிறைவு செய்தார் அருணாசலம்- அருந்தவநாதன்.

சுனாமி கடல் பேரலையினால் பாதிக்கப்பட்டு நாளாந்தம் உள ரீதியாக இறந்து கொண்டிருக்கும் மக்களின் மன நிலைகள் மாறுபட்டுள்ளன. இவர்களிற்கென வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தொழில்களிற்கான உபரணங்களை வழங்கி வழமையான செயற்பாடுகளிற்கு பாதிக்கப்பட்டவர்களை அழைத்துச் செல்வதன் மூலமே மீண்டுமொரு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கமுடியும். இதனை யார் எப்படி செய்வார்கள் என்ற மனநிலையே மக்களிற்கும் தன்னார்வத் தொண்டர்களிற்குமுண்டு.



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 06


### பகுதி -32

எமது புரிந்து கொள்ளுதல்களில் இருந்த இந்த இடை வெளிகளை நிரப்ப முடிந்தால் அது மிகவும் ஆர்வ மூட்டுவதாக இருக்கும்; ஆனால் நானும் அவனது தாயாரும் துருவி ஆராய்தல் எதுவும் இருக்காது என்ற உடன் பாட்டைச் செய்து கொண்டிருந்தோம். ஏதோ ஒருநாளைக்கு, டிப்ஸின் வளர்ச்சி பற்றி, தான் அறிந்திருப்பவற்றை, என்னோடு பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு, பாதுகாப்பான உணர்வொன்றை அவள் பெறக்கூடும் என்று எதிர்பார்ப்பதை மட்டுமே என்னால் செய்யமுடிந்தது. அதையும்விட, உணர்வு ரீதியான, சமூக ரீதியான முதிர்ச்சியோடு இணைந்திருக்காத அறிவு சார்ந்த சாதனை போதுமானது அல்ல என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. தன் குடும்பத்தவர்மீது டிப்ஸ் கொண்டிருக்கும் அதிருப்திக்கு இதுதான் காரணமா? அல்லது டிப்ஸைப் புரிந்து கொள்ள முடியாததால் டிப்ஸைப் பற்றி அவனது தாயார் ஒரு அசௌகரிய உணர்வையும் பயஉணர்வையும் கொண்டிருக்கிறாரா? டிப்ஸுக்கும் அவனது குடும்பத்துக்குமிடையேயான உறவுகள் இவ்வளவு மோசமான நிலையில் இருப்பதற்கு சிக்கலான பல காரணங்கள் இருக்கும் சாத்தியங்கள் இருந்தன. சூப்பிப் போத்தலை உறிஞ்சுவது, குழந்தைத்தனமான நடத்தை, மற்றும் துல்லியமானதும் கிட்டத்தட்ட கட்டாயப் படுத்தும் ஆற்றலுள்ள அறிவு சார்ந்த ஆற்றுகைப்படுத்தல்கள் முதலியவற்றினிடையே டிப்ஸ் மாறிமாறிசென்று கொண்டிருக்கையில், எனது மனதினூடாக மின்னல் வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்த சில கேள்விகளுக்கான விடைகளில் மேலும் சிலவற்றை யாவது தெரிந்து கொள்வது மிகவும் உதவிகரமானதாக இருக்கும்.

டிப்ஸ் கதிரையில் இருந்தபடி, சூப்பிப் போத்தலை திருப்தியுடன் உறிஞ்சிக் கொண்டிருந்தான். பரபரப்பு எதுவுமில்லாமல் இருந்தான். அவனது கண்கள் என்மீது நிலை கொண்டிருந்தன. அவனது மனத்தினூடாக பதில் கிட்டாத எந்தக் கேள்விகள் எழுந்து கொண்டிருக்கலாம் என்று நான் எண்ணிக் கொண்டேன். திடீரென்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்ட அவன், சூப்பியைக் கழற்றி விட்டு, நேரடியாக போத்தலிலிருந்தே நீரைக் குடித்தான். சிறிதளவு நீர் தரையில் சிந்தியது.

சுவரில் இருந்த மின் அழைப்பு ஒலி எழுப்பிகளைச் சுட்டிக் காட்டி "அழைப்பு மணியா?" என்று கேட்டான்.

"ஓம். அழைப்பு மணி போலத்தான்" என்றேன். சூப்பியை எடுத்துக் கொண்ட அவன் பார்வையை என்மீது நிலைக்கவிட்டபடி சூப்பியை சப்பிக்கொண்டும் சூப்பிக்கொண்டும் இருந்தான். இறுதியாக எனது காலடிகளை நோக்கி கையை நீட்டிக் காட்டினான். நான் சிவப்பு நிற றப்பர் செருப்புகளை போட்டுக் கொண்டிருந்தேன். இன்றைக்கு டிப்ஸ் தன் பூட்சுகளை அணிந்திருக்கவில்லை. ஒரு விரலை என்னை நோக்கி ஆட்டினான்.



"என்ர செருப்புகள கழட்டி விடுங்கோ" என்றான். என்ர செருப்புகள நான் கழட்டி விட வேணுமெண்டு நீங்கள் நினைக்கிறீங்களோ?" என்று அவனைக் கேட்டேன்.

"ஓம்....வீட்டுக்குள்ள....எப்பவும்" பதில் சொன்னான். நான் கீழே குனிந்து எனது செருப்புகளை கழற்றி ஒரு மூலையில் வைத்தேன். "இப்ப சரியா?" என்று




கேட்டேன்

"ஓம்" என்றான் அவன்.

சூப்பியை திரும் பவும் போத்தலில் மாட்டிவிட முயற்சி செய்தான். அவனால் முடியவில்லை. அவன் அதை என்னிடம் கொண்டு வந்தான். "எனக்கு ஏலாது" என்றவன் "எனக்கு உதவி செய்யுங்கோ" என்றான். "சரி நான் உதவிசெய் யிறன்" என்றுவிட்டு சூப்பியை மாட்டிக் கொடுத்தேன். போத்தலைக் கையில் வாங்கியவன் உடனேயே சூப்பியைக் கழற்றிவிட்டு, போத்தலில் இருந்த நீரை, கழிவு நீர் தொட்டியினுள் ஊற்றினான். என்னை நோக்கி திரும்பியவன், நான் பார்க்கும்படியாக வெறும் போத்தலைத் தூக்கிக் காட்டினான்.

"வெறும் போத்தில்" என்றான். "ஓம் நீங்கள்தான் வெறுசாக்கினனீங்கள்". கழிவு நீர் தொட்டியருகே வெறும் போத்தலை உடலோடு அணைத்துக் கொண்டு, என்னைப் பார்த்தபடி நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தான். நானும் அவனைப் பார்த்தபடி, அவனே ஏதாவது செய்யட்டும் அல்லது பேசட்டும் எனக் காத்துக் கொண்டிருந்தேன். அல்லது அங்கேயே நின்ற படி என்னைப் பார்த்துக்கொண்டே சிந்திக்கப் போகிறேன் என்று அவன் முடிவு செய்தால், அப்படியே செய்யட்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

"நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான். "நீங்கள் யோசிக்கிறீங்களா?"

"ஓம் நான் யோசிக்கிறன்"

என்ன யோசிக்கிறன் என்று சொல்லும்படி நான் அவனைக் கேட்கவில்லை. ஒரு கேள்வி- மறுமொழி அப்பியாசத்தைவிட அதிகமான ஒன்றை அவன் பட்டறிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன். ஏதோ ஒரு வகை நடத்தைப் பாணியினுள் கட்டுண்டு போகாமல், எமது உறவில் தனது ஒட்டுமொத்த சுயத்தையும் உணரவேண்டும், பட்டறிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன். அவனது பலங்கள், பலவீனங்கள், விருப்பு வெறுப்புகள், அவனது பயங்கள், துணிகரங்கள், அவனது குழந்தைத் தனமான விருப்புகள், அவற்றைவிட அதிக முதிர்ச்சியான அவனது ஆர்வங்கள் என பல அம்சங்களாலான நபர் என்பதை அவன் அறிய வேண்டும் என்று நான் நினைத்தேன். வேறு ஆட்களுடனான உறவாடலில், தனது இயலுமைகளைப் பயன் படுத்துவதற்கான முன்முயல்வைக் கைக்கொள்ளும் பொறுப்பை, பட்டறிவு மூலம் அவன் தெரிந்து கொள்ளவேண்டும் என நான் விரும்பினேன். புகழுதல், கருத்துக் கூறுதல், கேள்விகள் மூலமாக, அவனை குறிப்பிட்ட ஒரு மார்க்கத்தில் திருப்பிவிட நான் விரும்பவில்லை. அவசரப்பட்டு முடிவுகளை எடுத்தால், இந்த குழந்தையினுடைய ஒட்டு மொத்த ஆளுமையின் பொருளை நான் முழுமையாகவே தவற விடக்கூடும். டிப்ஸ் அங்கேயே நின்றபடி சிந்தித்துக் கொண்டிருந்த போது நான் காத்துக் கொண்டிருந்தேன். மிக மிக மெலிதான புன்னகையொன்று அவனது முகத்தில் தோன்றி மறைந்தது.

(தொடரும்....)

மீண்டெழும் வனப்புறு நகரில் வாடிக்கையாளர் தேவை அறிந்து
புதிய ஆண்டில் ஓர் புதிய உதயம்

அம்மன் கட்டடப் பொருள் வாணிபம்

யாழ்சாலை, தொ. பே: 021-2285852, 021-2285077 கிளிநொச்சி.

- தரமும் உறுதியும் மிக்க கூரைத்தகடுகள்.
- உறுதியான கட்டட ஆக்கத்திற்கான சிமெந்து வகைகள்.
- இறுதிவரை பலம் தரும் உறுதியான இரும்பு வகைகள்.
- வணப்பூட்டும் வர்ணப் பூச்சுக்கள்.
- தேவைக்கேற்ற கட்டட உதிரிப்பாகங்கள்.

அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் உங்களுக்கு 24.01.2005 திங்கட்கிழமையிலிருந்து தர தயாராகின்றனர்.

அம்மன் வாணிபத்தினரின் மற்றொரு சிறப்பு நகர்வு

உலகப் புகழ்வாய்ந்த "ஏசியா" ஈருருளிகளை உங்களுக்காக இறக்குமதி செய்து வழங்குகின்றனர்.

ஏசியா ஈருருளிகள் உன்னத பயணத்திற்கும் உறுதியான பயன்பாட்டுக்கும் உகந்தவை.

ISI தரச்சான்றிதழ் பெற்றவை

ஏசியாவின் ஏழு கேள்விகள் சிறப்புப் பரிசுத்திட்டம்

ஏசியா சைக்கிள் ஒன்றைத் கொள்வனவு செய்து சிறப்புப் பரிசை பெறும் தெரிவாளராகுங்கள்.

பரிசுக்கான விதிமுறைகள்:-

ஈருரளி கொள்வனவு செய்யும் போது வழங்கப்படும் "ஏசியாவின்" ஏழு கேள்விகள் அட்டைக்குரிய விடைகளை எழுதி உங்கள் முகாமையாளரிடம் கையளியுங்கள்!


ஒவ்வொரு 10 ஈருருளிகள் விற்பனை செய்யப்பட்டதும் அட்டைகள் குலுக்கலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ஏழு கேள்விகளுக்கும் சரியான விடையெழுதப்பட்ட அட்டைகள் குலுக்கலில் சேர்க்கப்படும்.

குலுக்கலில் தெரிசெய்யப்படுபவருக்கு ரூபா 1500/= பெறுமதியான காசோலை வழங்கப்படும்.

இக்காசோலையை அம்மன் நிறுனத்தினரால் குலுக்கப்படும் ஈருருளி உதிரிகள் வாணிபத்தில் கொடுத்து தேவையான ஈருருளி உதிரிகளை பெற்றுக்கொள்ளலாம்.

அம்மன் வாணிப நிறுவன பணியாளர்களோ அல்லது அவரது குடுபத்தினரோ இச்சிறப்புப் பரிசுத்திட்டத்தில் பங்குபற்றமுடியாது.





(5469)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

# பாவலன் பதில்கள்



*பாவலா!*

*சுனாமி S.P திஸநாயககவை பெரிதும் பாதித்து விட்டது என நான் நினைக்கிறோன் நீர் என்ன நினைக்கின்றீர்.*

*சு.வசந்தன்,*
*கிளிநொச்சி.*

திஸநாயக்கவை பாதித்தது சுனாமி அலையல்ல.... சந்திரிகா அலையே....

*பாவலனே!*

*படித்ததில் பிடித்த வரி ஒன்று கூறுங்கள்?*

*ந.கஜீபன்,*
*முறிப்பு,*

குறள் வரிகள் அனைத்துமே பிடிக்கும்.

*பாவலா!*

*வெளிநாடுகளில் இயந்திரமாய் உழைத்து அனுப்பும் பணத்தை இங்குள்ள சிலர் ஆடம்பரம் என்று கூறிக் கொண்டு அசிங்கமாக திரிகிறார்களே?*

*க.ஞானம்பிகை,*
*புதுக்குடியிருப்பு.*

வியர்வையின் மதிப்பை உணராதோர்...இரவல் புடவையில் அழகுகாட்டுவோர்...ஒட்டுண்ணி வகையைச் சார்ந்தவர்கள்... இவர்கள்தான்....!

*பாவலா!*

*தமிழீழத் தேசிய தலைவர் இறந்துவிட்டதாக அரச வானொலி தெரிவித்திருந்தது. ஆனால் பத்திரிகை ஒன்றில் தலைவர் நோர்வே தூதுக் குழுவை சந்திக்கவுள்ளார் என்ற செய்தியையும் பார்த்தேன் எப்படியிருக்கின்றது செய்திகள்?*

*நா.ரேணுகா,*
*நெடுங்கேணி.*

அவை செய்திகள் அல்ல... செய்'தீ'கள் வதந்'தீ'பரப்பும் வம்பர்களை நம்புபவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள்....ஆனால் 'கெட்டிக்காரன் புழுகு எட்டேநாள்'தான் என்பது வெட்டவெளிச்சமாகி விட்டதே.

*பாவலா!*

*பெண்களுடம் வம்பு பண்ணும் ஆண்களை பற்றி?*

*ச.அப்பன்,*
*வள்ளிபுனம்.*

வேலையற்ற வீணர்கள் பற்றி என்ன சொல்வதாம்...?

*பாவலா!*

*சர்வதேச பிரதிநிதிகள் ஒவ்வொருவராக கிளிநொச்சி வந்துபோகும் போதெல்லாம் அரசுக்கு தனது திட்டங்கள் ஒவ்வொன்றாக உடைந்துபோகும் போல் இருக்குமே?*

*ச.ஜெயா,*
*வற்றாப்பளை.*

ஆக்கபூர்வமான எந்தத் திட்டத்தை எவர் செய்தாலும் உடைந்து போகாது காலம் கடந்தேனும் நன்மையையே தரும். இது நியாய பூர்வமற்ற திட்டங்கள்தானே...எப்படிப் போனால்தான் என்ன.

*பாவலா!*

*கிழக்கு நலன்புரி நிலையங்களில் அதிரடிப்படையின் அத்துமீறலுக்கு என்ன செய்யலாம்?*

*க.ஜீவா,*
*தேவிபுரம்.*

அடிப்படை இல்லாத படை அத்துமீறத்தான் செய்யும்... காலம் வரும்போவது பதிலடி கொடுப்பதைத்தவிர மாற்றுவழியேதுமில்லை.

*பாவலா!*

*அஞ்ஞானம்-விஞ்ஞானம் எதை நம்புவது?*

*ப.கீர்த்திகா,*
*மல்லாவி.*

மெய் ஞானத்தை மட்டுமே....!

*பாவலா!*

*உண்மையும்- சந்திரிகாவும் எனும் தலைப்பில் நூல் ஒன்று எழுதவுள்ளேன் முன்னுரை எழுதுவீர்களா?*

*வோ.கேனுஷா,*
*கிளிநொச்சி.*

அதற்கு முன்னுரையே தேவையில்லை....பொய்யுரைதான் தேவை அதை என்னால் எழுதவே முடியாது.

*பாவலா!*

*தற்கால சினிமா, கலாசாரத்திற்கு எந்தளவு பங்களிப்புச் செய்கின்றது?*

*மோ.வோஜினி,*
*முள்ளியவளை.*

கலாசாரக்கொலைக்கு பெருமளவில் முழுமையான பங்களிப்பை அதுதான் செய்கிறது.

*பாவலா!*

*வெளிநாட்டு நிதிகள் அரசுக்கு வந்துகுவிகின்றன ஆனால் பாதிக்கப்பட்ட எமக்கு எப்போது கிடைக்கும்?*

*ம.கோமதி,*
*கட்டுடை.*

நிதி நீதியாக பகிரப்படும் போது, வெளிநாட்டு அரசுகள் தரும் நிதியை உள்நாட்டு அரசு நீதியாகப் பங்கீடுமா என்பது விடைதெரியாத கேள்வியே!

*பாவலா!*

*சுனாமியால் இறந்தவர்களின் காதையும் கழுத்தையும் பார்த்துவிட்டு உறவு கொண்டாடும் ஆசாமிகள் பற்றி?*

*வ.சுகந்தா,*
*சங்கானை.*

பொன்னகை பார்த்து புன்னகை பூக்கும் புல்லர்கள்...

*பாவலா!*

*மனிதாபிமானத்தை அரசியல்வாதிகளிடம் எதிர்பார்க்கலாமா?*

*வோ.கேனுஷன்.*
*முள்ளியளை.*

தேசாபிமானம் இல்லாதவனிடம் மனிதாபிமானத்தை எதிர்பார்க்கலாமா?

# தெருப்பேச்சு



"நீங்க சொன்னா நம்பமாட்டீங்க நம்ம ஊரில இவ்ளோ ஜனங்ககஷ்டப்படுது யாரும் வந்து பார்க்கிறதில்ல. இந்தாப் பாருங்களேன் கூட்டத்துக்கு வாங்கன்னு சொல்லி வீட்டுக்கு வீடாப்போய் சொல்லியும் வரல்லையே...ச்சக் என்ன மனுசங்கப்பா ஒரு நிவாரணம் பதியுறாங்க, எதுக்கெண்டா சாமான் குடுக்கிறாங்கன்னு ஒரு ஆளிட்ட சொல்லிடுங்க யப்பா... நம்மள இடிச்சுக்கிட்டுப் பாயுவாங்கதா.... புள்ள மல்லிகா வீட்டுப்பக்கம் சொன்னியா?... அப்புறம் அங்கால சின்னம்மாகிட்ட சொல்லி அந்த ஒழுங்க பூராச் சொன்னது வரட்டும் இதுங்களுக்கு, விதானை பாருங்க வந்தா முன்னுக்கே வந்துடுவாங்க. நம்ம ஆர்டியெஸ் காறங்கதானே. ஒன்பது மணிக்கு கூட்டமென்னு சொன்னா பத்து மணிக்கு சரி வரணுமே..ம்... இப்படித்தாங்க இங்க ஒரு உற்பத்திக் குழுவென்று போனா வருவாங்களா? தேசிய எழுச்சிப் பேரவைங்கன்னாலும் இதுதான். சொன்னா நம்ப மாட்டிங்க கிளிநொச்சியில ஒரு கூட்டத்துக்கு பஸ்ஸிலவைசிக் கூட்டிப்போனேங்க இருங்க புத்தகத்தில குறிச்சு வெச்சிருக்கோ இருவத்திரெண்டு பொம்பளையாளுங்களும் பத்து ஆம்பலையாளுங்களும் வந்தாங்க. அட அவுங்கசரி இப்ப வரலாமே....

சரி...இஞ்சயுள்ள குழுக்கள் கூடி ஆக்களை வரப்பண்ண வேணும் அந்தந்தக் குழுத்தலைவர்மார் பொறுப்பெடுத்தா சனம்வரும். மக்களெண்டா இப்பிடித்தான் ஆர் ஆர்டியெஸ்தலைவர்?

நாந்தாங்க

உற்பத்திக்குழுத்தலைவர்?

நான் தாங்க

தேசிய எழுச்சிப் பேரவை?

செயலாளர் நானுங்க

ஊரக புனரமைப்புக்குழு?

நான் தாங்க அதுக்கும் தலைவர்.

●●●

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-104



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள்-104**

......................................................................
......................................................................
......................................................................
......................................................................

பெயர் : ..................................................
முகவரி : ..................................................
..................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -103



**சி.ஜெயபாபு,**
**59, யாழ்சாலை,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*சொந்தம் பந்தம் சொத்துக்களை இழந்தாலும்*
*கடல் தாயே நீயும் எங்கள் சொத்து-இனி*
*நித்தம் உன்மடி மீதேறி வருவோம்-எங்கள்*
*இருண்ட வாழ்வில் ஒளிவிளக் கேற்று.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*கடலலையின் சீற்றத்தால் காயமுற்றும்*
*நிலையிழந்து போன தம் வாழ்விற்காய்*
*தொடர்ந்தும் முயற்சியுடன்*
*துயர் படிந்த மானிடர்கள்.*

ச.சிவனேஸ்வரி,
புளியங்குளம்.

*கடலன்னை மடியேறி உப்பு நீரில் உறவாடி*
*விரித்தவலை தான் நிரப்பி-நாம்*
*நித்தம் சேர்த்துவைத்த உடமையுடன்*
*உழைத்து நின்ற உயிர்களையும் பறித்ததிந்த சுனாமி.*

இ.ராஜன்
கிளிநொச்சி.

*ஆழிப்பேரலை கண்டு அஞ்சிடலாமோ?*
*இயற்கை அன்னை கடலுண்டு.*
*இறைவன் தந்த கரங்களுண்டு-அனைவரும்*
*ஒன்றாய்கூடி அயராது உழைத்திடுவோம்.*

ம.அமலினி,
புதுக்குடியிருப்பு.

*ஆமி எம்மை அழித்தவேளை களத்தில் நின்றோம்*
*சுனாமி உறவை பிரித்த போதும் தொழிலை தொடங்குகின்றோம்*
*பேய் அரசை நம்பி எந்த பயனும் இல்லை-எம்*
*அண்ணன் படை உள்ளவரை மீனவர்க்கு துயரம் இல்லை.*

A.பிரபா,
வடமராட்சி.

*புயல்தனில் புதைகுழியில் புகுந்துகொண்ட-மீனவரும்*
*புரட்சியை மீண்டும் ஏற்படுத்தி புதுயுகத்தை நல்கிடவும்*
*வருவாயை வேண்டிவலை தன்னை-வீசிடவும்*
*உடலும் உள்ளமும் உறைந்துதான் போய்விட்டது.*

கி.சிவகுமார்,
பரந்தன்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு







இயற்கை அனர்த்தத்தினை அடுத்து தமிழர் பகுதிக்கு பல்வேறு நாடுகளின் ராஜதந்திரிகளும் விஜயம் செய்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிட்டதுடன் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களையும் சந்தித்து பேசிய போது எடுக்கப்பட்ட படங்களைக்காணலாம்



முல்லை நகரப்பகுதியில் தமிழீழக்கடற்படைத்தளபதி கேணல் சூசை அவர்களுடன் வெளிநாட்டு ராஜதந்திரிகள்.





பொங்குதமிழ் நான்காம் ஆண்டு நிறைவு நிகழ்வு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற போது




உங்கள் இன்றைய தெரிவுக்கு...

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாரிகள்
பட்டுசாரிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

**KUMARAKURU**
*Textile & Fancy House*
Yarl Road, Kilinochchi.

**ExpoAir** எக்ஸ்போ எயார்

*your friend in the skies* வான்வெளியில் உங்கள் நண்பன்



யாழ் - கொழும்பு
விமானப்பயணத்திற்கு அழையுங்கள்.

யாழ்ப்பாணத்தில்:021-2223891/6297, 0772348888/2349999,
கொழும்பில்:0112372952/953, வெள்ளவத்தையில்: 0112360290/291.

e-mail- jaffna@expoavi.com e-mail- reservations@expoavi.com



இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது